# புதிய ஜனநாயகம்

ஜூன் 2014
ரூ.10.00



# காவி இருள் கிழிப்போம்!

# “பன்னாட்டுக் கம்பெனிகள் – பார்ப்பன சர்வாதிகாரத்தை வெட்டி வீழ்த்துவோம்! உண்மையான ஜனநாயகத்திற்கான மாற்று அதிகார அமைப்புகளைக் கட்டி எழுப்புவோம்!!”

## – புரட்சிகர அமைப்புகளின் மே தினப் போராட்டங்கள்




பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆர்ப்பாட்ட நாளான மே-1 அன்று ‘‘பன்னாட்டுக் கம்பெனிகள் - பார்ப்பன சர்வாதிகாரத்தை வெட்டி வீழ்த்துவோம்! உண்மையான ஜனநாயகத்திற்கான மாற்று அதிகார அமைப்புகளைக் கட்டி எழுப்புவோம்!’’ என்ற மைய முழக்கத்தை முன்வைத்து, ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகளும் அதன் தோழமை அமைப்பான ம.உ.பா.மையமும் இணைந்து தமிழகத்தில் ஒன்பது மையங்களில் பேரணி - முற்றுகை - ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

ஓசூர், புதுச்சேரி, இராசபாளையம், பென்னாகரம் ஆகிய பகுதிகளில் மே தினப் பேரணிக்கு போலீசார் தடைவிதித்தனர்.

இராசபாளையத்தில் மே தினப் பேரணிக்கு அனுமதி கேட்டு போலீசு நிலையம் சென்ற தோழர்களை ‘‘கூட்டம் நடத்த மாட்டோம்’’ என எழுதித் தருமாறு மிரட்டி, இதற்கு உடன்பட மறுத்தத் தோழர்களைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கவும் செய்தனர். அதே போலீசார் மே-1 அன்று ராம்கோ முதலாளி ராமசாமி ராஜாவின் பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாக எஸ்.வி.சேகரின் ‘‘அல்வா’’ நாடகம் நடத்துவதற்கு அனுமதி யளித்து முழுப்பாதுகாப்பை வழங்கினர். பு.ஜ.தொ.மு.வின் தொடர் முயற்சிகளுக்குப் பிறகு இராசபாளையம் நான்கு சாலை சந்திப்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ராம்கோ முதலாளியையும், அதற்கு ஏவலாள் வேலை பார்க்கும் போலீசையும் அம்பலப்படுத்திப் பேசத் தொடங்கிய வுடனேயே ஆர்ப்பாட்டத்தை முடித்துக்கொள்ளுமாறு போலீசார் மிரட்டினர். மீறி நடத்த முனைந்த தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஓசூரில் மே தினத்தில் கூடசங்கம் தொடங்கி கொடி ஏற்றக் கூடாதென்று போலீசை கொண்டு மிரட்டியது, கார் போரண்டம் யுனிவர்சல் ஆலை நிர்வாகம். இம்மிரட்டலை மீறி, கார்போரண்டம் யுனிவர்சல் ஆலைத் தொழிலாளர் சங்கம் பு.ஜ.தொ.மு.வுடன் இணையும் விழா நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, செங்கொடிகளை ஏந்தியபடி இருசக்கர வாகனங்களில் அணிதிரண்ட தொழிலாளர்கள் நகரில் அடுத் தடுத்து பு.ஜ.தொ.மு.வின் கிளைச்சங்கங்களில் கொடியேற்றிய நிகழ்வு அறிவிக்கப்படாத பேரணியாக அமைந்தது.

புதுச்சேரியில் போலீசின் பல்வேறு இழுத்தடிப்புகளுக்குப் பின்னர் நடத்தப்பட்ட பேரணி - ஆர்ப்பாட்டத்தில் கொடிக் கம்பின் நீளம் எவ்வளவு இருக்க வேண்டும் என்பது உள்ளிட்டு 14 நிபந்தனைகளை விதித்தது, போலீசு.

தருமபுரி-பென்னாகரம் வட்டத்தைச் சேர்ந்த வி.வி.மு.வினர் பு.மா.இ.மு.வுடன் இணைந்து பென்னாகரம் பி.டி.ஓ. அலுவலகம் எதிரிலிருந்து போலீசின் தடையை மீறிப் பேரணியாகச் சென்று பென்னாகரம் பேருந்து நிலையத்தில் மே தின ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.




சென்னை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டப் பகுதிகளைச் சேர்ந்த பு.ஜ.தொ.மு.வினர் தோழமை அமைப்பு களுடன் இணைந்து சென்னை பூவிருந்தவல்லியில் குடியிருப்புகள் நிறைந்த பகுதியில் பேரணியாகச் சென்று, பூவிருந்தவல்லி பேருந்து நிறுத்தம் அருகில் மே தின ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் விசைத்தறி உரிமையாளர்களின் கூலி உயர்வுப் போராட்டம், நூல் விலையேற்றம், மின்வெட்டு, மின்கட்டண உயர்வு ஆகியவற்றின் காரணமாக ஒரு இலட்சத்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 29 இதழ்: 8
ஜூன் 2014

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# காவியிருளில் மறைந்திருக்கும் மூலதனத்தின் சர்வாதிகாரம்!

மதச்சார்பின்மையின் மீதும் ஜனநாயகத்தின் மீதும் பற்று கொண்டவர்கள் அனைவருக்கும் தேர்தல் முடிவுகள் அதிர்ச்சியையே தந்திருக்கின்றன. எனினும் சற்று நிதானமாகச் சிந்தித்துப் பார்த்தால் இப்படி ஒரு முடிவின் தவிர்க்கவியலாமையை நாம் புரிந்து கொள்ள முடியும். தேர்தல் பிரச்சாரத்தின் முதல் சுற்றிலேயே தான் படுதோல்வி அடையவிருப்பதை காங்கிரஸ் கட்சி ஏறத்தாழ ஒப்புக் கொண்டு விட்டது. ஒருவேளை பாரதிய ஜனதா கட்சிக்குப் பதிலாக மாநிலக் கட்சிகள் பெரும்பான்மை பெற்று கூட்டணி ஆட்சி அமைந்திருந்தால், அது விரைவிலேயே பதவிச் சண்டைகளால் தன்னைத் தானே கவிழ்த்துக் கொண்டு, ''வலிமையான நிலையான மோடியின் ஆட்சி'' வருவதற்கு இப்போது உள்ளதைக் காட்டிலும் உறுதியான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்திருக்கும்.

பாரதிய ஜனதாக் கட்சி தனிப்பெரும்பான்மை பெற்றிராமல், அ.தி.மு.க., பா.ம.க., தெலுங்குதேசம் உள்ளிட்ட ''மதச்சார்பற்ற'' கட்சிகளின் ''தயவில்'' ஆட்சி அமைத்திருந்தால் அக்கட்சிகள் மோடிக்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கும் கடிவாளம் போட்டிருப்பார்கள் என்று நாம் நம்புவதற்கு இடமிருக்கிறதா? குறைந்தபட்ச செயல்திட்டமொன்றை அறிவித்து இயங்கிய ''மிதவாதி'' வாஜ்பாயி ஆட்சியில்தான் இந்துத்துவ பாடத்திட்டத் திணிப்பு முதல் கார்கில், நாடாளுமன்றத் தாக்குதல், கிறித்தவர்கள் மீதான தாக்குதல், குஜராத் படுகொலை வரையிலான அனைத்தும் அரங்கேறின. ஆகவே, மாநிலக் கட்சிகள் எனப்படுபவை தாங்கள் அளிக்கும் ஆதரவுக்கு விலையாக அமைச்சர் பதவிகளையோ, இன்ன பிறவற்றையோ கேட்டிருக்குமேயன்றி, இந்துத்துவக் கொள்கையை விட்டுக் கொடுக்கும்படி மோடியிடம் கேட்டிருக்கப் போவதில்லை. மொத்தத்தில், ஆட்சியதிகாரத்தில் அமர விடாமல் மோடியைத் தடுப்பதற்கான சாத்தியக்கூறு எதுவும் நாடாளுமன்ற அரசியலின் வரம்புக்குள் இல்லை என்பதே உண்மை.

காங்கிரசைப் பொருத்தவரை அது பாரதிய ஜனதாவின் பார்ப்பன பாசிச நடவடிக்கைகளுக்கு எல்லாக் காலங்களிலும் துணை நின்றிருக்கிறது; மோடி, அத்வானி உள்ளிட்ட எல்லாக் குற்றவாளிகளையும் காப்பாற்றி விட்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. மாநிலக் கட்சிகளோ பல சந்தர்ப்பங்களில் பாரதிய ஜனதாவுடன் கூட்டு சேர்ந்திருக்கின்றன. ''மதச்சார்பின்மை'' என்பது இக்கட்சிகளுடைய முகமூடியே அன்றி முகமல்ல என்பதால், இவர்களை மதச்சார்பின்மையின் காவலர்களாக எண்ணி மயங்குவதிலோ, இவர்கள் மோடியைக் கட்டுப்படுத்தி விடுவார்கள் என்று கனவு காண்பதிலோ பொருளேதும் இல்லை.

மேலும், மோடியின் வெற்றியை ''மதச்சார்பின்மைக்கு ஆபத்து'' என்ற கோணத்தில் மாத்திரம் அணுகுவதும் தவறு. இது காங்கிரசின் மிதவாத இந்து மதவாதத்தையும், பிற கட்சிகளின் மதச்சார்பின்மை வேடத்தையும் காங்கிரசு உள்ளிட்ட எல்லாக் கட்சிகளாலும் அமல்படுத்தப்படும் மறுகாலனியாக்க கொள்கைகளையும் மறைமுகமாக அங்கீகரிப்பதாகிவிடும்.

இந்தியத் தரகு முதலாளிகள், தங்களது மறுகாலனியாக்கக் கொள்ளையைத் தீவிரமாகவும் தடையின்றியும் நடத்துவதற்கான உத்திரவாதமாகவும், எதிர்ப்புகளைப் பிளந்து அழிக்கும் ஈட்டியாகவும் பார்ப்பன பாசிச மோடியை மதிப்பிடுகிறார்கள். மோடியின் ஆட்சி என்பது பார்ப்பன பாசிசத்தின் வழியே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் மூலதனத்தின் சர்வாதிகாரம். மோடியின் இந்த உண்மை முகத்தைப் புரிந்து கொள்ளத் தவறியதனால்தான் மன்மோகன் சிங்கின் மறுகாலனியாக்க கொள்கைகளால்

பாதிக்கப்பட்டு குமுறிக் கொண்டிருந்த மக்கள், காங்கிரசின் மீது ஏற்பட்ட அதிருப்தியால் எதிர்க்கட்சிக்கு வாக்களிப்பது என்ற பெயரில், எண்ணெய் சட்டியிலிருந்து தப்ப முயன்று எரியும் அடுப்புக்குள் விழுந்திருக்கிறார்கள்.

தனது தீய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மந்திரவாதியால் உருவாக்கி ஏவி விடப்படும் பூதத்தைப் போல, இந்தியத் தரகு முதலாளி வர்க்கத்தால் மக்கள் மீது ஏவிவிடப்பட்டிருக்கும் தீய சக்தியே மோடி. இதனைப் புரிந்து கொள்ளாமல், ‘‘மோடி பிரதமராகியிருப்பது குறித்து கவலைப்படவேண்டியவர்கள் சிறுபான்மை மக்களே’’ என்று யாரேனும் எண்ணிக்கொண்டிருந்தால், அவர்களுடைய தப்பெண்ணத்தை அகற்றி, ‘‘நான் உங்கள் அனைவரின் எதிரி’’ என்று பெரும்பான்மை உழைக்கும் மக்களுக்குத் தனது நடைமுறையின் மூலம் மோடி விரைவிலேயே புரியவைப்பார்.

•••

ஆளும் வர்க்க ஊடகங்களால், ஒரு மசாலாக் கதாநாயகனைப் போல இந்தியா முழுவதும் மேடையேற்றப்பட்ட மோடி என்ற முப்பரிமாண ஹோலோகிராம், தனது பேராற்றல் குறித்துத் தானே கொண்ட மயக்கத்தினால், இந்த தேசத்தைக் காக்க வந்த மீட்பனாகத் தன்னைக் கருதிக்கொண்டு உணர்ச்சி வயப்பட்டுக் கண்ணீர் விடுகிறது. ஆனால், இந்துக் கடவுளர்களைப் போல மோடிக்கு முதுகுப் பக்கம் கை முளைத்தால் மட்டுமே, இந்தியப் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தும் அற்புதத்தை நிகழ்த்த முடியும் என்று முதலாளித்துவப் பொருளாதார வல்லுநர்களே எள்ளி நகையாடுகின்றனர்.

இந்தியப் பொருளாதாரத்தின் இன்றைய நிலை என்ன? உலகப் பொருளாதார மந்தத்தின் காரணமாக ஏற்றுமதி வாய்ப்புகள் சுருங்கிவிட்டதாலும், பணக்கார வர்க்கத்தையும், மேல்தட்டு நடுத்தர வர்க்கத்தையும் மையப்படுத்தி உருவாக்கப்பட்ட உள்நாட்டு நுகர்பொருள் சந்தை விரிவடைய வழியின்றித் தேங்கி நிற்பதாலும், தொழில் உற்பத்தி துறைகள் அனைத்தும் தேங்கிக் கிடக்கின்றன. முதலாளிகளுக்கும் நுகர்வோருக்கும் குறைந்த வட்டியில் கடனை வாரி வழங்குவதற்குப் பண வீக்கம் தடையாக இருக்கிறது. வட்டி வீதத்தைக் குறைத்தால், அது பணவீக்கத்தை அதிகரிப்பது மட்டுமின்றி, அந்நிய நிதி மூலதனத்தின் வெளியேற்றத்துக்கும் வழி வகுக்கும். முதலாளி வர்க்கம் விரும்பும் வரிச்சலுகைகளையும் ஊக்கத்தொகைகளையும் வாரி வழங்க இயலாமல் பட்ஜெட் பற்றாக்குறை மோடியை தடுக்கும். கிரெடிட் சூயிஸ் என்ற முதலீட்டு வங்கியின் ஆகஸ்டு 2013 அறிக்கையின்படி, அரசுடைமை வங்கிகளின் வாராக்கடன் 6.3 இலட்சம் கோடி ரூபாய். கடனாளிகளில் மோடியின் புரவலர்களான அதானி, அம்பானி, எஸ்ஸார், வேதாந்தா உள்ளிட்ட தரகு முதலாளிகளும் அடக்கம். தங்களுடைய கடனில் குறைந்தபட்சம் 3 இலட்சம் கோடியைத் தள்ளுபடி செய்யுமாறு கோருகிறார்கள் தரகு முதலாளிகள். அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற அந்தச் சுமையனைத்தையும் மக்களின் தலை மீது இறக்குவார் மோடி. ‘‘சப் கா விகாஸ்’’ (அனைவருக்கும் முன்னேற்றம்) என்பன போன்ற மோடியின் பஞ்ச் டயலாக்குகள் விரைவிலேயே நகைச்சுவைத் துணுக்குகளாகும்.

மோடிக்கும் பன்னாட்டு நிறுவனங்கள், தரகு முதலாளிகளுக்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம், மக்கள் நலத்திட்டங்கள் அனைத்தையும் ஒழித்துக் கட்டக் கோருகிறது. காங்கிரசு அரசால் கொண்டு வரப்பட்ட நூறு நாள் வேலைத்திட்டம் உள்ளிட்ட நலத்திட்டங்களை ரத்து செய்வது, தரகு முதலாளிகளின் நில ஆக்கிரமிப்பை எளிதாக்கும் வகையில் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை திருத்துவது, சுரங்க நிறுவனங்கள் காடுகளை விழுங்குவதற்குத் தடையாக இருக்கும் சுற்றுச் சூழல் சட்டங்களை அகற்றிக் கனிம வளக் கொள்ளையைத் துரிதப்படுத்துவது, பழங்குடியினர் உரிமைப் பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் நலச் சட்டங்களை ரத்து செய்வது, அரசுத்துறை வங்கி மற்றும் காப்பீட்டுத் துறைகளைத் தனியார்மயமாக்குவது - என இந்தப் பட்டியல் நீள்கிறது. கடுமையான மக்கள் போராட்டங்களைச் சந்திக்காமல் இவற்றை மோடியால் நிறைவேற்றித் தர முடியாது.

தங்களுக்கு மானியம் வழங்குவது, பொதுச்சொத்துகளைக் கொள்ளையிட வழியமைத்துக் கொடுப்பது, சந்தைகளை உருவாக்கிக் கொடுப்பது போன்ற பணிகளை செய்யும் பணிப்பெண்ணாக அரசு இருக்க வேண்டுமேயன்றி, தங்களை நெறிப்படுத்துகின்ற அதிகாரம்கூட அரசுக்கு இருக்க கூடாது என்பது தரகு முதலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளில் மிகவும் முக்கியமானது.

புதிய தாராளவாதத்தின் தலையாய இந்தக் கொள்கையை அமல்படுத்துவதில், மோடி ஒரு புதிய பரிமாணத்தை

‘சக்கரவர்த்தி’யின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்ட ‘குறுநில மன்னர்கள்’: பிற தெற்காசிய நாடுகளின் ஆட்சித் தலைவர்களோடு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.



உருவாக்கியிருக்கிறார். குஜராத் முதல்வராக இருந்த போது உள்துறை, தொழில்துறை, மின்சாரம், பெட்ரோ கெமிக்கல், துறைமுகம், சுரங்கம், கனிமவளங்கள் ஆகிய துறைகள் அனைத்தையும் தன் வசமே வைத்திருந்தார். இவை அனைத்தும் அதானி, அம்பானி, டாடா, எஸ்ஸார் போன்ற நிறுவனங்களின் தொழில்களோடு தொடர் புடைய துறைகள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் துறைகளில் முதலாளிகளைக் கட்டுப்படுத்தும் விதி முறைகள் அனைத்தையும் காலில் போட்டு மிதித்து விட்டு, இரண்டே நாட்களில் எல்லா தொழில்களுக்கும் உரிமம் வழங்கினார் மோடி என்பதுதான் டாடா உள்ளிட்ட தரகு முதலாளிகள் அனைவரும் மோடியைப் புகழ்வதற்கான காரணம்.

சுற்றுச்சூழல், தொழிலாளர் நலம் உள்ளிட்ட பல்வேறு துறைகளும் அவற்றின் சட்டதிட்டங்களும் காகிதத்தில் இன்னும் உயிரோடு இருக்கும்போதே, அவற்றை முடமாக்கி, முதலாளிகளின் வரைமுறையற்ற கொள்ளைக்கு வழி செய்து கொடுப்பதுதான் மோடியின் ஒற்றைச்சாளர நிர்வாக முறை. ‘‘குறைவான அரசு, அதி கபட்ச நிர்வாகம்’’ என்ற மோடியின் முழக்கத்துக்குப் பொருள், அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது என்பது மட்டுல்ல; மாறாக, முதலாளிகளை மேற்பார்வையிடுவதற்கும் நெறிப்படுத்துவதற்கும் அரசு கொண்டிருக்கும் அதிகாரங்கள் அனைத்தையும் வெட்டிக் குறைப்பது என்பதும்தான்.

தற்போது மத்திய அமைச்சகங்கள் இந்தத் திசையில் தான் மாற்றியமைக்கப்படுகின்றன. தனித்தனி அமைச் சர்களின் அதிகாரமும், அமைச்சர்கள் குழுவின் அதிகாரமும் பிடுங்கப்படுகிறது. தரகு முதலாளிகளுடன் நிரந்தரமான நேரடித் தொடர்பில் உள்ளவர்களும், அவர் களுக்குச் சேவை செய்வதற்காகவே வடிவமைக் கப்பட்டவர்களுமான அதிகார வர்க்கத்தினரின் கையில் அதிகாரம் குவிக்கப்பட்டு, எல்லா அமைச்சகங்களின் அதி காரிகளும் நேரடியாக மோடியின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டு அமைச்சர்கள் பொம்மைகளாக்கப் படுகின்றனர். சொல்லிக்கொள்ளப்படும் அதிகாரப் பகிர்வு, துறைசார் வேலைப்பிரிவினை, அமைச் சரவையின் கூட்டுப்பொறுப்பு ஆகிய கோட்பாடுகளைக் குப்பையில் வீசி விட்டு, எல்லா அதிகாரங்களையும் தானே கையிலெடுத்துக் கொள்ளும் மோடியின் இந்தப் பாணியை திறமையென்றும் வேகமென்றும் போற்று கின்றன ஆளும் வர்க்க ஊடகங்கள்.

இருப்பினும், ‘‘குஜராத் மாடல்’’ என்றழைக்கப்படும் மோடி மஸ்தானின் மை டப்பா மர்மம் தற்போது விலகத் தொடங்கிவிட்டது. ‘‘உள்கட்டுமானத்துறை, இயற்கை வளங்களை அகழ்ந்தெடுத்தல், அந்நிய நேரடி முதலீடு ஆகியவற்றில் தேங்கியிருக்கும் கோப்புகள் மீது நூறு நாட்களுக்குள் முடிவெடுக்க வேண்டும்’’ என்ற உத்தரவும், மோடியின் பத்து கட்டளைகளும் அதானி, அம்பானி, எஸ்ஸார் போன்ற தரகு முதலாளிகளின் கொள்ளையுடன் நேரடியாகத் தொடர்புள்ளவை. இவையன்றி இராணுவ தளவாடத்துறையில் நூறு சத வீதம் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்கவிருப்ப தாக அறிவித்திருக்கிறார் அருண் ஜேட்லி. காங்கிரசு அரசின் டீசல் விலை உயர்வுக்கு எதிராக சண்டமாருதம் செய்த பா.ஜ.க., மன்மோகனின் அடியொற்றி டீசல் விலை உயர்வை அறிவித்திருக்கிறது. வழக்கம்போல தமிழக மீனவர்களைக் கைது செய்து மோடியின் பதவி யேற்பு விழாநாடகத்தை அம்பலமாக்குகிறார் ராஜபக்சே.



‘‘தனது ஆற்றல் குறித்துத் தானே கொண்ட மயக்கத்தினால், இந்த தேசத்தைக் காக்க வந்த மீட்பனாகத் தன்னைக் கருதிக்கொண்டு உணர்ச்சி வயப்பட்டுக் கண்ணீர் விடுகிறார் மோடி. ஆனால், இந்துக் கடவுளர்களைப் போல மோடிக்கு முதுகுப் பக்கம் கை முளைத்தால் மட்டுமே, இந்தியப் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தும் அற்புதத்தை நிகழ்த்த முடியும் என்று முதலாளித்துவப் பொருளாதார வல்லுநர்களே எள்ளி நகையாடுகின்றனர்.’’

திறமை, உறுதி, துரிதமான முடிவெடுக்கும் திறன் என்ற பெயர்களில் ஆளும் வர்க்கத்தால் சந்தைப்படுத் தப்பட்டு, அறிவிழந்த காரியவாத நடுத்தர வர்க்கத் தினரால் மெச்சிக் கொள்ளப்பட்ட மோடியின் ஆட்சி பல்லிளிப்பதற்கு அதிக காலம் தேவைப்படாது. மோடியின் தோல்விகளும் முறைகேடுகளும் அம்பல மாகத் தொடங்கியதும், ஊடகவியலாளர்கள் அமைச்சர் களின் திறமையின்மையைப் பற்றி முதலில் அங்கலாய்ப்பார்கள். பின்னர் மோடியின் எதேச்சாதிகார நிர்வாக முறையை ‘‘ஆராய்ந்து கண்டுபிடித்து’’ ஆய்வுக் கட்டுரை எழுதுவார்கள்.

மறுபக்கம், நாட்டின் கவனத்தை ஆர்.எஸ்.எஸ். கும்பல் திட்டமிட்டே திசைதிருப்பும். காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை நீக்குதல், ராமன் கோயில், வங்கதேச முஸ்லீம்கள் ஊடுருவல், பொது சிவில் சட்டம் போன்ற பிரச்சினைகளைக் கிளறுவதன் மூலம் கிளப்பப்படும் காவிப்புழுதி, மோடியின் மறுகாலனியாக்க நடவடிக்கை களை மறைக்க பார்ப்பன பாசிசக் கும்பலுக்குப் பயன் படும். ஆயினும், பார்ப்பன பாசிசத்தின் வர்க்க அரசியல் உள்ளடக்கம், அதாவது, திறமையான நிர்வாகம், வளர்ச்சி என்ற மோடியின் முழக்கங்களுக்கும், இந் துத்துவக் கொள்கைக்கும் இடையிலான தொப்பூள் கொடி உறவு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அம்பலமாகும். ●

## மோடி அலை:

# கார்ப்பரேட் ஊடகங்கள் உருவாக்கிய பொய்மை!

**கூட்டணிக் கட்சிகளின் துணையில்லாமல் அரசியல் சட்டம் எதையும் இயற்றக்கூடிய அளவுக்கு நாடாளுமன்றத்தில் பலம் பெறாத மோடி, இமாலய சாதனையை எட்டிவிட்டதாகப் பிம்பம் வரையப்படுகிறது.**

மோடி அலையா? அல்லது மோடி சுனாமியா? இல்லை, காங்கிரசு எதிர்ப்பு அலையா? நடந்து முடிந்த பதினாறாவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல்களில் பாரதிய ஜனதாக் கட்சியின் நரேந்திர மோடியை பிரதமர் பதவியில் கொண்டு போய் அமர்த்தியது எது என்ற பட்டிமன்றத்தை ஊடகங்களும் அரசியல் விமர்சகர்களும் நடத்திக் கொண்டிருக்கின்றனர். இவை எதுவுமே கிடையாது. வழமையான திருகு சுற்றுப்பாதையில் பயணப்படும் தரகு முதலாளிகளின் அரசியல், பொருளாதாரம் கிரமமான முறையில் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை நெருக்கடியில் சிக்கிக்கொள்வதும், வெறுப்பில் மக்கள் மூழ்குவதும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணப் போவதாக ஒரு இரட்சகர் தோன்றி வாக்காளர்களை ஏய்த்து ஆட்சியைப் பிடிப்பதும், மீண்டும் விட்ட இடத்திலிருந்து பயணத்தைத் தொடங்குவதும் நாம் காணாததில்லை. ஆனால், இப்போது ஏதோ புதிய பாதையில் புதிய பயணம் தொடங்கி நாடு எதிர்கொள்ளும் எல்லாப் பிரச்சினைகளும் நிச்சயம் தீர்க்கப்படும் என்ற பொய்த் தோற்றத்தை ஏற்படுத்துவதற்காகப் பல தேர்தல் கூத்துகளை அரங்கேற்றி, செயற்கையாக அலையும் சுனாமியும் எழுப்பப்பட்டது.

அந்தப் பிரமை இப்போதும் பராமரிக்கப்படுகிறது. காங்கிரசு, பவார், முலயம், மாயாவதி, லாலு, நிதிஷ், கருணாநிதி, ''இடதுசாரிகள்'' ஆகியோரின் படுவீழ்ச்சிகளோடு ஒப்பிட்டு, மோடியின் வெற்றி குறித்து ஊடகங்களால் ஊதிப்பெருக்கிக் காட்டப்படுகிறது. முன்பும், இந்திராவும், ஜனதாவும், ராஜீவும் கூட இந்த மாதிரியான தேர்தல் வெற்றிகளைப் பெற்றார்கள். அடுத்த சில ஆண்டுகளிலேயே தலைகுப்புற வீழ்ந்தார்கள். ஆனால், கூட்டணிக் கட்சிகளின் துணையில்லாமல் அரசியல் சட்டம் எதையும் இயற்றக்கூடிய அளவுக்குக்கூட நாடாளுமன்றத்தில் பலம் பெறாத போதும் மோடி இமாலய சாதனை எட்டிவிட்டதாக ஒரு பிம்பம் வரையப்படுகிறது.

இதையும்கூட, இந்த நாட்டுக்கேயுரிய அரசியல் நிலைமைகளுக்கேற்ப பார்ப்பன பாசிசப் பஞ்ச தந்திரங்களைப் பயன்படுத்தியே ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.கவினர் சாதித்துள்ளனர். சாதிரீதியாகவும் மத ரீதியாகவும் நாட்டு மக்களைக் கூறுபோட்டு ஒருமுனைப்படுத்தினர். மார்வாரி, பார்சி, சிந்தி, குஜராத்தி பனியா கார்ப்பரேட் தரகு முதலாளிகள், ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன அரசியல் ஆதிக்கக் கும்பல் ஆகிய இரட்டைக் கவட்டிகளை ஊன்றிக்கொண்டு சாதித்தனர்.

கார்ப்பரேட் தரகு முதலாளிகளின் ஆதிக்கத்திலுள்ள அச்சு, தொலைக்காட்சி, இணையதளம் ஆகிய ஊடகப் பீரங்கிகள், இட்லரின் கோயபல்சு-கோயரிங் புளுகுணிகளே அதிசயக்கக் கூடிய வகையில் மோடி துதிபாடும் பாசிச பிரச்சாரங்களைக் கொண்டு இந்திய மக்களின் காதுகளைத் தகர்த்தன. மோடியைச் சுற்றி அரசியலற்ற, சின்னத்தனமான கவர்ச்சி மோகத்தைக் கட்டமைத்தனர்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி - முன்னேற்றம் மற்றும் திறமைமிகு நிர்வாகம் என்ற கவர்ச்சி முழக்கத்தை முன்தள்ளிய

தனது பிரதமர் கனவு நனவானவுடனேயே, பார்ப்பன சடங்கு - சம்பிரதாயங்களின்படி கங்கை நதிக்குப் பூஜை செய்யும் நரேந்திர மோடி.



ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பல், அதற்குள் தனது பார்ப்பன - பாசிச அரசியல் ஆதிக்க இந்துத்துவா செயல் திட்டத்தையும் மோடி-அமித ஷா மதவெறிக் கிரிமினல் கொலைக் குற்றங்களையும் தந்திரமாகவும் சதித்தன மாகவும் ஒளித்து வைத்துக் கொண்டனர்.

தானே பீற்றிக்கொள்ளும் கொள்கை-கோட்பாடுகளுக்கு மாறான, எதிரான ஊழல் வாதிகள், பிழைப்புவாதிகள், கட்சிமாறிகள், சாதியவாதிகள், பிராந்தியவாதிகள், சமூக விரோதிகள், தேசத்துரோகிகள் ஆகியோருடன் சந்தர்ப்பவாதக் கூட்டணிகள் அமைத்துக் கொண்டனர். நீண்டநாள் கட்சி விசுவாசிகளையும் ஓரங்கட்டிவிட்டு சினிமாக் காரர்கள், கருப்புப்பண, கள்ளச்சந்தை, கிரிமினல்களை வேட்பாளர்களாக நிறுத்தினார்கள்.



உ.பி. முசாஃபர் நகரில் ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறிக் கும்பல் ஜாட் சாதியினரைத் தூண்டிவிட்டு நடத்திய கலவரத்தால் பாதிக்கப்பட்டு, ஜூலா என்ற கிராமத்திலுள்ள மசூதியில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள முசுலீம்கள். (கோப்புப் படம்.)

பாசிசபஞ்சதந்திரங்களைப் பயன்படுத்தியது மட்டுமல்ல, நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார நிலைமைகளும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. பார்ப்பன பாசிசக் கும்பலுக்குச் சாதகமாக அமைந்துவிட்டன. மறுகாலனியாதிக்க, தனியார்மய - தாராளமய - உலகமயமாக்கப் புதிய பொருளாதாரக் கொள்கையின் எதிர் விளைவுகளைப் புரட்சிகர, ஜனநாயக, முற்போக்கு சக்திகள் பொருத்தமான, அவசியமான மாற்றுக்களை முன்வைத்துப் பயன்படுத்தத் தவறிவிட்டன. ஒருபுறம் போலி மதச்சார்பின்மை, போலி சீர்திருத்தம், போலி ஜனநாயகம்-முற்போக்கு, போலி இடதுசாரி அரசியல் பேசும் சக்திகள்; மறுபுறம், வலது கடைக்கோடி ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.க பார்ப்பன பாசிசக் கும்பல் மற்றும் பிழைப்புவாதிகள், சாதியவாதிகள் அடங்கிய கூட்டணி; இரண்டில் பின்னதை நாட்டு மக்கள் தெரிவு செய்து கொண்டார்கள். இது ஏன்? எப்படி நிகழ்ந்தது?

கடந்த கால் நூற்றாண்டு காலமாக அமலாக்கப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையாலும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க போன்ற பிற்போக்கு சக்திகளாலும் வர்க்க ரீதியிலும், சாதிரீதியிலும், மதரீதியிலும் இந்திய சமூகம் முனைவாக்கப்பட்டது (polarized) ஓட்டு வங்கிகளாகத் திரட்டப்பட்டது.

புதிய பொருளாதாரக் கொள்கை புகுத்தப்பட்ட பிறகு நுகர்பொருள் சந்தையைப் பெருமளவு விரிவாக்குவதற்காக வரம்பு மீறிய ஊதியங்களும் எளிய வட்டிக் கடன்களும் பன்மடங்கு வாரிவழங்கப்பட்டு, அரசு மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களின் செல்லப்பிள்ளைகளாக மேல்தட்டு ஊழியர்கள், அதிகாரிகள் அடங்கிய ஒரு மேட்டுக்குடி உருவாக்கப்பட்டது. இதில் தகவல் நுட்பம் மற்றும் பிற உயர் தொழில் நுட்பம் சார்ந்த ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் அரசு, கார்ப்பரேட் நிறுவனங்களின் தொழில், சந்தைக் கூட்டாளிகள் இணைந்தனர். கார்ப்பரேட் ஊடகம் இவர்களிடம் அரசியலற்ற, சமூக மதிப்பீடற்ற, சுயநலக் காரியவாதம், நுகர்வுக் கலாச் சாரம், பண்பாட்டுச் சீரழிவு-பிற்போக்கு, குட்டி முதலாளிய அற்பவாதம், சித்தாந்தம் ஆகியவற்றை விதைத்தது.

புதிய பொருளாதாரக் கொள்கையின் பலன்களால் கொழுத்த இந்த சுயநலப் பிரிவினர் மோடியின் வளர்ச்சி, முன்னேற்றக் கொள்கை தமக்கு மேலும் ஆதாயங்களைக் கொண்டுவந்து குவிக்கும் என்று நம்பினார்கள். பார்ப்பன எதிர்ப்பு திராவிட மற்றும் இடதுசாரி இயக்கங்கள் காலூன்றாத பகுதிகளில் பிற்பட்ட சாதியினர் தாமே ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. பார்ப்பன பாசிசக் கும்பலின் சாதிவெறி, மதவெறியை வரித்துக் கொண்டவர்களானர்கள். இவர்களோடு 2,3 தலைமுறையாக சமூக நீதி, இடஒதுக்கீடுக் கொள்கையின் பலன்களைப் பெற்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த அரசு ஊழியர்களும், கார்ப்பரேட் நிறுவனங்களின் தொழில், சந்தைக் கூட்டாளிகளான இசுலாமியர்களும் ஒருசேர ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.க. பார்ப்பன பாசிசக் கும்பலின் சாதிவெறி, மதவெறியுடன் சமரசம் செய்து கொண்டார்கள்.

இதன் பலன்களை அதிகபட்சமாக அறுவடை செய்து கொள்ளும் விதமாக ஒருபுறம் பொருளாதார வளர்ச்சி, முன்னேற்றக் கொள்கைகளைப் பசப்பிக் கொண்டே, வாக்காளர்களைச் சாதிரீதியிலும், மத ரீதியிலும் முனைவாக்கப்படுத்தும் சதிகளிலும் தந்திரங்களிலும் வல்லவரும், மோடியின் வலதுகரமுமான அமித ஷா களத்தில் இறக்கப்பட்டார். முசாஃபர்நகர் மதவெறிப் படுகொலைகளை நடத்தி ஜாட் சாதியினரை இசுலாமியருக்கு எதிராகத் திரட்டியதில் இருந்து தேர்தல் முடிவுகள் வந்ததும் மீண்டும் மீரட்டில் மதவெறிக் கலவரத்தை அரங்கேற்றியது வரை இசுலாமியர்கள் எவ்வாறு மதவெறிக் கூட்டத்தால் சுற்றி வளைக்கப்பட்டார்கள் என்ற கதையை நாடே அறியும்.

சரண்சிங், திகாய்த் தலைமையில் ஒன்றுசேர்ந்து பல போர்க்குணமிக்க விவசாய போராட்டங்களைக் கண்ட ஜாட் சாதியினரும் இசுலாமியர்களும் இப்போது கொலைவெறிகொண்ட எதிரெதிர் சக்திகளாக நிற்கிறார்கள். இது தான் மோடி-அமித் ஷா கும்பலின் வெற்றிச் சூத்திரம்.

   

புதிய பொருளாதாரக் கொள்கையின் பலன்களைத் தாம் மட்டுமே அறுவடை செய்து கொள்ள வேண்டும் என்ற பேராசையில் மூழ்கிக் கிடந்த மகாராஷ்டிரா - குஜராத் தாழ்வாரப் பகுதியைச் சேர்ந்த தரகு முதலாளிகளுள் ஒரு சிலர் (இடமிருந்து) ரத்தன் டாடா, குமாரமங்கலம் பிர்லா, முகேஷ் அம்பானி மற்றும் அதானி.

தாக்குதலுக்கு அஞ்சி இசுலாமியர்கள் வாக்குச் சாவடிகளை அண்டாமலிருப்பதும் அதையே மோடி-அமித் ஷா கும்பல் சாதகமாக்கிக் கொள்வதுமான ''குஜராத் மாடல்'' வேறு மாநிலங்களுக்கும் விரிவாக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சூத்திரத்தின் மறுபக்கம் ஒன்றுண்டு. அயோத்தி பாபரி மசூதி இடிப்புக்குப் பிறகு உ.பி., பீகாரில் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. பார்ப்பன பாசிச கும்பலின் முதுகெலும்பு ஒடிக்கப்பட்டுக் கிடந்தது. மாயாவதியின் தலித்-பார்ப்பன- இசுலாமியர் கூட்டும், முலயம் சிங்கின் யாதவ்-இசுலாமியர் கூட்டும் மாறிமாறி ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலை முடக்கி வைத்திருந்தது. பீகாரில் லாலுவின் யாதவ் - இசுலாமியர் கூட்டும் பா.ஜ.க.- நிதிஷின் ஜனதா கூட்டணி முறிந்த பிறகும் பூமிகார் - குர்மி- இசுலாமியரின் கூட்டு ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அல்லாத ஆட்சி அமையவும் காரணமாயிருந்தது. இந்தமுறை மேற்படி சாதிகளின் தலைவர்கள், பிரமுகர்களுக்கு விலைபேசியும் பதவி வாக்குறுதி கொடுத்தும் தனக்குச் சாதகமான சாதி, மத முனைவாக்கத்தைக் கட்டிக் கொண்டது, மோடி-அமித் ஷா கும்பல்.

மோடி-அமித் ஷாவின் உருவில் தமது இயல்பான கூட்டாளியைக் கண்ட மார்வாரி, பார்சி, சிந்தி, குஜராத்தி பனியா தரகு முதலாளிகள் தமது ஏகபோக ஊடக ஆதிக்கத்தை வைத்து ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.க. கும்பலின் எடியூரப்பா, ரெட்டி சகோதரர்களின் இலஞ்சம்-ஊழல், அதிகார முறைகேடுகளைப் பின்னுக்குத் தள்ளினர்; காங்கிரசு கூட்டணி அரசின் இலஞ்சம்-ஊழல், அதிகார முறைகேடுகளை மட்டும் முதன்மைப்படுத்தினர். தாமே மிகப்பெரிய கருப்புப் பண முதலைகளாக இருந்த போதும், அன்னா ஹசாரே, ராம்தேவ் முதலிய எடுபிடிகளை முன்னிறுத்தி கருப்புப்பண எதிர்ப்பு இயக்கத்தைக் கட்டவிழ்த்துவிட்டு அதற்கு காங்கிரசு கூட்டணி அரசை இலக்காக்கினர். பல ஆயிரம் கோடி ரூபாய்களையும் ஏகபோக ஊடகங்களையும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலின் ஆணையில் திரட்டிக்கொடுத்து அதன் வெற்றியை எளிதாக்கினர்.

•••

ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.க. பார்ப்பன பாசிசக் கும்பலின் அரசியல் தலைமையாக மராட்டிய சித்பவன் பார்ப்பனர்கள் இருந்தபோதும், அதன் பொருளாதாரப் புரவலர்களாக எப்போதும் மார்வாரி, பார்சி, சிந்தி, குஜராத்தி பனியா தரகு முதலாளிகள் இருந்திருக்கிறார்கள். இந்தியத் தரகு முதலாளிய வர்க்கத்தின் வேரும் விழுதும் இவர்கள்தாம். பரம்பரை வட்டி லேவாதேவி மூலதனம், காலனிய காலத்தில் போதைப் பொருள் கடத்தல், தரகுத் தொழில் மூலதனம் இவற்றைக் கொண்டு தோற்றமெடுத்த இவர்கள் காங்கிரசு மற்றும் ஆர்.எஸ்.எஸ். இரண்டினுடனான அரசியல் கள்ளக்கூட்டைக்கொண்டு இப்போது இந்திய ஆளும் வர்க்கத்தின் முதன்மைச் சக்தியாக வளர்ந்து நிற்கிறார்கள்.

1947 அதிகார மாற்றத்துக்குப் பிந்திய காலத்தில் அடிப்படைக் கட்டுமானத் துறைகளில் பெரிய அளவிலான முதலீடுகள் தேவையானபோது அரசுத் துறை மூலதனத்தைச் சார்ந்து நின்ற இவர்கள், அரசுத்துறையுடன் ஒப்பந்த தொழில்கள், உடனடிக் கொள்ளை இலாபம் தரும் நுகர்பொருள் உற்பத்தி, ஏகாதிபத்தியத்துடனான தரகுத் தொழில்களில், பங்குச்சந்தை சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். 1990-களில் தனியார்மயம்- தாராளமயம்- உலகமயமாக்கம் புகுத்தப்பட்ட பிறகு, அரசுத்துறைத் தொழில்களையும் மூலதனத்தையும் கைப்பற்றிக் கொள்வதற்கும் ஏகாதிபத்தியத்துடனான தரகுத் தொழில்களுக்குமான வாய்ப்புகள் பெருமளவு திறந்து விடப்பட்டன. முந்திக்கொண்ட மார்வாரி, பார்சி, சிந்தி, குஜராத்தி பனியா தரகு முதலாளிகள் அவற்றைக் கைப்பற்றிக் கொண்டார்கள். வாஜ்பாய் தலைமையிலான ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.க. ஆட்சியின்போது அரசுத்துறைத் தொழில்களைத் தனியாருக்கு விற்பதற்கென்றே அதன் அரசியல் கோயபல்சு அருண்சோரியைச் சிறப்பு அமைச்சராக்கிப் பொதுச்சொத்துக்கள் சூறையாடப்பட்டன. கொள்ளை இலாபம் தரக்கூடிய அலைக்கற்றை உரிமங்கள் வாரிவழங்கப்பட்டன. ஏகாதிபத்திய நாடுகளின் நுகர்பொருளுக்கான சந்தை மேலும் விரிவாகத் திறந்து விடப்பட்டது.

இதைக்காட்டி ''இந்தியா ஒளிர்கிறது'' என்ற முழக்கத்தை முன்வைத்துத் தேர்தலை எதிர்கொண்ட ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.க. தோல்வி கண்டது. அடுத்து ஆட்சிக்கு வந்த காங்கிரசுக் கூட்டணி இரண்டாம் கட்டப் பொருளாதாரச் சீர்திருத்தத்தை முன்தள்ளியது. மார்வாரி,

பார்சி, சிந்தி, குஜராத்தி பனியா தரகு முதலாளிகளில் பலர் இந்திய மற்றும் அன்னிய மூலதனத்துடன் கூட்டுச்சேர்ந்து தேசங்கடந்த தரகு முதலாளிகளாக வளர்ந்தார்கள். நாட்டில் நுகர்பொருள் சந்தை நிறைவுநிலையை எட்டிவிட்ட நிலையில் அவர்கள் அடிப்படைக் கட்டுமானத் தொழில்களிலும் இயற்கைக் கனிம வளங்களைச் சூறையாடுவதிலும் இறங்கினர். விமான நிலையங்கள், துறைமுகங்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், அணு, அனல் மின் நிலையங்கள், சில்லறை வர்த்தக சங்கலித் தொடர்கள், காப்பீடு, வங்கி - என முதலீடுகளை விரிவுபடுத்தினர்.

> **ஜெர்மானிய ஏகாதிபத்திய ஏகபோக முதலாளிகள் இட்லரை அதிபராக்கியதைப் போலவே மார்வாரி, பார்சி, சிந்தி, குஜராத்தி பனியா தரகு முதலாளிகள் பணத்தைத் தண்ணீராகக் கொட்டி மோடியைப் பிரதமராக்கியும் விட்டனர். இட்லருக்கு என்ன நேர்ந்தது என்பதை வரலாறு அறியும். ஆனால், தெற்கு ஆசியாவையே தனது மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.க. அகண்ட பாரதக் கனவு என்னவாகும்?**

ஆனால், தனியார்மய-தாராளமய-உலகமயமாக்கத்தின் பலன்களைத் தாம் மட்டுமே அறுவடைசெய்து கொண்டு நாடு முழுவதும் தனது பொருளாதார ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொள்வதற்கான பேராசையில் மூழ்கிக்கிடந்த மார்வாரி, பார்சி, சிந்தி, குஜராத்தி பனியா தரகு முதலாளியக் கும்பல், புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாகவும் அதன் பலன்களைப் பங்கு போட்டுக்கொள்ளவும் சென்னை, பெங்களூரு, ஐதராபாத் ஆகியவற்றை மையங்களாகக் கொண்ட புதிய கார்ப்பரேட் தரகு முதலாளிகளைக் களத்தில் கண்டனர்.

புதிய பொருளாதாரக் கொள்கை புகுத்தப்படுவதற்கு முன்பிருந்து மும்பைதான் நாட்டின் பொருளாதாரத் தலைநகராகவும், மராட்டியம்-குஜராத் ஆகிய தாழ்வாரம்தான் பொருளாதார ரீதியில் முதன்மையானதாகவும் இருந்து வருகிறது. இப்போதோ ''குஜராத் மாடலின்'' சாதனை என மோடி பீற்றிக்கொள்வதை ஜெயலலிதாவும் ரிசர்வ் வங்கி ஆய்வுகளும் கேள்விக்குள்ளாக்குகின்றனர். இது, பிற பிராந்திய, புதிய கார்ப்பரேட் தரகு முதலாளிகளின் வளர்ச்சியைக் குறிக்கிறது.

இதோடு, முக்கியமாக ஆந்திரா, சத்தீஸ்கர், ஒடிசா, ஜார்கண்ட், பீகார், மேற்கு வங்கத்தில் இரும்புத்தாது, நிலக்கரி, பாக்சைடு, செம்பு ஆகிய தாதுக்களைச் சூறையாடுவதில் ஈடுபட்டுள்ள ஸ்டெர்லைட்-வேதாந்தா, எஸ்ஸார், ஜிண்டால், மிட்டல், டாடா, அதானி, அம்பானி ஆகிய குழுமங்களுக்குச் சுற்றுச்சூழல் அனுமதியின்றி கோப்புகள் தேங்கிக்கிடக்கின்றன. கார் தொழிற்சாலை அமைப்பதில் டாடாவும், அணு, அனல் மின்நிலையங்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதில் அம்பானியும் அதானியும் மிட்டலும் நிலங்களைக் கையகப்படுத்துவதில் தாமதங்களை எதிர் கொண்டபோது மார்வாரி, பார்சி, சிந்தி, குஜராத்தி பனியா தரகு முதலாளிகள் ஆத்திரமடைந்தனர். காங்கிரசுக் கூட்டணி அரசு தடைபோடுவதாக அவர்கள் கருதினர்.

இந்தத் தொழில் முனைவுகளுக்கு கிழக்கே மேற்கு வங்கம்(சிங்கூர்), ஒடிசா, வடக்கே உத்திரப் பிரதேசம், அரியானா-தில்லி புறநகர், தென்கிழக்கே சத்தீஸ்கர், மேற்கே மராட்டியம், குஜராத்திலேயே மக்கள் எதிர்ப்பு கடுமையாகியது. அவற்றை ஒடுக்கி மக்கள் வாழ்வுரிமைகளைப் பறிப்பதிலும் இராணுவ ஆயுத உற்பத்தி, வங்கி, காப்பீடு, சில்லறை வணிகம் ஆகியவற்றில் அன்னிய முதலீடு-தொழில் கூட்டுக்கும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மோடியின் உருவில் - குஜராத் மாடலில் - தமது இயல்பான கூட்டாளியை மார்வாரி, பார்சி, சிந்தி, குஜராத்தி பனியா தரகு முதலாளிகள் கண்டனர்.

புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக சென்னை - ஹைதராபாத் - பெங்களூரு ஆகிய நகரங்களை மையமாகக் கொண்டு முளைத்துள்ள புதிய வகைப்பட்ட தரகு முதலாளிகள் (இடமிருந்து) நாராயண மூர்த்தி, அசிம் பிரேம்ஜி, கலாநிதி மாறன்.





அதனாலேயே, ஜெர்மானிய ஏகாதிபத்திய ஏகபோக முதலாளிகள் இட்லரை அதிபராக்கியதைப் போலவே மார்வாரி, பார்சி, சிந்தி, குஜராத்தி பனியா தரகு முதலாளிகள் பணத்தைத் தண்ணீராகக் கொட்டி மோடியைப் பிரதமராக்கியும் விட்டனர். அகில உலகையும் தனது ஏகாதிபத்தியக் காலடி ஆதிக்கத்தில் கொண்டுவர எத்தனித்த இட்லருக்கு என்ன



தேர்தல் முடிவுகள் வெளிவந்து மோடி-பா.ஜ.க. கும்பல் அதிகாரத்தில் அமர்வது உறுதியானவுடனேயே உ.பி.யில் மீரட் நகரில் நடந்த கலவரம்.

நேர்ந்தது என்பதை வரலாறு அறியும். ஆனால், தெற்கு ஆசியாவையே தனது மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அகண்ட பாரதக் கனவு என்னவாகும்?

2007 உலகப் பொருளாதார நெருக்கடியின் தாக்கம், இந்தியப் பொருளாதாரத்தில் தேக்க-வீக்கம், பணவீக்கம் காரணமாக விலையேற்றம், ஏற்றுமதி-இறக்குமதி சமன் பாட்டில் டாலருக்கு எதிராக ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி, உற்பத்தித் துறையில் கடும் வீழ்ச்சி, ஆலைகள் மூடல் ஆகிய நெருக்கடிகள் தொடங்கியபோதே பெரும் ஊழல் விவகாரங்கள் அம்பலப்பட்டு நாடே நாறியது. இவற்றினிடையே நாட்டு மக்கள் எதிர்த்தபோதும் கூட்டணிக் கட்சிகளிடமிருந்து தனிமைப்பட்ட போதும் மறுகாலனியாக்கம் மற்றும் புதிய பொருளாதாரக் கொள்கைளை அமலாக்குவதில் சோனியா - மன்மோகன் - மான்டேக்சிங்- சிதம்பரம் கும்பல் அழுந்தி நின்றது. விளைவாக, அதன் அரசியல் அழிவை நாடே கண்டது.

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மோடி கும்பலின் ஆட்சியில் அன்னிய, உள்நாட்டு முதலீடுகளைத் தாராளமாக அனுமதித்து, வரி-வட்டிக் குறைப்பு செய்து சந்தையைப் பரவலாக்கினால் தமது தொழில் வளர்ச்சியும் சீரான தாகவும், அதற்கான அரசியல், பொருளாதார நிலைமை கள் உறுதியானதாகவும் அமையும் என்று மார்வாரி, பார்சி, சிந்தி, குஜராத்தி பனியா தரகு முதலாளிகள் நம்பு கின்றனர். கர்நாடகா எடியூரப்பா, ரெட்டி கும்பலை இணைத்துக் கொண்டிருந்தாலும் அப்பழுக்கில்லாத மோடியின் ஆட்சியில் இலஞ்சம் - ஊழல் ஒழிக்கப்படும், பொருளாதாரச் சீர்திருத்தம் தடையின்றி, தாமதமின்றி விரைவாக்கப்படும்; அதனால் தமது வாய்ப்பு, வசதிகள் மேலும் பெருகும் என்று நகர்ப்புற மேட்டுக்குடி சப்புக் கொட்டுகிறது.

ஆனால், கார்ப்பரேட் தரகு முதலாளிகளை இழுவை எந்திரமாகக் கொண்டு இயங்கும் பொருளாதாரத்தில் இலாபவெறியும் இலஞ்சம் - ஊழலுமே அதன் எரிசக்தி யாக இருக்கும். எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா, மோடி போன்ற பொறுக்கி அரசியல் பாசிச ஆட்சியாளர்கள் முதலும் கடைசியுமாக நம்பும் காரியம் அதிகாரக் குவிப்புதான். அதிகார வர்க்கம், போலீசு, இராணு வத்தின் கைகள் அவிழ்த்து விடப்பட்டு அவற்றில் வரம்பில்லா அதிகாரம் குவிக்கப் பட்டால் நிர்வாகத் திறமையும், துணிச்சலும் தானாக வந்துவிடும் என்று நம்புகிறவர்கள். எல்லா அமைச்சகங்களுக்கும் இணையான அதி காரமிகு வல்லுநர்களை பிரதமர் அலுவலகத்தில் நியமித்து விட்டார் மோடி.

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அரசியல் தலைமை யான மோடி-அமித் ஷா கும்பல் ஆட்சிக்கு வந்த முதல் வாரத்திலேயே ''மன்மோகனாமிக்சின்'' மறுஅவதாரம்தான் ''மோடினாமிக்ஸ்'' என நிரூ பிக்கும் வகையில் பொருளாதார நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது. இராணுவ ஆயுத உற்பத்தி, வங்கி, காப்பீடு, சில்லறை வணிகம் ஆகி யவற்றில் அன்னிய முதலீடு, தொழில் கூட்டுக்கு இருந்த தாமதங்களை - தடைகளை நீக்கி மக்கள் வாழ்வுரிமை களைப் பறிப்பதற்கான இலக்குகளைக் குறித்துவிட்டது. இத்தகைய நாசகர நடவடிக்கைகளில் இருந்து மக்கள் கவனத்தைத் திசைதிருப்பும் வகையில் காஷ்மீருக்கு 370 சுயாட்சிச் சட்டம், பொது சிவில் சட்டம், அயோத்தி ஆகிய பிரச்சினைகள் மீது விவாதத்தைக் கிளப்பிக் கொண்டிருக்கிறது.

இவற்றோடு மேலும் பல நாசகர பாசிச பயங்கரவாத மதவெறி, சாதிவெறி அரசியலையும் இணைத்துக் கொண்டுள்ள அக்கும்பல் தன்னுடைய அரசியல் அழிவோடு நாட்டையும் மக்களையும் சாதி, மதரீயில் பிளவுபடுத்தி, இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்துப் பேரழிவை ஏற்படுத்தக் கூடியது. அதேசமயம், புதிய பொருளாதாரக் கொள்கையின் பலன்கள் மறுக்கப்பட்டு, வெளியே நெட்டித்தள்ளப் படுகிறார்கள், அடித்தட்டு மக்கள். இவர்கள்தாம் புதிய பொருளாதாரக் கொள்கையின் எதிர்மறைத் தாக்குதல்களையும், விளைவு களையும் தூக்கிச் சுமப்பவர்கள். மலிவான உழைப்புச் சந்தையை உருவாக்கவும் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாகவும் தேசிய எல்லைகளைக் கடந்து குடிபெயரும் தொழிலாளர்கள் தொழில் மையங் களில் குவிகின்றனர். கீழே நடக்கும் இவ்வாறான வர்க்க முனைவாக்கம், மேலே நடக்கும் இன, சாதிய, மத முனைவாக்கத்துக்கு மாற்றானதாக, எதிரானதாக புரட்சிகர அரசியலுக்குச் சாதகமானதாக அமைகிறது.

இவ்வாறானதொரு வர்க்க முனைவாக்கத்தின் மீதும் புரட்சிகர அரசியலின் மீதும் நம்பிக்கை வைப்பதற்கு மாறாக, இடஒதுக்கீடு என்ற சமூகநீதிச் சீர்திருத்தம் காங்கிரசு, முலயம் - மாயா - லாலு - நிதிஷ் - மமதா பாணிப் போலி மதச்சார்பின்மை மீது ஒடுக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை வைத்தனர். விளைவு, பிற்போக்கு சாதி, மத முனைவாக்கத்திலும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. எதிர்ப்புரட்சி சக்திகளிடம் அதிகாரத்தை சரணடையச் செய்வதாகவும் முடிந்துள்ளது.

● ஆர்.கே.

# தோழர் சுனிதிகுமார் கோஷ்-க்கு

# வீரவணக்கம்!

**க**ம்யூனிசப் புரட்சியாளரும், இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) யின் நிறுவனர்களில் ஒருவருமான தோழர் சுனிதிகுமார் கோஷ் கடந்த மே11 அன்று தனது 96-வது வயதில் காலமாகி விட்டார். தனது வாழ்நாள் முழுவதும் மார்க்சிய -லெனினியத்தை தனது உயிர்மூச்சாகக் கொண்டு அர்ப்பணிப்புடன் செயல்பட்ட நக்சல்பாரி புரட்சியாளர் அவர்.

வங்கத்தின் தேபகா குத்தகை விவசாயிகள் எழுச்சிக் காலத்தில் (1946-47) கம்யூனிச இயக்கத்தின் ஆதரவாளராக இருந்த தோழர் கோஷ், கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியில் இணைந்து ஊக்கமுடன் செயல்பட்டார். இருப்பினும், அக்கட்சியின் புரட்டல்வாதப் பாதையால் அதிருப்தியுற்று 1956-இல் அதிலிருந்து விலகி அரசியலிருந்தே ஒதுங்கியிருந்தார். இந்திய - சீனப் போரைத் தொடர்ந்து இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி பிளவுபட்டு சி.பி.எம். கட்சி உருவானபோது அதில் இணைந்து செயல்பட்டார்.

பின்னர் அக்கட்சியும் திருத்தல்வாதப் பாதையில் சென்று துரோகமிழைக்கத் தொடங்கியதும் 1966-ஆம் ஆண்டில் அதிலிருந்து விலகிய அவர், 1967-ஆம் ஆண்டு வசந்தத்தின் இடிமுழக்கமாக எழுந்த நக்சல்பாரி எழுச்சியை பேருற்சாகத்துடன் ஆதரித்து கம்யூனிசப் புரட்சியாளர்களுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார். அகில இந்திய பொதுவுடைமைப் புரட்சியாளர்களின் ஒருங்கிணைப்புக் கமிட்டி (AICCCR) -இன் உறுப்பினராகச் செயல்பட்ட அவர், 1969-இல் உருவான இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)-இன் மத்தியக் கமிட்டி உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

கட்சியின் பொதுச்செயலாளரான சாருமஜூம்தார் மறைவுக்குப் பின்னர், மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சியானது பல குழுக்களாகப் பிளவுபட்ட நிலையில் 1974-இல் உருவான மத்திய அமைப்புக் கமிட்டியின் (சி.ஓ.சி. சி.பி.ஐ. எம்-எல்.) அரசியல் தலைமைக்குழு உறுப்பினராக அவர் இயங்கினார். 1977-இல் அக்குழு கலைக்கப்பட்ட பின்னர், இந்தியக் கம்யூனிசப் புரட்சி இயக்கத்தின் வரலாற்றை ஆவணங்களுடன் தொகுத்தளிக்கும் மிக முக்கியமான பணியை மேற்கொண்டார். அகில இந்திய பொதுவுடைமைப் புரட்சியாளர்களின் ஒருங்கிணைப்புக் கமிட்டியாலும், பின்னர் மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சியாலும் வெளியிடப்பட்ட ''லிபரேஷன்'' இதழில் 1967 முதல் 1972 வரையிலான ஆவணங்களின் தொகுப்பு அவரது மேற்பார்வையில் 1992 மற்றும் 1993-ஆம் ஆண்டுகளில் வெளிவந்தது.



நக்சல்பாரி இயக்கத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரான தோழர் சுனிதிகுமார் கோஷ்.

இது மட்டுமின்றி, ''இந்தியப் பெரு முதலாளி வர்க்கம் - தோற்றம், வளர்ச்சி, பண்புகள்'' என்ற இந்திய ஆளும் வர்க்கத்தைப் பற்றிய விரிவான நூலை 1985-இல் எழுதினார். இந்திய முதலாளிகள் தரகு முதலாளிகளே என்பதை ஆதாரங்களுடன் நிறுவினார். ''இந்தியாவின் தேசிய இனச் சிக்கலும் ஆளும் வர்க்கங்களும்'', ''இந்திய சீனப் போர் - இமாலய சாகசம்'', ''நக்சல்பாரி: முன்பும் பின்பும் - நினைவுகளும் மதிப்பீடும்'', ''இந்தியாவும் பிரிட்டிஷ் ஆட்சியும் (இரண்டு தொகுதிகள்)'', ''ஏகாதிபத்தியத்தின் கிடுக்கிப் பிடியில் இந்திய வேளாண்மை'', ''துயரம் தோய்ந்த வங்கப் பிரிவினை'' - ஆகிய மிக முக்கியமான நூல்களை அவர் எழுதினார். அவரது படைப்புகளும் கட்டுரைகளும் இந்திய மற்றும் வெளிநாட்டு இடதுசாரி இயக்கங்களின் ஏடுகளில் வெளிவந்துள்ளன.

தோழர் சுனிதிகுமார் கோஷ் எழுதிய ''நக்சல்பாரி: முன்பும் பின்பும் - நினைவுகளும் மதிப்பீடும்'' என்ற நூலின் முகப்பு.




''எனக்கு உணவும் உறைவிடமும் அளித்துப் பாதுகாத்து எனது லட்சியத்திற்குத் துணை நின்ற எனது தோழர்களுக்கு நான் பெரிதும் கடன்பட்டுள்ளேன். அது என்னால் திருப்பித் தரமுடியாத கடன்'' என்று அடக்குமுறைக் காலத்தில் தன்னையும் தனது குடும்பத்தையும் பராமரித்த தோழர்களுக்கும் உழைக்கும் மக்களுக்கும் தான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளதாக அடிக்கடி கூறுவார். புரட்சிகர குழுக்களுடன் தொடர்பு கொண்டு இயங்கியதோடு, அடக்குமுறைகளையும் பல்வேறு இடர்பாடுகளையும் இழப்புகளையும் இன்முகத்துடன் எதிர்கொண்டு, மார்க்சிய-லெனினியத்தைப் பற்றிப் பாதுகாத்து அர்ப்பணிப்புடன் செயல்பட்ட நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரான தோழர் சுனிதிகுமார் கோஷ்-க்கு எமது வீரவணக்கம்!

- ஆசிரியர் குழு

## மோடியின் குற்றங்கள்:

# காங்கிரசின் கையிலும் இரத்தக் கறைகள்!

**மோடி அரசு குஜராத்தில் முசுலீம்களுக்கு எதிராக நடத்தியுள்ள பயங்கரவாதக் குற்றங்கள் அனைத்திலும் காங்கிரசு அடிக்கொள்ளியாக இருந்துள்ளது.**

**ச**ர்வாதிகாரிகளும் பாசிஸ்டுகளும் பல் வேறுவிதமான தில்லுமுல்லுகள், அடக்குமுறைகள் மூலம் தொடர்ச்சியாகத் தேர்தல்களில் வென்று, நீண்ட காலத்திற்குப் பதவியில் பசைபோல ஒட்டிக் கொண்டிருப்பதற்கு உலக வரலாற்றில் ஏராளமான உதாரணங்கள் உள்ளன. நரேந்திர தாமோதரதாஸ் மோடி 2002-க்குப் பிறகு குஜராத்தில் நடந்த அனைத்து சட்டமன்றத் தேர்தல்களிலும், 16-ஆவது நாடாளுமன்றத்திற்கு நடந்த தேர்தல்களிலும் வென்றிருப்பதை அப்படிபட்ட சர்வாதிகாரிகளின் வெற்றியோடு மட்டுமே ஒப்பிட முடியும்.

கார்ப்பரேட் முதலாளிகளையும் ஊடகங்களையும் பக்கபலமாக வைத்துக்கொண்டு, ஆதிக்க சாதி மற்றும் இந்து மதவெறியைத் தூண்டிவிட்டு, சிறுபான்மை முசுலீம்களை நிரந்தர அச்சத்தில் வைத்துதான் அவர் தனது வெற்றியைச் சாதித்து வந்திருக்கிறார். குறிப்பாக, குஜராத்தில் போலீசு-உளவுத் துறை மூலம் அரசு பயங்கரவாத, இந்து மதவெறி பாசிச ஆட்சியை நிறுவியதன் மூலம்தான் அவர் தொடர்ந்து நான்கு முறை முதல்வராகப் பதவியில் அமர முடிந்தது. இந்தச் சமூக விரோத கிரிமினல்தனத்தைத் தாண்டி அவரது தேர்தல் வெற்றிகளுக்கு வேறெந்த அடிப்படையும் கிடையாது என்பதைத் தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த மே 16 அன்று உச்ச நீதிமன்றம் அளித்திருக்கும் ஒரு தீர்ப்பு நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

குஜராத்தில் அமைந்துள்ள அக்ஷர்தாம் கோவில் மீது செப்.2002-இல் நடைபெற்ற தாக்குதல் வழக்கில் தண்டிக்கப்பட்டிருந்த ஆறு முசுலீம்களையும் அப்பாவிகள் எனக் குறிப்பிட்டு விடுதலை செய்த அத்தீர்ப்பு, மோடியின் ஆட்சி சிறுபான்மை முசுலீம்களுக்கு எதிரானது மட்டுமல்ல, அடிப்படையிலேயே கேடுகெட்ட ஒரு கிரிமினல் கும்பலின் ஆட்சி என்பதையும் எடுத்துக் காட்டியது. இந்தியாவின் 15-ஆவது பிரதமராகப் பதவியேற்றுள்ள நபரின் அச்சமூட்டக்கூடிய, அதேசமயம் அருவெறுக்கத்தக்கதுமான கிரிமினல் தனத்தை எடுத்துக்காட்டிய இத்தீர்ப்பு பொதுவெளியில் விரிவாக விவாதிக்கப்படாமல், காங்கிரசு உள்ளிட்ட எதிர்த்தரப்பாலும் ஒதுக்கப்பட்டு ஒரு சாதாரண செய்தி போல கடந்து போனதுதான் இந்து மத வெறிக் கும்பலின் தேர்தல் வெற்றியைவிட அதிர்ச்சியளிக்கக்கூடிய ஒன்றாகும்.

லஷ்கர்-இ-தொய்பாவைச் சேர்ந்த தீவிரவாதிகள் எனக் கூறப்பட்ட இரண்டு பேர் ஏ.கே.56 இரக துப்பாக்கியைக் கொண்டும் கையெறி குண்டுகளை வீசியும் நடத்திய அத்தாக்குதலில் குஜராத் கமாண்டோ படைப்பிரிவைச் சேர்ந்த இருவர், தேசிய பாதுகாப்புப் படைப் பிரிவைச் சேர்ந்த ஒரு சிப்பாய், குஜராத் ஆயுதப் படையைச் சேர்ந்த ஒரு காவலர் மற்றும் 28 பக்தர்கள் உள்ளிட்டு 32 பேர் கொல்லப் பட்டனர். இத்தாக்குதலை நடத்திய இருவரும் தேசிய பாதுகாப்புப் படையால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

''குஜராத்தில் நடந்த கலவரத்திற்குப் பழி தீர்க்கும் நோக்கத்தோடு இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக''க் கூறிய மோடி அரசு, குஜராத் மற்றும் உ.பி.யைச் சேர்ந்த ஆறு முசுலீம்களைக் கைது செய்து, அவர்கள் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்தது. இந்த ஆறு பேரும் பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர் மற்றும் ஜெய்ஷ்-இ-

அக்ஷர்தாம் கோவில் தாக்குதல் வழக்கில் மோடி அரசால் மோசடியான முறையில் சிக்கவைக்கப்பட்டு, கீழ் நீதிமன்றங்களால் சட்டவிரோதமாகத் தண்டிக்கப்பட்டு, உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ள அப்பாவி முசுலீம்கள்.



முகம்மது தீவிரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் எனக் குற்றஞ்சுமத்தியதோடு, இத்தாக்குதலைச் சர்வதேச முசுலீம் பயங்கரவாதத்தின் ஒரு பகுதியாகக் காட்டும் நோக்கத்தில், இத்தாக்குதலோடு தொடர்புடைய 28 குற்றவாளிகள் பாகிஸ்தான் மற்றும் அரபு நாடுகளில் தலைமறைவாக இருப்பதாகவும் பீதி கிளப்பிவிட்டது.

பொடா நீதிமன்றம் இந்த ஆறு பேரில் ஆதாம் அஜ்மீரி, சாந்த் கான், முஃப்தி அப்துல் மன்சூரி ஆகிய மூன்று பேருக்குத் தூக்கு தண்டனையும்; முகம்மது சலீம் ஷேக்குக்கு ஆயுள் தண்டனையும்; அப்துல் மியான் காத்ரிக்கு 10 ஆண்டும், அல்தாப் ஹுசைனுக்கு ஐந்து ஆண்டு சிறை தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை குஜராத் உயர்நீதிமன்றம் உறுதி செய்தது. இதற்கு எதிராக அல்தாப் ஹுசைனைத் தவிர மீதி ஐந்து பேரும் தொடுத்த வழக்கில் மூன்று பேரின் தூக்கு தண்டனை, முகம்மது சலீமுக்கு அளிக்கப்பட்ட ஆயுள் தண்டனை, அப்துல் மியானுக்கு வழங்கப்பட்ட 10 ஆண்டு சிறை தண்டனை ஆகியவற்றை ரத்து செய்து அவர்களை விடுதலை செய்த உச்ச நீதிமன்றம், ஐந்தாண்டு சிறை தண்டனையைக் கழித்து விடுதலையாகிச் சென்றுவிட்ட அல்தாப் ஹுசைனின் மீதான குற்றச்சாட்டையும் தானே முன்வந்து ரத்து செய்து தீர்ப்பளித்திருக்கிறது. ''இந்த ஆறு பேருக்கும் அளிக்கப்பட்ட தண்டனை அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகளுக்கு எதிரானது'' எனக் குறிப்பிட்டு உச்சநீதிமன்றம் இவர்களை விடுதலை செய்திருப்பது ஒருபுறமிருக்க, இந்த வழக்கை நடத்திய மோடி அரசின் மீது நீதிபதிகள் வைத்துள்ள விமர்சனங்கள் பாரதூரமாகக் கவனிக்கத்தக்கவை.




உச்ச நீதிமன்றத்தால் அக்ஷர்தாம் கோவில் தாக்குதல் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்ட ஆறு முசுலீம்களுக்கும் உரிய நட்ட ஈடு வழங்கக் கோரி டெல்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழக மாணவர்கள் ஜந்தர் மந்தரில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

''அரசு தரப்பின் சாட்சியங்களும் வாதங்களும் முக்கியமான ஒவ்வொரு தருணத்திலும் சிதறிச் சின்னாபின்னமாகிப் போயிற்று. வழக்கின் விசாரணை கட்டத்தில் தொடங்கி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை பொடா சட்டத்தின் கீழ் விசாரிக்க மாநில அரசு அனுமதி அளித்தது, அதன் அடிப்படையில் பொடா நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களைத் தண்டித்தது, அத்தண்டனையை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது வரையிலும் வழக்கின் ஒவ்வொரு கட்டத்திலும் உண்மை குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருக்கிறது'' என இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஏ.கே.பட்நாயக், வீ.கோபால கௌடா ஆகிய இருவரும் ஒருமனதாகத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

அக்ஷர்தாம் கோவில் மீதான தாக்குதல் செப்.25, 2002 அன்று நடந்தது. இத்தாக்குதல் பாகிஸ்தானைச் சேர்ந்த முசுலீம் தீவிரவாதிகள் நடத்திய பயங்கரவாத சதிச் செயல் எனக் கூறப்பட்டாலும், தாக்குதல் நடந்து கிட்டதட்ட ஓராண்டு வரையிலும் வழக்கு விசாரணையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை; ஒருவரும் கைது செய்யப்படவுமில்லை.

இப்படிபட்ட நிலையில், குறிப்பாக அக்ஷர்தாம் தாக்குதலின் ஓராண்டு நினைவுநாள் நெருங்கும் நிலையில் இந்த வழக்கு ஆகஸ்டு 28, 2003 அன்று குஜராத் குற்றப்பிரிவுக்குத் திடீரென மாற்றப்பட்டது. மறுநாளே இத்தாக்குதலில் தொடர்புடைய குஜராத்தைச் சேர்ந்த ஐந்து முசுலீம்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்தி வெளியானது. உ.பி.யைச் சேர்ந்தவரும் காஷ்மீரில் மெக்கானிக் ஷாப் நடத்திவருபவருமான சாந்த் கான் ஆகஸ்டு 31, 2003 அன்று காஷ்மீரில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இத்தாக்குதல் வழக்கு பொடா சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இச்சூழ்நிலைகள், கணக்குக் காட்ட வேண்டும் என்பதற்காகவே ஆறு முசுலீம்கள் தாக்குதல் வழக்கில் சிக்க வைக்கப்பட்டிருப்பதையும், அவர்களைத் தண்டித்துவிட வேண்டும் என்ற தீய நோக்கத்துடனேயே பொடா சட்டத்தின் கீழ் இவ்வழக்கு கொண்டுவரப்பட்டிருப்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

உச்சநீதிமன்றத் தீர்ப்பையடுத்து விடுதலை செய்யப்பட்ட முகம்மது சலீம், ''அக்ஷர்தாம் கோவில் தாக்குதல், ஹரேன் பாண்டியா கொலை, கோத்ரா ரயில் பெட்டி எரிப்பு - இந்த மூன்றில் ஏதாவது ஒரு குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு போலீசார் தன்னைச் சித்திரவதை செய்ததாக''ப் பத்திரிகையாளர்களுடன் நடந்த சந்திப்பில் குறிப்பிட்டு, இதுநாள்வரை மறைக்கப்பட்டிருந்த வழக்கு விசாரணையின் மோசடித்தனத்தை அம்பலப்படுத்தினார். ''ஏற்கெனவே தயாரித்து வைக்கப்பட்டிருந்த ஒரு கடிதத்தைத் தன்னிடம் காட்டி, அது போலவே உருது மொழியில் கடிதமொன்றை எழுதும்படித் தன்னை போலீசார் மூன்று நாட்கள் தொடர்ந்து சித்திரவதை செய்ததாக''க் கூறுகிறார், முஃப்தி அப்துல் மன்சூரி.

சித்திரவதை செய்யப்பட்டுத்தான் ஒப்புதல் வாக்குமூலங்கள் பெறப்பட்டிருப்பதை தீர்ப்பிலும் சுட்டிக்காட்டியுள்ள நீதிபதிகள், இந்த வாக்குமூலங்களையும், குற்றவாளிகளுள் ஒருவர் போலீசு தரப்பு சாட்சியமாக மாறியதையும் ஒட்டுமொத்தமாக நிராகரித்துவிட்டனர். மேலும், ''இத்தாக்குதல் குறித்த உண்மைகளைத் தனிப்பட்ட ரீதியில் ஆராய்ந்தும் விசாரணை அதிகாரியோடு கலந்து ஆலோசித்த பிறகும்தான் குஜராத் உள்துறை



காங்கிரசின் துணையோடு மோடி அரசால் நடத்தப்பட்ட போலி மோதல்களில் படுகொலை செய்யப்பட்ட (இடமிருந்து) இஷ்ரத் ஜஹான், சாதிக் ஜமால், சோராபுதின், துளசிராம் பிரஜாபதி மற்றும் மர்மமான முறையில் கொல்லப்பட்ட கவுசர் பீ. (கோப்புப் படங்கள்.)

அமைச்சர் பொடா சட்டத்தின் கீழ் இவ்வழக்கை விசாரிக்க ஒப்புதல் அளித்தார் என்பதை அரசு தரப்பு நிரூபிக்கவில்லை; உள்துறை அமைச்சர் தனது அறிவைச் செலுத்தி பொடாவின் கீழ் வழக்கை விசாரிக்க ஒப்புதல் அளித்ததாகத் தெரியவில்லை. இதன் காரணமாகவும், சட்டவிதிகளின்படியும் இந்த வழக்கு பொடா சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டிருப்பது செல்லத்தக்கதல்ல. விசாரணை அதிகாரியும், பொடா நீதிமன்றமும் பொடா சட்டவிதிமுறைகளின்படி குற்றவாளிகளிடமிருந்து வாக்குமூலங்களைப் பெறவில்லை. எனவே, பொடா சட்டவிதிகளின்படியே இந்த வாக்குமூலங்கள் செல்லத்தக்கதல்ல'' எனத் தீர்ப்பளித்திருக்கும் நீதிபதிகள், இந்த வழக்கு தொடர்பான அரசு தரப்பு சாட்சியங்கள் அனைத்தையும் நிராகரித்துவிட்டனர்.

''இந்த வழக்கு குறித்து பொடா நீதிமன்றமும் குஜராத் உயர் நீதிமன்றமும் வந்தடைந்துள்ள ஒத்த முடிவுகள் உண்மைக்குப் புறம்பானதாகவும் சட்டப்படி தவறானதாகவும் உள்ளன'' என்றும், ''மிகுந்த கவனத்தோடும் திட்டமிட்ட வகையிலும் உருவாக்கப்பட்டுள்ள அரசு தரப்பின் கதையாடல் அவநம்பிக்கையும் சந்தேகமும் கொள்ளத்தக்கது'' என்றும் நீதிபதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்த வார்த்தைகளுக்கு குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது பொய்யாக, மோசடியாக வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்பது தவிர வேறு பொருள்கொள்ள முடியாது.

2003-ஆம் ஆண்டில் குஜராத்தின் உள்துறை அமைச்சகத்தைத் தனது பொறுப்பில் வைத்திருந்த மோடிதான் இந்த வழக்கை பொடா சட்டத்தின் கீழ் விசாரிக்க ஒப்புதல் அளித்தார். உள்துறை அமைச்சர் தனது அறிவைச் செலுத்தி இந்த ஒப்புதலை வழங்கவில்லை எனத் தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதற்கு, மோடி ஒருதலைப் பட்சமாகவும் தீய உள்நோக்கத்துடனும்தான் அப்பாவி முசுலீம்கள் மீது பொடா சட்டத்தை ஏவிவிட்டிருக்கிறார் என்பது தவிர வேறெந்த விளக்கத்தை அளிக்க முடியும்?

குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக போலீசு தரப்பு சாட்சியங்கள் அனைத்தையும் நிராகரித்த நீதிபதிகள், சுயேச்சையான சாட்சியங்கள் யாரும் நிறுத்தப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர். குறிப்பாக, தாக்குதலின்பொழுது சுட்டுக் கொல்லப்பட்ட 'தீவிரவாதிகளிடமிருந்து' கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் உருது மொழியில் எழுதப்பட்ட கடிதத்தைக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான முக்கிய தடயமாகக் காட்டியது, குஜராத் போலீசு. இக்கடிதம் முரண்பாடுகளின் மூட்டையாக இருப்பதைச் சுட்டிக்காட்டியதோடு, இதனை நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவும் நீதிபதிகள் மறுத்துவிட்டனர்.

அப்பாவி முசுலீம்களைப் பிடித்து வந்து, அவர்களைச் சித்திரவதை செய்து ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்று, அவர்களுக்கு எதிராகப் பொய் சாட்சியங்களைத் தயாரித்து, இந்த மோசடிகள், அத்துமீறல்கள் அனைத்தும் அம்பலமாகிவிடக் கூடாது என்பதற்காகவே பாசிச கருப்புச் சட்டமான பொடாவின் கீழ் வழக்கைப் பதிவு செய்திருக்கிறது மோடி அரசு என்பதை இந்தத் தீர்ப்பு அம்பலப்படுத்திவிட்டது. நாடெங்கும் கவனத்தை ஈர்த்த இந்த வழக்கிலேயே மோடி அரசு இத்துணை தூரம் மோசடியாக நடந்துகொண்டிருக்குமானால், குஜராத்தில் முசுலீம் தீவிரவாதிகள் நடத்தியதாகக் கூறப்படும் மற்ற 'பயங்கரவாத' வழக்குகளில் சிக்கவைக்கப்பட்டுள்ள முசுலீம்களின் கதி என்னவாக இருக்கக்கூடும்? குற்றம் எதுவும் செய்யாமலேயே தண்டனை அனுபவித்துவரும் முசுலீம்களின், அவர்களது குடும்பத்தாரின் மனோநிலை எப்படியெல்லாம் குமுறிக் கொண்டிருக்கும்?

இந்த ஆறு பேரையும் விடுதலை செய்திருக்கும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகூட அரைகுறையானதுதான்; புண்ணுக்குப் புனுகு தடவுவது போன்றதுதான். குற்றம் எதுவும் செய்யாமலேயே சிறைதண்டனை அனுபவித்திருக்கும் இவர்களின் மறுவாழ்வு குறித்துப் பேசாத, இவர்களை இந்தக் கதிக்கு ஆளாக்கிய மோடி கும்பலை, போலீசு அதிகாரிகளை, நீதிபதிகளைத் தண்டிப்பது குறித்துப் பேசாத தீர்ப்பை வேறெப்படிக் கருத முடியும்? அதனால்தான் தூக்குதண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கும் முஃப்தி அப்துல் மன்சூரி, ''இந்த விடுதலை வெறுமையானது; கடந்த 11 ஆண்டு கால ஒவ்வொரு நொடியிலும் நீதி கொன்று புதைக்கப்பட்டுவிட்டது'' என விரக்தி மேலிடக் கூறுகிறார்.

இது அவரின் மனநிலை மட்டுமல்ல; ஹரேன் பாண்டியா கொலை வழக்கில், மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கில், ஹைதராபாத் குண்டு வெடிப்பு

வழக்கில், இவை போன்று இன்னும் பல்வேறு வழக்கு களில் பொய்யாகச் சிக்க வைக்கப்பட்டு, பல ஆண்டு சிறைவாசத்திற்குப் பிறகு விடுதலையடைந்திருக்கும் ஒவ்வொரு முசுலீமின் மனநிலையும் இப்படித்தான் விரக்தியடைந்திருக்கும்; அல்லது பழிவாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும்.

முசுலீம்கள் மீது இழைக்கப்படும் இந்த அநீதி களுக்குக் காரணமான இந்து மதவெறி பாசிச கும்பலைத் தண்டிக்கத் துணியாமல், அதன் கையில் அரசு அதி காரத்தை ஒப்படைத்துள்ள சமூகத்திற்கு; சட்ட விரோதமான முறையில் தண்டிக்கப்பட்ட முசுலீம் களுக்கு நீதியும் மறுவாழ்வும் பெற்றுத் தரும் பொறுப்பைச் சுமக்கத் தயாராக இல்லாத சமூகத்திற்கு, முசுலீம் தீவிரவாதம் குறித்துக் குற்றஞ்சொல்வதற்கு எந்த விதமான தார்மீக அடிப்படையும் கிடையாது.

●●●

அக்ஷர்தாம் தாக்குதலில் ஈடுபட்ட இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டனர்; அவர்கள் யார் என்பது இன்று வரை சட்டப்படி நிரூபிக்கப்படவில்லை. குற்றஞ் சாட்டப்பட்ட ஆறு முசுலீம்களும் தீவிரவாதிகள் கிடையாது, அப்பாவிகள் என்ற உண்மை நிரூபிக்கப் பட்டு, விடுதலையடைந்துவிட்டனர். அப்படி யென்றால், இத்தாக்குதலை நடத்தியது யார்? இவ்வுண்மையைக் கண்டுபிடிக்க முயலாமல் கடந்த பத் தாண்டுகளுக்கும் மேலாக ஒரு பொய்வழக்கை மோடி அரசு நடத்திவந்த காரணமென்ன? இந்தத் தாக்குதல், மோடி, தன்னைத் தீவிரவாதத்துக்கு எதிரான வலிமை மிக்க தலைவராகக் காட்டிக்கொள்ள நடத்தப்பட்ட நாட கமாக ஏன் இருக்கக் கூடாது?

கடந்த பத்தாண்டுகளாக மைய ஆட்சியில் இருந்த, சி.பி.ஐ., ஐ.பி., ரா என போலீசையும் உளவுத்துறை களையும் கையில் வைத்திருந்த காங்கிரசு கட்சியும் இந்தக் கேள்வியை எழுப்பவில்லை என்பதும், உச்சநீதி மன்றத் தீர்ப்பு வெளிவந்த பிறகும் மோடி அரசின் மோசடி களை, அத்துமீறல்களை அம்பலப்படுத்த அக்கட்சி துணியவில்லை என்பதும் ஒதுக்கித் தள்ளக்கூடிய விசயமல்ல.

முசுலீம்களுக்கு எதிரான மோடியின் இந்து மதவெறி பிடித்த நடவடிக்கைகளை எதிர்க்கும் பம்மாத்து நடவடிக் கைகளில்கூட காங்கிரசு கட்சி ஈடுபட்டதில்லை. மாறாக, காங்கிரசு கட்சியும், அதன் தலைமையில் இருந்த மைய அரசும் கடந்த பத்தாண்டுகளாக மோடியின் பயங்கர வாதக் குற்றங்களில் பங்காளியாகச் செயல்பட்டு வந்தது என்பதுதான் உண்மை.

குஜராத் அரசில் வருவாய்த்துறை இணையமைச்சராக இருந்த ஹரேன் பாண்டியா கடந்த 2003-ஆம் ஆண்டு மர்மமான முறையில் கொல்லப்பட்டார். இவ்வழக்கை விசாரிக்கும் பொறுப்பை மோடி அரசுதானே முன்வந்து சி.பி.ஐ.யிடம் ஒப்படைத்தது. இப்படுகொலை தொடர்பாக 12 முசுலீம்களைக் கைது செய்த சி.பி.ஐ., அவர்களைத் தீவிரவாதிகளாகவும் சித்தரித்தது. இம்



குஜராத்தில் அடுத்தடுத்து பல போலிமோதல் படுகொலைகளை நடத்திய மோடி அரசை நீக்கக் கோரியும், அப்படுகொலைகள் அனைத்தையும் சி.பி.ஐ. விசாரிக்கக் கோரியும் ஜன் சங்கர்ஷ் மஞ்ச் என்ற அமைப்பினர் அகமதாபாத் நகரில் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

முசுலீம்கள் கீழமை நீதிமன்றத்தில் தண்டிக்கப் பட்டாலும், குஜராத் உயர் நீதிமன்றம் சில ஆண்டு களுக்கு முன்பே இவர்கள் அனைவரையுமே விடுதலை செய்துவிட்டது.

உயர் நீதிமன்றத் தீர்ப்பையடுத்து இந்த வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டுமெனக் கோரிவருகிறார் ஹரேன் பாண்டியாவின் மனைவி. இக்கோரிக்கையை சி.பி.ஐ. நேரடியாக நிராகரித்துவிட்டதென்றால், பா.ஜ.க.வோ விசாரணைக் கமிசனைக் கோரும் நாட கத்தை நடத்தி வருகிறது. உண்மை வெளியே தெரிந்து விடக் கூடாது என்பதில் காங்கிரசும் பா.ஜ.க.வும் பங் காளிகளாக நடந்துவருவதற்கு இதுவொரு சான்று.

இழிபுகழ் பெற்ற இஷ்ரத் ஜஹான் போலி மோதல் படுகொலைவழக்கில் கொல்லப்பட்ட நால்வரையும் குஜராத் போலீசிடம் பிடித்துக் கொடுத்தது, அவர்களைக் கொல்வதற்குச் சதித் திட்டம் தீட்டியது, அதற்கான ஆயு தங்களை குஜராத் போலீசுக்குக் கொடுத்து உதவியது ஆகிய அனைத்திலும் மைய அரசின் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த இணை இயக்குநர் ராஜேந்தர் குமார் உள்ளிட்ட நான்கு அதிகாரிகளுக்குப் பங்கிருப்பது தற் பொழுது நிரூபணமாகியிருக்கிறது.

இஷ்ரத் ஜஹான் உள்ளிட்ட நால்வரும் மோடியைக் கொல்லும் நோக்கத்தோடு அகமதாபாத் நோக்கி காரில் வந்துகொண்டிருப்பதாக ஒரு மோசடியான உளவுத் தக வலை உருவாக்கி அளித்ததே மைய அரசின் உளவுத் துறைதான். மேலும், இவ்வழக்கில் இஷ்ரத் ஜஹானோடு சேர்த்துக் கொல்லப்பட்ட பிரானேஷ் பிள்ளை என்ற ஜாவேத் ஷேக், மத்திய உளவுத்துறையின் ஆள்காட்டி என்பதும் தற்பொழுது அம்பலமாகியிருக்கிறது.

இப்போலி மோதல் கொலை வழக்கை விசாரிக்கக் கோரி குஜராத் உயர்நீதி மன்றத்தில் நடந்து வந்த வழக் கில் அவர்கள் நால்வரும் லஷ்கர்-இ-தொய்பா

அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் என மைய அரசின் உள்துறை அமைச்சகம் பிரமாண பத்திரத்தைத் தாக்கல் செய்து, மோடி அரசின் படுகொலைக்கு முட்டுக் கொடுத்தது. இவற்றின் அடிப்படையில்தான் மோடி கும்பல் இந்தப் பச்சைப் படுகொலையை, நாட்டைக் காக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையாகக் காட்டி வருகிறது.

இப்படுகொலை நடப்பதற்குச் சற்று முன்னதாகவும், அதற்குப் பின்னரும் குஜராத் அரசின் துணை உள்துறை அமைச்சராக இருந்த அமித் ஷாவுக்கும், படுகொலையை நடத்திய போலீசு அதிகாரிகளுக்கும் இடையே தொலைபேசி உரையாடல்கள் நடந்துள்ளன. இது மட்டுமின்றி, இப்படுகொலை குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வன்சாரா, சிங்கால் உள்ளிட்ட பல போலீசு அதிகாரிகளும் மோடி, அமித் ஷா ஆகிய இருவரின் ஒப்புதலோடுதான் அந்நால்வரையும் சுட்டுக் கொன்றதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளனர். எனினும், இப்படுகொலை வழக்கில் அமித் ஷாவைக் குற்றஞ்சுமத்த எந்த முகாந்திரமும் இல்லை எனத் தேர்தல் முடிவுகள் வருவதற்கு முன்பே நீதிமன்றத்தில் தெரிவித்து, அச்சதிகாரனைக் காப்பாற்றியிருக்கிறது, சி.பி.ஐ.

துளசிராம் பிரஜாபதியைக் கடத்திச் சென்று போலி மோதலில் படுகொலை செய்த போலீசு அதிகாரிகளுக்கும் குஜராத் முதல் அமைச்சர் அலுவலகத்தில் சிறப்பு அதிகாரியாகவும் தீவிரவாதத் தடுப்பு போலீசு படையின் இணையதளப் பிரிவின் பொறுப்பாளராகவும் பணியாற்றி வந்த பாரக் ஷாவிற்கும் இடையே அக்கொலையை நடத்துவதற்குத் திட்டம் தீட்டப்பட்ட காலத்தில் நடந்த தொலைபேசி உரையாடல்கள் தற்பொழுது அம்பலமாகியுள்ளன. இத்தொலைபேசி உரையாடல்கள் துளசிராம் பிரஜாபதி போலி மோதல் கொலையும் குஜராத் முதல்வராக இருந்த மோடிக்குத் தெரிந்துதான், அவரது ஒப்புதலுடன்தான் நடந்தது என்பதற்கான ஆதாரங்களாகும். எனினும், இவ்வழக்கை விசாரித்துவரும் சி.பி.ஐ., மோடியைக் காப்பாற்றும் நோக்கில் இத்தொலைபேசி உரையாடல்களை ஆதாரமாக எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டது.

குஜராத்தைச் சேர்ந்த சாதிக் ஜமால் என்ற முசுலீம் இளைஞர் கடந்த 2003-ஆம் ஆண்டு ஜனவரியில் அம் மாநில தீவிரவாதத் தடுப்பு போலீசாரால் போலி மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரை லஷ்கர் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதியாகவும், மோடியைக் கொல்வதற்காகவே அவர் குஜராத்திற்கு வந்ததாகவும் கட்டுக்கதையை உருவாக்கியதில் குஜராத் போலீசுக்கு மட்டுமல்ல, மகாராஷ்டிரா காங்கிரசு கூட்டணி அரசிற்கும் மைய அரசின் புலனாய்வுத் துறைக்கும் முக்கிய பங்குண்டு. மகாராஷ்டிரா போலீசில் என்கௌண்டர் ஸ்பெஷலிஸ்டு எனப் பெயர்பெற்ற கிரிமினல் பேர்வழியான தயா நாயக், சாதிக் ஜமாலை குஜராத் போலீசிடம் கள்ளத்தனமாக ஒப்படைத்ததும், அவர் அங்கிருந்து குஜராத்திற்குக் கடத்திவரப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டதும் இப்பொழுது அம்பலமாகியிருக்கும் உண்மைகள்.

மோடி அரசின் பயங்கரவாதக் குற்றங்களுக்கு மட்டு மல்ல, காவி பயங்கரவாதத்தின் இளைய பங்காளியாக நடந்துகொள்வதுதான் காங்கிரசின் பரம்பரை பழக்கம். காங்கிரசு ஆட்சி மற்றும் கட்சியின் துணையின்றி பாபர் மசூதி இடிப்பையும் மும்பய்க் கலவரத்தையும் இந்து மதவெறிக் கும்பலால் நடத்தியே இருக்க முடியாது. மகாராஷ்டிரா காங்கிரசு கூட்டணி அரசு மும்பய்க் கலவரம் குறித்த கிருஷ்ணா கமிசன் அறிக்கையை கிடப்பில் போட்டு வைத்திருக்கிறது என்றால், குஜராத் படுகொலை குற்றத்திலிருந்து மோடியை விடுவித்த ராகவன் அறிக்கையை காங்கிரசு கட்சி கேள்விக்குள்ளாக்கியதே இல்லை. டெல்லி சீக்கியப் படுகொலை, நெல்லி முசுலீம் படுகொலை உள்ளிட்டு பல்வேறு இடங்களில் காங்கிரசே இந்து மதவெறியைத் தூண்டிவிட்டுக் கலவரங்களை நடத்தியிருக்கிறது. மாலேகான், அஜ்மீர், சம்ஜௌதா விரைவு ரயில் உள்ளிட்டு பல்வேறு குண்டு வெடிப்புகளை நடத்தியிருக்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பலைப் பயங்கரவாதிகளென அம்பலப்படுத்த காங்கிரசு முனையாமல் இருப்பதை இந்தப் பின்னணியிலிருந்துதான் புரிந்துகொள்ள வேண்டும்.

இவை அனைத்திற்கும் மேலாக, முசுலீம் தீவிரவாதம், பாக். தூண்டிவிடும் எல்லைதாண்டிய பயங்கரவாதம் குறித்தும், அதனை ஒடுக்குவது குறித்தும், தேச ஒற்றுமை-ஒருமைப்பாடு குறித்தும் பா.ஜ.க.விற்கும், காங்கிரசு கட்சிக்கும் இடையே எந்த வேறுபாடும் கிடையாது. ஓட்டுப் பொறுக்குவதற்காக மதச்சார்பின்மை வேடம் போடும் காங்கிரசின் மூளையில் நயவஞ்சகம் நிறைந்த மென்மையான இந்துத்துவா கொள்கைதான் மறைந்திருக்கிறது. அதனால்தான் நாடெங்கும் இந்து மதவெறி அரசியல் ஆழமாக வேரூன்றி வரும் இவ்வேளையில், அதனை எதிர்க்க வழியின்றி முடமாகிக் கிடக்கிறது, காங்கிரசு கட்சி.

● குப்பன்

> **அப்பாவி முசுலீம்களைப் பிடித்து வந்து, அவர்களைச் சித்திரவதை செய்து ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்று, அவர்களுக்கு எதிராகப் பொய் சாட்சியங்களைத் தயாரித்து, இந்த மோசடிகள், அத்துமீறல்கள் அனைத்தும் அம்பலமாகிவிடக் கூடாது என்பதற்காகவே பாசிச கருப்புச் சட்டமான பொடாவின் கீழ் வழக்கைப் பதிவு செய்திருக்கிறது மோடி அரசு என்பதை அக்ஷர்தாம் தீர்ப்பு அம்பலப்படுத்திவிட்டது.**

## “நீங்கள் எங்களோடு இல்லையென்றால், நீங்களும் மாவோயிஸ்டுகள்தான்!”

# அறிவுத்துறையினருக்கு எதிராகத் தொடரும் அரசு பயங்கரவாதம்!

பசுமை வேட்டை என்ற பெயரில் பழங்குடியின மக்களின்மீதான அரசு பயங்கரவாத அடக்குமுறையை எதிர்த்து கருத்தியல் தளத்தில் போராடிவரும் டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியரான முனைவர் ஜி.என்.சாய்பாபா, கடந்த மே 9 அன்று மகாராஷ்டிர மாநில பயங்கரவாதத் தடுப்புப் போலீசாரால் சட்டவிரோதமாகக் கடத்திச் செல்லப்பட்டு சிறையிடப்பட்டுள்ளார். சக்கர நாற்காலியின் துணையுடன் இயங்கிவரும் மாற்றுத் திறனாளியான பேராசிரியர் சாய்பாபா, தனது பணிகளை முடித்துக் கொண்டு மதிய உணவுக்காக வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது வழிமறித்து அவரையும் அவரது வாகன ஓட்டுநரையும் கண்களைக் கட்டி, விமானம் மூலம் நாக்பூருக்குக் கடத்திச் சென்ற போலீசார், தடை செய்யப்பட்ட மாவோயிஸ்டு கட்சியுடன் அவர் தொடர்பு வைத்துள்ளதாகவும், அவர் சார்ந்துள்ள புரட்சிகர ஜனநாயக முன்னணி மூலம் அக்கட்சிக்கு ஆள்திரட்டி நகர்ப்புறங்களில் தளம் அமைக்க முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டி சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் (ஊபா சட்டம்) கைது செய்து அவரைச் சிறையிலடைத்துள்ளனர்.

‘‘மக்கள் மீதான போருக்கு எதிரான அரங்கம்’’ எனும் அமைப்பின் ஒருங்கிணைப்பாளராகவும், ‘‘புரட்சிகர ஜனநாயக முன்னணி’’யின் இணைச் செயலாளராகவும் இயங்கிவந்த பேராசிரியர் சாய்பாபா, ‘வளர்ச்சி’ என்ற பெயரில் நடக்கும் அரசு பயங்கரவாத அடக்குமுறையை எதிர்த்து தொடர்ந்து பிரச்சாரத்தை மேற்கொண்டார். சாய்பாபா மட்டுமின்றி உத்தர்கண்ட் மாநில புரட்சிகர ஜனநாயக முன்னணியின் தலைவர் ஜீவன் சந்திராவும் இதே போல மே 5-ஆம் தேதியன்று கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டுள்ளார். இதற்கு முன்னர், டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் ஹேம் மிஸ்ராவும், பத்திரிகையாளர் பிரசாந்த் ரஹியும் கடந்த டிசம்பர் மாதத்தில் மாவோயிஸ்டு பயங்கரவாதிகள் என்று குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர்.



மகாராஷ்டிர மாநில பயங்கரவாதத் தடுப்புப் போலீசாரால் சட்டவிரோதமாகக் கடத்திச் செல்லப்பட்டு சிறையிடப்பட்டுள்ள டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜி.என்.சாய்பாபா.

பார்ப்பனியத்தையும் சாதி ஆதிக்கத்தையும் எதிர்த்து புரட்சிகர கலைநிகழ்ச்சிகளை நடத்திவரும் தாழ்த்தப்பட்டோரின் கபிர் கலா மன்ஞ் என்ற கலை-இலக்கிய அமைப்பு மகாராஷ்டிரா அரசால் கடந்த ஆண்டில் தடை செய்யப்பட்டு அவ்வமைப்பினர் தேசவிரோதிகளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

பசுமை வேட்டை என்ற பெயரால் நடக்கும் அரசு பயங்கரவாதத்தை எதிர்த்து கருத்தியல் தளத்தில் பிரச்சாரத்தை மேற்கொண்ட பஞ்சாபின் இந்தியமக்கள் ஜனநாயக முன்னணி என்ற அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான டாக்டர் தர்ஷண்பால், மாவோயிஸ்டு கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினரான தோழர் கோபாட் காந்தி, டெல்லி பல்கலைக்கழக துணைப் பேராசிரியர் டாக்டர் சுனில் மண்டிவால் முதலானோர் மாவோயிஸ்டு பயங்கரவாதிகள் என்று குற்றம் சாட்டப்பட்டு ‘‘ஊபா’’ சட்டத்தின் கீழ் ஏற்கெனவே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரசு பயங்கரவாத அடக்குமுறையை எதிர்க்கும் எந்தக் கருத்தையும் ஆளும் கும்பல்கள் அனுமதிக்கத் தயாரில்லை என்பதையும் அவற்றை கருவிலேயே அழிக்கத் துடிப்பதையுமே இக்கைது நடவடிக்கைகள் காட்டுகின்றன. இச்சட்டவிரோத கைதுகளையும் ‘வளர்ச்சி’ என்ற பெயரால் தொடரும் அரசு பயங்கரவாத அடக்குமுறையையும் எதிர்த்து அனைத்து புரட்சிகர ஜனநாயக சக்திகளும் அணிதிரண்டு போராட வேண்டிய அவசியத்தையே இன்றைய நிலைமைகள் உணர்த்துகின்றன.

● குமார்

பொய்க்குற்றம் சாட்டி பயங்கரவாத ஊபா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பேராசிரியர் ஜி.என்.சாய்பாபாவை உடனடியாக விடுதலை செய்யக் கோரி புரட்சிகர ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் டெல்லியில் நடத்திய ஆர்ப்பாட்டம்.



# அ.தி.மு.க.வின் வெற்றி... தேர்தல் ஆணையத்துக்கு நன்றி!

மோடியின் வெற்றி எப்படி சாத்திய மானது என்று ஆய்வு செய்து கொண்டிருக்கும் ஊடகங்கள், தமிழகத்தில் 37 இடங்களையும் 44.3% வாக்குகளையும் பெற்று ''வரலாறு காணாத'' வெற்றியை அ.தி.மு.க. எப்படி சாதிக்க முடிந்தது என்ற கேள்வியை எழுப்புவதில்லை. ஆட்சிக்கு வந்த நாள் முதல் தொடர்ந்து கொண்டிருக்கும் கடுமையான மின் வெட்டு, கடும் விலைவாசி உயர்வு, தண்ணீர் பஞ்சம், மணற் கொள்ளை, தலை விரித்தாடும் குற்றச்செயல்கள் போன்ற அனைத்துக்கிடையிலும், நம்ப முடியாத இந்த வெற்றியை ஜெ. எப்படிப் பெற முடிந்தது என்ற கேள்விக்குப் பதிலாக, தி.மு.க.வின் தோல்விக்கு காரணம் என்ன என்று ஆராய்ந்து அறிவுரை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தின் தேர்தல் செய்திகளைத் தொடர்ந்து வாசித்தவர்கள் கீழ்க்கண்ட விடயங்களை அவதானித்திருக்க முடியும். துவக்கத்தில் நாற்பதும் அ.தி.மு.க.வுக்கே என்று கருத்துக் கணிப்பு வெளியிட்ட ஊடகங்கள், தேர்தல் பிரச்சாரம் பாதி நாட்களைக் கடந்திருந்த நிலையில், அ.தி.மு.க. 15 இடங்களுக்குமேல் பெறுவதற்கு வாய்ப்பில்லை என்று உளவுத்துறை கூறியுள்ளதாக செய்திகள் வெளிவந்தன. கருத்து கணிப்புகளும் இதையே உறுதி செய்வதாக ஜெ ஆதரவு தொலைக்காட்சிகளும் பத்திரிகைகளுமே செய்தி வெளியிட்டன.

இத்தகைய சூழ்நிலையில்தான், இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத வகையில், ''இரவு பத்து மணிக்கு மேல் வேட்பாளர்கள் வீடு வீடாக பிரச்சாரம் செய்யலாம்'' என்று மாநில தேர்தல் ஆணையர் பிரவீண்குமார் அறிவித்தார். ''இது அதிமுகவின் பணப்பட்டுவாடாவுக்கான ஏற்பாடு'' என்று கூறி எல்லா கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்தன; ஆனாலும் பயனில்லை.

பிறகு, காஷ்மீர், வட கிழக்கிந்தியா, சட்டீஸ்கர் போன்ற மாநிலங்களில் கூட இல்லாத வகையில் தேர்தலுக்கு முதல் நாள் இரவு 144 தடை உத்தரவு பிறப்பித்தார் பிரவீண் குமார். இதுவும் பணப்பட்டுவாடாவுக்குத்தான் என்று என்று எல்லா கட்சிகளும் ஆட்சேபம் தெரிவித்தார்கள். பயனில்லை. பல இடங்களில் மாவட்ட ஆட்சியர்கள் மூலமும், போலீசு வேன்கள் மற்றும் ஆம்புலன்சுகள் மூலமாகவும் பணப்பட்டுவாடா நடைபெற்றதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது. ரூ.3,000 கோடிக்கு மேல் பணம் கொடுக்கப்பட்டிருப்பதாக ராமதாசும், இது பணம் கொடுத்து வாங்கிய வெற்றி என்று பா.ஜ.க.தலைவர் பொன்.இராதாகிருஷ்ணனும் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினர். பணம் கொடுத்துப் பிடிபட்டவர்கள் எண்ணிக்கையிலும் அ.தி.மு.க. தான் அதிகம் என்பதையும் தேர்தல் ஆணையத்தால் மறுக்க முடியவில்லை. மாநிலம் முழுவதுமே மொத்த தேர்தலையும் ரத்து செய்யும் அளவுக்கு இந்த முறைகேடு நடந்திருந்த போதிலும், ஆணையம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஜெ.வைப் பொருத்தவரை பிரதமராவது என்ற நப்பாசை ஒருபுறமிருந்தாலும், அதைவிட முக்கியமாக 40 இடங்களையும் வென்று, அமையவிருக்கும் அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கும் அளவுக்கு வலிமையான நிலையில் இருந்தால்தான், தன் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையை நிறுத்தவும் முடக்கவும் முடியும் என்பதால், எப்படியாவது வெற்றி பெற்றாகவேண்டும் என்ற வெறியில் இருந்தார். இதன் காரணமாகத்தான், கருத்து கணிப்புகள் பாதகமாக இருக்கவே, வழக்கத்துக்கு விரோதமாக ஒருநாள் முன்னதாகவே பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு போயஸ் தோட்டத்தில் எல்லா வேட்பாளர்களையும் அழைத்து அவசரக் கூட்டம் நடத்தினார். அங்கே பணப்பட்டுவாடா திட்டம் போடப்பட்டு, அதனை நடத்தி முடிக்க உதவும் வகையில்தான் ஆணையம் 144 தடை உத்தரவும் பிறப்பித்திருக்கிறது என்று நாம் ஊகிக்கவும் சந்தேகிக்கவும் எல்லா முகாந்திரங்களும் இருக்கின்றன. பணம் மட்டும்தான் வெற்றிக்கு முழுக்காரணம் என்று இதற்குப் பொருள் அல்ல. தேர்தல் ஆணையம், மாவட்ட நிர்வாகம், போலீசு ஆகியவற்றின் துணையுடன் ஒரு அப்பட்டமான கிரிமினல் நடவடிக்கை எப்படி அரங்கேறியிருக்கிறது என்பதற்கான விளக்கமே இது.

மற்றபடி அ.தி.மு.க.வுக்கு சுமார் 30 சதவீத வாக்குகள் கொண்ட ஒரு இரட்டை இலை வாக்கு வங்கி இருப்பது உண்மை. பெரிதும் அரசியலற்றதும் அநேகமாக நிலையானதுமான இந்த வாக்கு வங்கியுடன், தென் மாவட்டங்கள் மற்றும் மேற்கு மாவட்டங்களின் ஆதிக்க சாதிகளும் அ.தி.மு.க.வின் வாக்கு வங்கியாக சேர்ந்திருக்கின்றன. கடும் மின்வெட்டின் காரணமாக ஆயிரக்கணக்கான சிறு தொழில்களும் விசைத்தறியும் அழிந்து போயிருக்கும் மேற்கு மாவட்டங்களில், இந்த அழிவு தோற்றுவித்திருக்க வேண்டிய கோபத்தைக் காட்டிலும், சாதி உணர்வுதான் மக்களிடம் முதன்மைப் பாத்திரத்தை ஆற்றியிருக்கிறது. இப்படிக் கிடைத்த வாக்குகளுக்கு மேல், சுமார் 10 சதவீதத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைக் கவர்வதில்

பணம் முக்கிய பங்காற்றியிருக்கிறது என்றே மதிப்பிட முடிகிறது.




வாக்குகளைப் பணத்துக்கு வாங்கியதைச் சொல்லும்போது, விற்கத்தயாராக இருந்த மக்களின் அரசியல் உணர்வு நிலை பற்றியும் நாம் குறிப்பிடாமல் இருக்க முடியாது. கடுமையான மின்வெட்டு, தண்ணீர் பஞ்சம், விலைவாசி உயர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் இருந்த போதிலும், அவையெதுவும் பணத்தை வாங்கிக் கொண்டு ஓட்டு போடுபவர்களுக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்க அரசு தவறியிருக்கிறது என்ற பார்வையே இல்லாமல், வாங்கிய பணத்துக்கு விசுவாசமாக வாக்களிப்பது என்ற கண்ணோட்டம்தான் மக்களிடம் ஓங்கியிருந்திருக்கிறது. பல இடங்களில் தமக்குப் பணம் விநியோகமாகவில்லை என்று போராட்டங்கள் நடத்தும் அளவுக்கு ஓட்டுக்குப் பணம் வாங்குவது சமூக அங்கீகாரத்தைப் பெற்று விட்டது. பணம் வாங்காமல் வாக்களித்தவர்கள், இலவசதிட்டங்களால் கவரப்பட்டோ அல்லது இரட்டை இலை விசுவாசத்துக்கோ, அ.தி.மு.க.வின் சாதிய ஓட்டு வங்கியாகவோ வாக்களித்திருக்கிறார்கள்.

''எல்லா கட்சி வேட்பாளர்களும் கோடீசுவரர்கள், அனைவருமே கொள்ளையடிக்கத்தான் தேர்தலில் நிற்கிறார்கள், எந்தக் கட்சிக்கும் கொள்கை கிடையாது'' என்ற சூழ்நிலையில், யாருக்கு வாக்கு எனத் தீர்மானிப்பதில் பணம் அறுதி பாத்திரத்தை ஆற்றியிருப்பதும் தெரிகிறது.

இது மட்டுமின்றி, ஜெ.ஆதரவு அலையை உருவாக்குவதில் ஊடகங்கள் ஆற்றியிருக்கும் பங்கும் முக்கியமானது. முன்னர் அழகிரியின் திருமங்கலம் பார்முலா தேசிய அளவில் இழிபுகழ் பெறக் காரணமாக இருந்த ஊடகங்கள் எதுவும், தமிழகத்தின் எல்லா தொகுதிகளையும் திருமங்கலமாக மாற்றியிருக்கும் ஜெ.வை அம்பலப்படுத்தவில்லை. அதுமட்டுமல்ல, எந்த அழகிரியின் கிரிமினல் நடவடிக்கைகளைக்காட்டி தி.மு.க.வைச் சாடினார்களோ, அதே அழகிரிக்கு வெட்கமே இல்லாமல் ஊடகங்கள் புகழ் பாடின. ஒரு செய்தி என்ற முறையில் கூட ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கின் விவரங்களையும், நீதிமன்றத்தில் வெளியிடப்பட்ட சொத்துப் பட்டியலையும், அந்த வழக்கை இழுத்தடிக்க ஜெ. மேற்கொள்ளும் கீழ்த்தரமான தந்திரங்களையும் ஊடகங்கள் வெளியிடவில்லை. ஜெயலலிதாவின் கையாளாகவே நடந்து கொண்ட பிரவீண் குமாரையும், பண விநியோகத்தைப் பொறுப்பேற்று நடத்திய மாவட்ட நிர்வாகம் மற்றும் போலீசு அதிகாரிகளையும் அம்பலப்படுத்தவில்லை. எனவே, ஜெ. வுக்கு எதிரான கருத்து, ஊடகங்கள் மூலம் உருவாவதற்கான வாய்ப்பு கடுகளவும் இல்லை.

மொத்தத்தில் பார்ப்பன ஊடகங்கள், பார்ப்பனரல்லாத முதலாளிகளின் ஊடகங்கள் ஆகிய அனைத்தும், ''பா.ஜ.க. அல்லது அ.தி.மு.க.வை விட்டால் தமிழகத்துக்கு கதியில்லை'' எனுமளவுக்கும், ''ஒழிந்தது திராவிட இயக்கம்'' என்று குதூகலிக்கும் அளவுக்கும், பெயரளவிலான நடுநிலை பாசாங்கு கூட இல்லாமலும் நடந்து கொண்டன. வாக்காளர்களுக்குக் கொடுப்பதற்கு முன்னால், வாக்காளர்களின் கருத்தை வடிவமைக்கும் ஊடகங்களுக்கு பணம் வாரியிரைக்கப்பட்டது. மகாராட்டிரத்தில் சாய்நாத் அம்பலப்படுத்திய ''பெய்டு மீடியா'', தமிழகத்தைப் பொருத்தவரை அதிகாரபூர்வமாகவே பத்திரிகைகளின் தொழிலாகிவிட்டது.

ஊடகங்களின் பார்ப்பன ஆதரவு, ராமதாசு மட்டுமின்றி பாரிவேந்தர், சண்முகம், ஈசுவரன் முதலான சாதி வெறியர்களுக்குக் கிடைத்திருக்கும் புதுவாழ்வு, விஜயகாந்த் கட்சி என்று அழைக்கப்படும் ஆபாசம் ஒரு அரசியல் கட்சியாக மக்களால் அங்கீகரிக்கப்பட்டிருப்பது, இந்தக் கூட்டத்தின் தோளிலேறி, பத்து சதவீத வாக்குளை பா.ஜ.க. தமிழகத்தில் பெற்றிருப்பது - இவை அனைத்தும், இதுவரையில்லாத அளவு மிகவும் ஆபத்தான ஒரு அரசியல் எதிர்காலத்தை தமிழகம் எதிர்நோக்கியிருப்பதையே நமக்குக் காட்டுகின்றன.

● அஜித்

# முகுல் சின்ஹா:

# இந்துவெறி பாசிசத்துக்கு எதிரான போராளி!

இந்துவெறி பாசிச பயங்கரவாதிகளுக்கு எதிராக அயராமல் போராடி வந்த மனித உரிமைப் போராளியும் பிரபல தொழிற்சங்கவாதியுமான முகுல் சின்ஹா கடந்த மே 12 அன்று மறைந்துவிட்டார்.

வங்கத்தில் பிறந்து கான்பூரில் படித்து இயற்பியல் முனைவரான சின்ஹா, குஜராத்தின் அகமதாபாத்தில் ஆய்வுக்கூட விஞ்ஞானியாகப் பணியாற்றியபோது, அவர் தொழிலாளர்களை அணிதிரட்டிய குற்றத்துக்காக சட்டவிரோதமாகப் பணிநீக்கம் செய்யப்பட்டார். தனது பணிநீக்கத்துக்கு எதிராக வழக்கு மன்றங்களுக்குச் சென்றபோது, தன்னைப் போலவே கணக்கற்ற தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டிருப்பதையும் தொழிலாளர்களின் மீதான சுரண்டல் ஒடுக்குமுறையையும் உணர்ந்த அவர், சட்டக் கல்வியை முடித்து வழக்குரைஞராகி, தொழிலாளர்களின் உரிமைக்கான வழக்குகளை ஏற்று நடத்தினார். அவரது சட்ட ஆலோசனை அலுவலகமே தொழிற்சங்க அலுவலகமாகியது. தொழிலாளர் உரிமை பறிப்புக்கும் வேலைநீக்கத்துக்கும் எதிரான பல வழக்குகளை நடத்திய சின்ஹா, 2002-இல் குஜராத்தில் பயங்கரவாத மோடியால் தலைமைதாங்கி நடத்தப்பட்ட இந்துவெறி படுகொலைகளை எதிர்த்து இப்பாசிஸ்டுகளுக்கு எதிராக இதர அமைப்பினருடன் இணைந்து வீதிகளில் தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்.



இந்துவெறி பாசிச பயங்கரவாதிகளுக்கு எதிரான மனித உரிமைப் போராளியும் பிரபல தொழிற்சங்கவாதியுமான முகுல் சின்ஹா.

தனது சக அமைச்சரான ஹரேன் பாண்டியாவையே கொன்ற பாசிச பயங்கரவாத மோடி ஆட்சியின் பிடியிலுள்ள குஜராத்திலேயே இருந்து கொண்டு, பயங்கரவாத மோடியின் முகத்திரையைக் கிழிப்பதென்பது சாதாரண விவகாரமல்ல. மிகப்பெரிய பாசிச அரசு எந்திரத்தை எதிர்த்து அஞ்சாமல் போராடுவதற்கான வைராக்கியமும் அசாத்திய துணிச்சலும் கொண்டவராக விளங்கிய சின்ஹா, குஜராத்தில் நடந்த இந்துவெறி பயங்கரவாத வெறியாட்டத்தில் கொல்லப்பட்டோர் தொடர்பான வழக்குகளை விசாரித்த நானாவதி கமிசனில் ஆஜராகி பல முக்கிய சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்து இப்படுகொலைகளில் இந்துவெறி அமைச்சர்கள் - அரசு அதிகாரிகளின் பங்கினைத் தோலுரித்துக் காட்டினார். இந்துவெறி பாசிச பயங்கரவாதிகளின் அரசியல் மற்றும் கிரிமினல் கோர முகத்தை அம்பலப்படுத்தி, குஜராத்தில் நடந்திருப்பது மதவெறிக் கலவரமல்ல, இது அரசாங்கமே திட்டமிட்டு நடத்திய படுகொலை என்ற உண்மையை அவர் விசாரணைகளில் நிலைநாட்டினார். மோடியின் பயங்கரவாத ஆட்சியில் தீவிரவாதிகள் என்று பொய்க்குற்றம் சாட்டப்பட்டு சிறையிடப்பட்ட பல முஸ்லிம் இளைஞர்களை விடுவிக்கவும், மதவெறிக் கலவரங்கள் மற்றும் போலி மோதல்களில் கொல்லப்பட்டோரின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்கவும் தொடர்ந்து போராடினார்.

குஜராத்தில் மோடி ஆட்சிக்கு எதிராகத் தொழிலாளர் போராட்டத்தைத் தலைமையேற்று வழிநடத்தும் முகுல் சின்ஹா. (கோப்புப் படம்)



குறிப்பாக, பயங்கரவாத மோடி ஆட்சியில் நடந்த இஷ்ரத் ஜகான், துளசிராம் பிரஜாபதி, சொராபுதீன் ஷேக், சாதிக் ஜமால் ஆகியோரின் போலி மோதல் படுகொலைகள் குறித்த விசாரணைகளில் உண்மையை வெளிக்கொணர்வதிலும், அப்போது பெண் அமைச்சராக இருந்த மாயா கோத்னானி மற்றும் என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்டுகளாக மோடி ஆட்சியில் போற்றப்பட்ட டி.ஜி. வன்சாரா, ராஜ்குமார் பாண்டியா, தினேஷ் குமார் ஆகிய போலீசு அதிகாரிகள் சிறையிடப்பட்டதிலும் சின்ஹாவின் பங்கு மிக முக்கியமானது. இஷ்ரத் ஜகான் மற்றும் சாதிக் ஜமால் பற்றி ஊடகங்களும் அரசாங்கமும் பரப்பிய அவதூறுகளும், பயங்கரவாதக் கட்டுக்கதைகளும் அப்பட்டமான பொய் என்பதை நீதிமன்ற விசாரணைகளில் அவர் அம்பலப்படுத்திக் காட்டினார்.

என்.என். பட்டேல் என்ற தொழிற்சங்கவாதியுடன் இணைந்து குஜராத் தொழிற்சங்க சம்மேளனத்தை உருவாக்கி தொழிலாளர்களின் உரிமை பறிப்புக்கு எதிராக பல வழக்குகளை ஏற்று நடத்திவந்த அவர், 2007 -இல் இத்தொழிற்சங்கத்தை இந்திய தொழிற்சங்க மையம் (டி.யு.சி.ஐ) என்ற தொழிற்சங்கத்துடன் இணைத்து, தனது இறுதிக்காலம் வரை அதன் தலைவர் பொறுப்பில் இருந்து தொடர்ந்து தொழிலாளர் போராட்டங்களை வழிநடத்தினார். இதர சமூக ஆர்வலர்களுடன் இணைந்து அண்மையில் ''ட்ரூத் ஆஃப் குஜராத்'' எனும் இணையத் தளத்தைத் தொடங்கி மோடி பிராண்டு வளர்ச்சியின் யோக்கியதையையும் இந்து வெறியர்களையும் தோலுரித்துக் காட்டினார். எதிர்த்தரப்பான காங்கிரசு, குஜராத்தில் நடந்த இந்துவெறி பாசிசப் படுகொலைகளிலும் மோடியின் பயங்கரவாதக் குற்றங்களிலும் கூட்டுக்களவாணியாக இருந்த சூழலில் இத்தகைய அறிவுத்துறையினரின் இடையறாத போராட்டங்களால்தான் இந்துவெறி பாசிச மோடி அரசின் முகத்திரை கிழிபட்டது. பாசிச இருள் சூழ்ந்துள்ள நிலையில் அறிவுத்துறையினர் எப்படிப் போராட வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த சின்ஹா, நுரையீரல் புற்றுநோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட போதிலும், இந்துவெறி பாசிச பயங்கரவாதிகளுக்கு எதிராக அயராது உழைத்தார்.

அவரது மறைவு புரட்சிகர ஜனநாயக சக்திகளுக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் பேரிழப்பாகும். குஜராத்தைக் கவ்விய இந்துவெறி பாசிசம் இன்று நாட்டின் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்து பற்றிப் படர்ந்து வரும் சூழலில், அவர் காட்டிய தீரத்தோடு இந்துவெறி பாசிசத்துக்கும் மறுகாலனியாதிக்கத்துக்கும் எதிராகத் தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் ஐக்கியப்படுத்தி தொடர்ந்து போராடுவதுதான் தோழர் முகுல் சின்ஹாவுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

- ஆசிரியர் குழு

## ம.க.இ.க.வின் எட்டாவது மாநாடு:

# புதிய பண்பாட்டுப் படையைக் கட்டுவதை நோக்கி...



மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் எட்டாவது மாநாடு மே 17,18 தேதிகளில் திருச்சியில் நடைபெற்றது. மறைந்த தோழர் சீனிவாசனின் பெயரால் அமைக்கப்பட்டிருந்த அரங்கில் நடத்தப்பட்ட இந்த மாநாட்டில் எல்லாக் கிளைகளின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். நடைபெற்ற வேலைகள் மற்றும் அமைப்பு நிலைமை குறித்த விவாதத்தின் ஊடாக, தங்களிடம் நிலவும் தவறுகள் மற்றும் குறைகள் குறித்து தோழர்கள் திறந்த மனதுடன் பரிசீலித்தனர்.

மறுகாலனியாக்கமும் பார்ப்பன பாசிசமும்தான் மக்கள் எதிர்கொள்ளும் அபாயங்களில் தலையாயவை என்பதைப் பல்வேறு போராட்டங்களின் மூலமும், பத்திரிகை மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலமும் மக்கள் மத்தியில் கொண்டு சென்றிருக்கிறோமெனினும், நமது பண்பாட்டுத் துறைச் செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் இல்லை என்பதை மாநாட்டு அறிக்கை சுயவிமரிசனமாகப் பரிசீலித்தது. மறுகாலனியாக்க நடவடிக்கைகள் தீவிரமடைய அடைய, பண்பாட்டு அரங்கில் மக்கள் மீதான தாக்குதல்கள் பல வடிவங்களில் அதிகரிப்பதையும், விட்டேற்றித்தனமும் காரியவாதமும், சுயநலமும், அரசியலற்றபோக்கும் விதவிதமாக நுகர்வதே வாழ்க்கை இலட்சியம் என்ற மனப்போக்கும் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்திருப்பதையும், இதன் தொடர்ச்சியாக பெண்கள் மீதான வன்முறை, சாதி-மதவெறித் தாக்குதல்கள் உள்ளிட்ட எல்லா பிற்போக்குத்தனங்களும் புது வீரியம் பெற்றிருப்பதையும் சுட்டிக்காட்டி, ஒரு செயல்துடிப்புள்ள பண்பாட்டுப் படையைக் கட்டியமைக்க மாநாடு உறுதியேற்றது.

பொதுச்செயலராக தோழர் மருதையன், இணைப் பொதுச்செயலராக தோழர் காளியப்பன், பொருளாளராக தோழர்.வெங்கடேசன் ஆகியோர் அடங்கிய புதிய மாநில செயற்குழுவை ஒருமனதாகத் தெரிவு செய்ததுடன், மாநாடு நிறைவுற்றது.

செய்தி: ம.க.இ.க, தமிழ்நாடு.

# ராபர்ட் கால்டுவெல்லை நினைவுகூர்வோம்! பார்ப்பன எதிர்ப்பு தமிழ் மரபை மீட்டெடுப்போம்!!

**ஆங்கில மோகமும் சமஸ்கிருதமயமாக்கமும் தமிழின் இருப்பை அச்சுறுத்திவரும் வேளையில் ராபர்ட் கால்டுவெல்லை நினைவுகூர்வது வெறும் சடங்காக முடிந்துவிடக்கூடாது.**

பார்ப்பன பாசிசம் ஆட்சியைப் பிடித்திருக்கும் இந்தச் சூழலில், தமிழ் மொழியின் இருப்பைக் காலி செய்திடும் அதிகாரத் திமிர் எல்லாத் தளங்களிலும் கோலோச்சுகின்றது. உயர்கல்வியில் மட்டுமல்ல, அரசுப்பள்ளிகளிலும் இனி தமிழ் இல்லை என்றாக்கிட ஜெயலலிதா ஆங்கிலக் கல்வியைத் திணிக்கின்றார். இன்று சமஸ்கிருதப் பண்பாடும், ஆங்கில மோகமும் வெறிகொண்டு ஆடுகின்றன. தமிழை உயர்த்திப் பிடிப்போரைக் கேவலமாகப் பார்க்கும் பார்ப்பனியப் பார்வை சகலரிடமும் விதைக்கப்படும் சூழலில் தமிழின் பெருமையையும், அதன் தனித்துவத்தையும் உலகுக்கு உரக்கச் சொன்ன ராபர்ட் கால்டுவெலின் 200-ஆவது பிறந்த தினத்தை நாம் நினைவுகூர்கிறோம்.

1814-இல் அயர்லாந்தில் பிறந்த கால்டுவெல் கிறித்தவ சமயப் பரப்பிற்காகத் தமிழகத்திற்கு வந்தார். சென்னைக்கு வந்ததும் ''துருவ்'' எனும் தமிழ் கற்ற அறிஞரோடும் அந்நாளில் தமிழுக்குத் தொண்டாற்றிய வின்சுலோ, போப், பவர், ஆண்டர்சன் முதலானவர்களோடும் நட்புப் பூண்டார். சென்னை மாநகரில் மூன்று ஆண்டுகள் தங்கிய கால்டுவெல், தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை, பழக்கவழக்கம், மொழி முதலானவற்றை அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக ஏறத்தாழ நானூறு கல் தொலைவில் உள்ள திருநெல்வேலிக்கு நடந்தே சென்றார். அப்பயணத்தின் போது ''மிலேச்சரான'' கால்டுவெல்லுக்குப் பல சத்திரங்களில் இடம் மறுக்கப்பட்டதால், மாட்டுத்தொழுவங்களில்தான் அவர் தங்க நேர்ந்தது. இறுதியில் திருநெல்வேலி (இன்று தூத்துக்குடி மாவட்டம்) மாவட்டத்தில் தேரிப்பகுதியில் உள்ள இடையன்குடியைத் தேர்ந்தெடுத்து செயல்படத் தொடங்கினார்.

தமிழ் மொழியின் பெருமையையும் அதன் தனித்துவத்தையும் தக்க ஆதாரங்களோடு நிறுவி, சமஸ்கிருத மேலான்மை கருத்துக்களை நொறுக்கிய மறைந்த ராபர்ட் கால்டுவெல்.



அவரின் நோக்கம் சமயப் பரப்புரையாக இருந்தபோதும், தமிழின் பேரில் ஏற்பட்ட ஈர்ப்பு மொழியாராய்ச்சியை நோக்கி அவரைத் தள்ளியது. அவர் 18 மொழிகளைக் கற்றார். அதுவரை அச்சேறாமல் இருந்த பல பண்டைத் தமிழிலக்கியங்களை (தொல்காப்பியம் உட்பட) பயின்றார். இலக்கிய வேலைகளுக்கிடையே, அந்நாளில் ஒடுக்கப்பட்ட சாதியாக அறியப்பட்ட சாணார்கள் (நாடார்கள்) கல்வி கற்றிடவும், அவர்களின் மீதான சாதி இழிவுகளை அகற்றவும் பாடுபட்டார். அவர் கற்றறிந்த பிற மொழிகளுடன் தமிழ் மொழியை ஒப்பிட்டு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சில முடிவுகளுக்கு வந்து சேர்ந்தார். அதனை ஆய்வுநூலாக அவர் ஆங்கிலத்தில் ''திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'' எனும் நூலாக இலண்டன் பதிப்பகம் மூலம் 1856 - இல் வெளியிட்டார்.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் தமிழ் வரலாற்றில் முக்கிய திருப்புமுனை நூல் என்று சொல்லலாம். அதுவரை உருவாக்கப்பட்டிருந்த சமஸ்கிருத மேன்மையை அது உடைத்து நொறுக்கியது. அதுவரை, இந்திய மொழிகள் எல்லாம் சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தவை என்றும், அம்மொழியின் இலக்கணமே இதர மொழிகளுக்கு இலக்கணங்களாக ஏற்கப்பட்டன என்றும், தமிழிலுள்ள இலக்கியங்கள் கூட சமஸ்கிருத இலக்கியத்தை வழியொட்டி வந்தவைதான் என்ற கருத்தும்தான் மேலாண்மையில் இருந்து வந்தது.

ஆசிய மற்றும் ஆப்பிரிக்காவின் நிலம் மற்றும் மக்களின் இனம் சார்ந்த வாழ்நிலையை அறிந்துகொள்ள இலண்டனில் அமைக்கப்பட்ட ஆசியவியல் கழகத்தின் கிளை 1784-ஆம் ஆண்டு கல்கத்தாவில் அமைக்கப்பட்டது. இதன்

சார்பாக இந்தியாவில் செயல்பட்ட பலரும் சமஸ்கிருத மூல மொழியிலிருந்தே இந்தியாவில் பேசப்படும் அனைத்து மொழிகளும் கிளைத்திருக்க வேண்டும் என்னும் கருதுகோளை முன்னிறுத்தியே ஆய்வு செய்தனர்.

ஆனால், சென்னையை மையமாகக் கொண்டு செயல்பட்ட எல்லீசு உள்ளிட்டோர்தமிழ், தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்திய மொழிகள் இந்தோ-ஆரிய மொழிகள் அல்ல என்பதை கால்டுவெல்லுக்கு முன்பே கண்டறிந்து இம்மொழிகளுக்கான திராவிடச்சான்றுகளை அகழ்ந்தெடுத்திருந்தனர். அந்த ஆய்வின் தொடர்ச்சியாக மிக வலுவான ஆதாரங்களுடன் கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் பின்வரும் உண்மைகளை தெள்ளத் தெளிவாக நிரூபித்தது. 1. தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய மொழிகள் எல்லாம் சமஸ்கிருதத்துக்கு நேர் எதிர் தன்மை கொண்ட திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை 2. தமிழில் உள்ள சமஸ்கிருத சொற்களை எடுத்து விட்டாலும் தமிழ் தானாகவே இயங்கும் ஆற்றல் கொண்ட செம்மொழி 3. இதுவரை கருதி வந்தது போல், தமிழ் மரபு என்பது வேத-பார்ப்பன-இந்து மரபின் தொடர்ச்சி அல்ல 4. அதற்கு சமண, பவுத்த, பார்ப்பன எதிர்ப்பு மரபு உள்ளது.




சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாகக் கொண்டுவரக் கோரி தமிழக வழக்குரைஞர்கள் நடத்திய போராட்டத்தை ஆதரித்துப் புரட்சிகர அமைப்புகள் சென்னை - பல்லாவரத்தில் கடந்த செப்டம்பரில் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

வெறுமனே மொழி ஆராய்ச்சி எனும் எல்லைக்குள் நிறுத்தி விடாமல் தமிழ் மொழி பேசும் இனத்தவர்களின் ஆன்மிகம், பண்பாடு, சாதி மேலாதிக்கம் என அனைத்தும் தழுவிய ஆய்வாக கால்டுவெல் மேற்கொண்டார். அன்று பார்ப்பன மேலாண்மையினை மன முவந்து ஏற்றுக்கொண்ட சற்சூத்திர தமிழர்கள், ஒடுக்கப்பட்ட மக்களான பறையர்களைத் தமிழர்களாகக்கூட ஏற்க மறுக்கும் சாதிவெறியில்தான் இருந்தனர். ஆனால், கால்டுவெல்லின் ஆய்வு ''பறையர்களே பூர்வீகத் தமிழர்கள்'' என்பதை நிறுவியது.

கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூல், தமிழ்ச் சமூகத்தில் உருவாக்கிய தாக்கம் ஆழமானது. தமிழ் உயர் தனிச் செம்மொழி என்ற ஆய்வு முடிவு தமிழர்களுக்குத் தன்னம்பிக்கையையும் சுயமரியாதையையும் உருவாக்கியது. அதன் தொடர்ச்சியாகத்தான் அழிந்துகொண்டிருந்த 2000 ஆண்டு கால தமிழ் இலக்கியக் கருவூலங்களெல்லாம் சி.வை.தாமோதரம் பிள்ளையாலும் உ.வே.சா. வாலும் அச்சுவாகனம் ஏறின. இருபதாம் நூற்றாண்டில் பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் உருவெடுக்க கால்டுவெல்லின் கோட்பாடுகள் அடித்தளமாயின.

திராவிட இயக்கம் பின்னாளில் ஆட்சிஅதிகாரத்தைக் கைப்பற்றி ஊழல் சாக்கடையில் ஊறிச்சீரழிந்தது. அதன் ஊழல்களையும் வெற்று முழக்கங்களையும் பித்தலாட்டங்களையும் மட்டும் முன்வைத்து பார்ப்பன ஊடகங்களும் அறிவுத்துறையினரும், திராவிடம் என்பதே மோசடி, இவர்கள் கூறும் வரலாறே கிறித்துவ பாதிரியின் சதியால் உருவாக்கப்பட்டது என்பதைத் தொடர்ச்சியாகப் பரப்புரை செய்கின்றனர். தமிழ் மரபென்பது வேதத்தை முன்னிலைப்படுத்திய மரபென்றும், கால்டுவெல்லும் திராவிட இயக்கமும் கூறுவது போல பார்ப்பன எதிர்ப்பு மரபென்பது தமிழ்ப் பண்பாட்டிலேயே கிடையாது என்றும் நிலைநாட்டிட ஆர்.எஸ். எஸ். முயல்கிறது. 'திராவிடத்தால் வீழ்ந்தோம்' எனக் கத்தும் தமிழ் இனவாதிகளும், பார்ப்பனர்களின் சதியோடு கைகோர்த்து, தமிழ் ஆர்.எஸ். எஸ். ஐ வளர்க்கின்றனர்.

இன்று மறுகாலனியாக்கம் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தமிழின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப் பட்டுள்ளது. மத்தியில் மோடியின் பாசிச ஆட்சி வந்துள்ள சூழலில் மீண்டும் சமஸ்கிருத மேலாக்கம், சமஸ்கிருதப் பண்பாடு உயர்த்திப் பிடிக்கப்பட உள்ளது. மக்களிடமும் சமஸ்கிருத பார்ப்பனப் பண்பாட்டின்பேரில் கூடுதலான பற்று விதைக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்குப் பெயர்வைப்பதில் தொடங்கி பெயர்விளங்கா வழிபாடுகளைக் கொண்டுவருவது வரை பார்ப்பனிய மீட்சி நடந்து வருகின்றது. சமணம், பவுத்தம், சித்தர்கள், வள்ளலார் - என இருந்த நமது பார்ப்பன எதிர்ப்பு மரபு மக்களிடையே இருட்டடிப்பு செய்யப்படுகின்றது. இன்னொருபுறம், தமிழை ஆட்சிமொழியாக, நீதிமன்ற மொழியாக, வழிபாட்டு மொழியாகக் கொண்டுவர அரசு மறுக்கின்றது. தாய்மொழிக் கல்வியைத் தரவேண்டிய அரசே அரசுப்பள்ளிகளிலும் ஆங்கிலவழியைக் கொண்டுவந்து தமிழின் அழிவைத் துரிதப்படுத்துகிறது. இவற்றுக்கெதிராகப் போராட, கால்டுவெல் மீள்கண்டு பிடுப்பு செய்த ''உயர்தனிச் செம்மொழியே நம் மொழி'' என்பதும், ''பார்ப்பன எதிர்ப்பு மரபே தமிழ் மரபு'' என்பதும் இன்னமும் துருவேறாத வாள்களாக உள்ளன. அவற்றை நம் கைகளில் ஏந்துவதே கால்டுவெல்லை நினைவுகூர்வதாகும்.

● அழகு

# மின்சார வியாபாரிகளுக்கு ஜெயா வழங்கும் கறி விருந்து!

**தனியார்மயத்தால் ஏற்கெனவே நட்டத்தில் தள்ளப்பட்டுள்ள தமிழக மின்சார வாரியம், வெளிச்சந்தையில் 3,800 மெகாவாட் மின்சாரம் வாங்கும் ஜெயாவின் முடிவால் திவால் நிலைக்குத் தள்ளப்படும்.**

தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான வாக்குப்பதிவு முடிந்த இரண்டொரு நாட்களிலேயே மீண்டும் மின்கட்டண உயர்வு வரப்போவதாக சங்கு ஊதப்பட்டு, மக்களின் மனவோட்டம் ஆழம் பார்க்கப்பட்டது. தமிழகமோ இந்த எச்சரிக்கை மணிக்கு எந்தவிதமான எதிர்வினையும் ஆற்றாமல், தானுண்டு தன் வேலையுண்டு என்று வழமை போல அமைதி காத்தது. ஒருவேளை, அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா மருந்தகம் போல மலிவு விலை அம்மா மின்சாரம் அளிக்கப்படும் என்று தமிழர்கள் தமக்குத் தாமே ஆறுதல் கூறிக் கொண்டார்களோ என்னவோ!

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு ஜெயா அரசு மின் கட்டணத்தை 37 சதவீத அளவிற்குத் தடாலடியாக உயர்த்தியபொழுது, அதற்கான முழுப் பழியும் தி.மு.க. மீது சுமத்தப்பட்டது. முந்தைய தி.மு.க. அரசின் நிர்வாகத் திறமையின்மை காரணமாக மின் வாரியம் ஏறத்தாழ 50,000 கோடி ரூபாய் நட்டத்தில் சிக்கிக் கொண்டிருப்பதாகவும் அதனை மீட்கத்தான் அம்மா இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாகக் கூறி, மக்கள் மீது சுமத்தப்பட்ட மின் கட்டண உயர்வை ஜெயாவின் துணிச்சல் மிகுந்த நிர்வாக நடவடிக்கையாகத் தமிழகப் பத்திரிகைகள் சித்தரித்தன.

நியாயமாகப் பார்த்தால், மெச்சிக் கொள்ளப்பட்ட ஜெயாவின் திறமை மிகுந்த துணிச்சல்மிக்க இந்நடவடிக்கை மின்வாரியத்தின் நட்டத்தை கணிசமாகக் குறைத்திருக்க வேண்டும். ஆனால், உண்மையோ வேறு மாதிரியாக இருக்கிறது. தி.மு.க. ஆட்சியின் இறுதியில் 45,000 கோடி ரூபாய் அளவிற்கு இருந்த தமிழக மின் வாரியத்தின் நட்டம் ஜெயாவின் மூன்றாண்டு கால ஆட்சியில் வருடத்திற்கு 10,000 கோடி ருபாய் என்ற அளவில் அதிகரித்து 75,000 கோடி ரூபாயைத் தொட்டுவிட்டதாக செய்திகள் வெளிவந்துள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளாக, முந்தைய தி.மு.க. ஆட்சியைவிடக் கடுமையான மின்வெட்டைத் தமிழக மக்கள் சந்தித்துவரும் வேளையில், மின் கட்டணம் 37 சதவீதம் அதிகரிக்கப்பட்ட பிறகும் மின் வாரியத்தின் நட்டம் அதிகரித்திருப்பது முரண்பாடான விந்தைதான்.

தி.மு.க. ஆட்சியைவிட அ.தி.மு.க. ஆட்சியில் மின்வெட்டும் அதிகரித்திருக்கிறது; மின் வாரியத்தின் நட்டமும் அதிகரித்திருக்கிறது. எனவே, தி.மு.க. ஆட்சியைவிட அ.தி.மு.க. ஆட்சி நிர்வாகத் திறமையற்ற ஆட்சி என இந்த விந்தைக்கு இயந்திரகதியில் விளக்கம் அளித்துவிட முடியாது. ஏனென்றால், இப்படிபட்ட விளக்கம் நட்டத்திற்குப் பின்னுள்ள பல உண்மைகளை, குறிப்பாகத் தமிழக மின் வாரியத்தைத் திட்டமிட்டே திவாலாக்கிவரும் குற்றவாளிகளைத் தப்பவிடும் ஓட்டைகள் நிறைந்ததும் ஆகும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 24,000 கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடுகள் நடந்திருப்பதை அம்பலப்படுத்தி த.தே.பொ.க. உள்ளிட்ட எட்டு அமைப்புகள் சென்னையில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பு.



தமிழக மின்வாரியத்தின் நட்டம் 75,000 கோடி ரூபாயாக அதிகரித்துவிட்டது என்ற செய்தி வெளியாவதற்கு சற்று முன்னர் தான் மின்வாரியத்தில் ஏறத்தாழ 24,000 கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடுகள் நடந்திருப்பதாக தமிழ்த் தேசிய பொதுவுடமைக் கட்சி உள்ளிட்ட எட்டு அமைப்புகள் பத்திரிகையாளர்கள் கூட்டம் நடத்தி பகிரங்கமாகக் குற்றஞ்சுமத்தின. அதனைத் தொடர்ந்து பி.ஜி.ஆர். எனர்ஜி லிமிடெட் என்ற நிறுவனத்தால் மட்டுமே தமிழக மின்வாரியத் திற்கு ஏறத்தாழ 4,000 கோடி ரூபாய் அளவிற்கு நட்டமேற்பட் டிருப்பதைத் தக்க ஆதாரங்களோடு அம்பலப்படுத்தினார், தமிழ்நாடு மின் பொறியாளர் சங்கத் தலைவர் சா.காந்தி. மின் நிலையங்களை நிறுவும் அனுபவமே இல்லாத இந்த உப்புமா கம்பெனியிடம்தான் வழுதூர் மின்நிலையத்தை நிறுவும் பணியும் மேட்டூர் அனல் மின் நிலையத்தின் விரிவாக்க நிலையத்தை அமைக்கும் ஒப்பந்தமும் முந்தைய தி.மு.க. அரசால் ஒப்படைக்கப் பட்டன. அதனின் விளைவுதான் இந்த 4,000 கோடி ரூபாய் நட்டம் எனக் குற்றஞ்சுமத்தியிருக்கிறார், பொறியாளர் சா.காந்தி.



ஒருபுறம் முந்தைய தி.மு.க. ஆட்சியைக் காட்டிலும் தீவிரமான மின்வெட்டு; இன்னொருபுறம் மின்கட்டண உயர்வு என இரட்டைத் தாக்குதலைத் தமிழக மக்கள் மீது ஏவிவிட்டது ஜெயா அரசு.

வழுதூர் மின்நிலையத்தில் 2007 நவம்பரில் 62 மெகா வாட் மின்னுற்பத்தியும் 2008 ஏப்ரலில் 92 மெகாவாட் மின்னுற்பத்தியும் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், ஒப்பந்ததாராகிய பி.ஜி.ஆர்.நிறுவனத்தின் கத் துக்குட்டித்தனம் காரணமாக 14.06.2009 அன்றுதான் அம் மின்நிலையத்தில் 92 மெகாவாட் மின்னுற்பத்தி தொடங் கப்பட்டது. எனினும், அடுத்த ஓராண்டிலேயே அம்மின் நிலையம் படுமோசமாக பழுதடைந்தது. ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட, மிகவும் தரங்குறைந்த டர்பைன் இயந்திரங்களை இத்தாலி நாட்டிலிருந்து இறக்குமதி செய்து இம்மின் நிலையத்தை அமைத்ததுதான் இத் துணை கோளாறுகளுக்கும் காரணம் எனச் சுட்டிக் காட்டி யிருக்கிறார், பொறியாளர் சா.காந்தி.

8.1.2010-இல் பழுதடைந்த வழுதூர் மின்நிலையம் 485 நாட்கள் கழித்து 11.5.2011 அன்று மீண்டும் மின் உற்பத்தியைத் தொடங்கியது. பி.ஜி.ஆர். நிறுவனம் பழுதடைந்த டர்பைன் இயந்திரத்தை மாற்றித் தர முன் வராததால், மின்வாரியமே 100 கோடி ரூபாய் செல வழித்து மின் நிலையத்தை இயக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இதுவொருபுறமிருக்க, மின் உற்பத்தி நடக்காத இக்காலக்கட்டத்தில், தமிழக மின்சார வாரியம் இந்திய எரிவாயு ஆணையத்திடம் செய்து கொண்டிருந்த ஒப்பந்தப்படி, அந்த ஆணையத்திட மிருந்து வாங்க வேண்டியிருந்த இயற்கை எரிவாயு கட்டணத்தில் 80 சதவீதத்தைத் தண்டத் தொகையாகச் செலுத்த வேண்டியிருந்தது. இந்த வகையில் தினம் ஒரு கோடி ரூபாய் வீதம் மின் நிலையம் இயங்காத 485 நாட் களுக்கும் 485 கோடி ரூபாயைத் தமிழக மின்சார வாரியம் தண்டத் தொகையாக அளித்தது.

இவ்வாறு போட்ட மூலதனத்துக்கும் (385 கோடி ரூபாய்) மேலாக 585 கோடி ரூபாயைச் செலவழித்து இயக்கப்பட்ட வழுதூர் மின் நிலையம் ஜூன் 2012-இல் மீண்டும் பழுதடைந்தது. இப்பழுதுகள் நீக்கப்பட்டு ஜனவரி 2013 முதல் மீண்டும் மின்உற்பத்தி தொடங்கி விட்டதாகத் தமிழக அரசு அறிவித்தாலும், அம்மின் நிலையம் முழுத் திறனோடு இயங்கவில்லை. 92 மெகா வாட்டுக்குப் பதிலாக 67 மெகாவாட் மின்சாரம்தான் அம் மின்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. வழுதூர் மின்நிலையத்தில் தமிழக மின்வாரியம் அடைந்த நட்டம் முழுவதையும் ஒப்பந்தப்படி பி.ஜி.ஆர். நிறுவனத்திட மிருந்து பெற்றிருக்க வேண்டும். ஆனால், இந்நட்டம் முழுவதும் மின்வாரியத்தின் தலையில் சுமத்தப்பட்டு, பி.ஜி.ஆர். நிறுவனம் தப்ப வைக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அனல் மின்நிலைய விரிவாக்கப் பணிகள் பி.ஜி.ஆர். நிறுவனத்திடம் ஜூன் 2008-இல் ஒப்படைக் கப்பட்டது. இவ்விரிவாக்க மின்நிலையம் செப்.2011-இல் மின்னுற்பத்தியைத் தொடங்க வேண்டும் என்றும், அதன் பின் தாமதமாகும் ஒவ்வொரு மாதத்திற்கும் பி.ஜி.ஆர். நிறுவனம் மின் வாரியத்திற்கு மாத மொன்றுக்கு 107 கோடி ரூபாய் நட்ட ஈடாகத் தர வேண்டும் என்றும் ஒப்பந்த விதிகள் கூறுகின்றன. ஆனால், இவ்விரிவாக்க மின்நிலையம் செப்.2011-க்குப் பிறகு ஒன்பது மாதங்கள் கழித்து மே 2012-இல்தான் சோதனை ஓட்டத்தைத் தொடங்கியது. இம்மின் நிலையம் அக்டோபர் 2013-இல் முழு உற்பத்தியைத் தொடங்கிவிட்டதாகச் சொல்லப்பட்டாலும், பிப்.2014 -இல் பழுதடைந்து இன்றுவரை உற்பத்தியைத் தொடங்கவில்லை.

ஒப்பந்தப்படி மின் உற்பத்தியைத் தொடங்காமல் கடந்த 31 மாதங்களாக மேட்டூர் விரிவாக்க மின் நிலையம் முடங்கிப் போய் நிற்பதற்கு பி.ஜி.ஆர். நிறுவனத்தின் அனுபவமின்மையும், சீனாவைச் சேர்ந்த தாங்க்ஃபெங்க் என்ற நிறுவனத்திடமிருந்து தரமற்ற இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருப்பதும்தான் காரணமெனக் குற்றஞ்சுமத்தியிருக்கிறார், பொறியாளர் சா.காந்தி. இந்த 31 மாத காலத்திற்கான தண்டத் தொகையான 3,200 கோடி ரூபாயை பி.ஜி.ஆர். நிறுவனத்திடமிருந்து மின் வாரியம் பெற்றிருக்க வேண்டும். அதற்கு மாறாக, இத்தொகை மின் வாரியத்தின் நட்டக் கணக்கில் சேர்க்கப்படுகிறதென்றும் இவ்வுண்மைகளைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ்கூட யாரும் கேட்டுப் பெற முடியாதவாறு தொழில் இரகசியம் என்ற பெயரில் அ.தி.மு.க. அரசால் பாதுகாக்கப்படுகிறதென்றும் அம்பலப்படுத்தியிருக்கிறார், அவர்.

பி.ஜி.ஆர். போன்ற தனியார் காண்டிராக்ட் கம்பெனிகளின் சட்டவிரோதமான, ஊழல் நிறைந்த மோசடிகளைக் காட்டிலும் தனியார் மின் உற்பத்தியாளர்கள் மின் கட்டணம், திறன் கட்டணம் என்ற பெயரில் தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சட்டபூர்வமாகக் கொள்ளையடித்து வருவதுதான் அவ்வாரியத்தை மீளமுடியாத நட்டத்தில் தள்ளிவிட்டிருக்கிறது. அரசு நிறுவனங்கள் உற்பத்தி செய்து விநியோகிக்கும் மின்சாரத்தின் அடக்க விலையையும் தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிலிருந்து வாங்கப்படும் மின்சாரத்திற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டணத்தையும் ஒப்பிட்டாலே மின் துறையில் கார்ப்பரேட் பகற்கொள்ளை சட்டபூர்வமாகவும் தங்குதடையின்றியும் பல ஆண்டுகளாக நடந்து வருவதைப் புரிந்துகொண்டு விடலாம்.

தமிழக மின் வாரியத்தின் அனல் மின்நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் ஒரு யூனிட் மின்சாரத்தின் சராசரி அடக்க விலை ரூ.2.30; நீர் (புனல்) மின்சாரத்தின் அடக்க விலை 0.30 பைசா; மத்திய மின் தொகுப்பிலிருந்து வழங்கப்படும் ஒரு யூனிட் மின்சாரத்தின் சராசரி அடக்க விலை ரூ.3.30 என்றிருக்கும்பொழுது தமிழகத்திலுள்ள ஜி.எம்.ஆர். பவர் நிறுவனத்திடமிருந்து தமிழக மின் வாரியம் பெறும் ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை ரூ.10.41 எனத் தமிழ்நாடு மின்னுற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (டாஞ்சேட்கோ) நிர்ணயித்திருக்கிறது. இதுபோல பிள்ளைபெருமாநல்லூர், சாமல்பட்டி மற்றும் சமயநல்லூரில் அமைந்திருக்கும் தனியார் மின் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை முறையே ரூ.8.55, ரூ.10.18, ரூ.10.96 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அப்பாற்பட்டு ஜி.எம்.ஆருக்கு ரூ.147 கோடி, அப்போலோ மருத்துவக் குழுமத்துக்குச் சொந்தமான பிள்ளைபெருமாள்நல்லூர் மின் நிறுவனத்துக்கு ரூ.292 கோடி, சாமல்பட்டி மின் நிறுவனத்துக்கு ரூ.108 கோடி, சமயநல்லூர் மின் நிறுவனத்துக்கு ரூ.110 கோடி ரூபாய் 2013-14 ஆம் ஆண்டுக்கான திறன் கட்டணமாகச் செலுத்த வேண்டும் என டாஞ்சேட்கோ நிர்ணயித்திருக்கிறது. திறன் கட்டணம் என்பது தனியார் மின் உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கப்படும் மின்சாரக் கட்டணத்திற்கு அப்பாற்பட்டு, அவர்களுக்கு ஆண்டுதோறும் மின்சார வாரியம் செலுத்த வேண்டிய கப்பத் தொகையாகும். தனியாருடான ஒப்பந்த காலம் முடியும் வரை மின்சாரம் வாங்கினாலும் வாங்காவிட்டாலும் இந்த திறன் கட்டணத்தை மின்சார வாரியம் செலுத்த வேண்டும்.

தனியார் மின் உற்பத்தியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 24 சதவீதத்திற்கு மேல் உத்தரவாதமான இலாபம் கிடைக்கும்படியும் அவர்கள் போட்ட மூலதனத்தை நான்கைந்து ஆண்டுகளுக்குள் திரும்ப எடுக்கும்படியும் மின்சாரக் கட்டணமும் திறன் கட்டணமும் நிர்ணயிக்க வேண்டும் என்றவாறு மின்சாரச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு, இப்பகற்கொள்ளை நிறுவனமயமாக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் மொத்த மின் தேவையில் வெறும் 12 சதவீதத்தை மட்டுமே பூர்த்தி செய்யும் தனியார் மின் உற்பத்தியாளர்கள் இந்த அநியாயமான கட்டண நிர்ணயம் காரணமாக மின் வாரியத்தின் வருமானத்தில் ஏறத்தாழ முப்பது முதல் முப்பந்தைந்து சதவீதத்தைக் கைப்பற்றிக் கொள்கின்றனர்.



வட சென்னையில் அமைந்துள்ள ஜி.எம்.ஆர். மின்னுற்பத்தி நிலையம்.

தமிழக மின்சார வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி 2003-04 ஆம் ஆண்டில் தனியாரிடமிருந்து 1317 கோடி யூனிட்டுகள் மின்சாரம் பெறப்பட்டிருக்கிறது. இது 2008-09 ஆம் ஆண்டில் 2,114 கோடி யூனிட்டுகளாக அதிகரித்திருக்கிறது. இதே காலகட்டத்தில் மின்

வாரியம் அடைந்த நட்டம் 2003-04 ஆம் ஆண்டில் 1,110 கோடியிலிருந்து 2008-09 ஆம் ஆண்டில் 7,131 கோடி ரூபாயாக அதிகரித்திருக்கிறது. எந்தளவிற்குத் தனியாரிடமிருந்து மின்சாரம் வாங்குவது அதிகரிக்கிறதோ அதற்கு நேர் விகிதத்தில் மின் வாரியத்தின் நட்டமும் அதிகரித்திருக்கிறது என்பதுதான் இப்புள்ளிவிவரத்திலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டிய உண்மையாகும்.

> **தனியார் மின் உற்பத்தியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 24 சதவீதத்திற்கு மேல் உத்தரவாதமான இலாபம் கிடைக்கும்படியும் அவர்கள் போட்ட மூலதனத்தை நான்கைந்து ஆண்டுகளுக்குள் திரும்ப எடுக்கும்படியும் மின்சாரக் கட்டணமும் திறன் கட்டணமும் நிர்ணயிக்க வேண்டும் என்றவாறு மின்சாரச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு, இப்பகற்கொள்ளை நிறுவனமயமாக்கப்பட்டுள்ளது.**

மின்சார வாரியம் நட்டத்தில் இருக்கும் நிலையிலும் தனியாரிடமிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதற்கு ஏற்றபடியே ஒப்பந்தங்கள் போடப்படுகின்றன. குறிப்பாக, ஜி.எம்.ஆர். நிறுவனத்துடனான 15 ஆண்டு ஒப்பந்த காலம் முடிந்த பிறகும் அந்நிறுவனத்திடமிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ.10.41 கொடுத்து மின்சாரம் வாங்கவும், ரூ.147 கோடி திறன் கட்டணம் செலுத்தவும் டாஞ்சேட்கோ முடிவெடுத்திருக்கிறது. இப்படி அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதைக் கேள்விக்குள்ளாக்கினால், தீவிரமான மின்வெட்டைப் பொதுமக்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றவாறு அடாவடித்தனமாகப் பதில் அளித்து இப்பகற்கொள்ளை நியாயப்படுத்தப்படுகிறது.

இப்படி ஒருபுறம் அதிக விலை கொடுத்துத் தனியார் முதலாளிகளிடமிருந்து வாங்கப்படும் மின்சாரம், மறுபுறம் மானிய விலையில் தனியார் தொழிற்சாலைகளுக்கும், ஐந்து நட்சத்திர கேளிக்கை விடுதிகளுக்கும், கேளிக்கை பூங்காக்களுக்கும் அளிக்கப்படுகிறது. இவர்களுக்குச் சந்தை விலையில் மின்சாரத்தை விற்பதற்கு மாறாக, மானிய விலையில் மின்சாரம் வழங்குவதாகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்படுகின்றன. வளர்ச்சியின் பெயரால் நியாயப்படுத்தப்படும் இந்தச் சலுகையின் சுமை முழுவதையும் மக்கள் ஏற்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உருவாக்கப்படுகிறது.

தமிழகத்தில் நிலவும் மின்வெட்டை எதிர்வரும் ஜூன் 1 முதல் முழுமையாக ரத்து செய்யப் போவதாக ஜெயா வெளியிட்டுள்ள அறிக்கையை இந்தப் பின்னணியிலிருந்து பரிசீலித்தால்தான் தமிழக மின்வாரியத்தை மீளமுடியாத படுகுழிக்குள் தள்ளிவிட ஆளுங்கும்பல் தயாராகிவிட்டதையும், தமிழக மக்கள் மீது பெரும் மின் கட்டணச் சுமையை ஏற்றிவிட அவர்கள் நரித்தந்திரத்தில் இறங்கியிருப்பதையும் புரிந்துகொள்ள முடியும். கடுமையான மின்வெட்டு நிலவும் சமயத்தில் மின் கட்டணத்தை மீண்டும் உயர்த்தினால் பொதுமக்களின் வெறுப்பைச் சம்பாதிக்க வேண்டியிருக்கும் என்பதாலேயே வெளிச்சந்தையில் மின்சாரம் வாங்கும் முடிவை எடுத்திருக்கிறது, ஜெயா அரசு. இந்நடவடிக்கையால் மின்வெட்டு முழுமையாக ரத்தாகிறதோ இல்லையோ, மின்கட்டணத்தை உயர்த்துவதற்கான குறுக்குவழியில் ஜெயா அரசு இறங்கியிருக்கிறது என்பதே உண்மை.

மின்வெட்டை முழுமையாக நீக்குவதற்காக 3,800 மெகாவாட் மின்சாரத்தை வெளிச்சந்தையிலிருந்து பெறுவதற்கு ஒப்பந்தங்கள் போட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள ஜெயா, அம்மின்சாரத்தை என்ன விலைக்கு வாங்கப் போகிறோம் என்பதைத் தெரிவிக்காமல் விட்டிருப்பது தற்செயலானது அல்ல. வெளிச்சந்தையில் வணிக மின் உற்பத்தியாளர்களிடமிருந்து நீண்ட கால அடிப்படையில் மின்சாரம் வாங்க ஒப்பந்தம் செய்வது புலிவாலைப் பிடித்துக் கொண்டு ஓடுவதற்கு ஒப்பானது. ஜி.எம்.ஆர். போன்ற சுயேச்சையான மின் உற்பத்தியாளர்கள் கந்துவட்டிக் கொள்ளையர்களை ஒத்தவர்கள் என்றால், வணிக மின் உற்பத்தியாளர்கள் மீட்டர் வட்டி கொள்ளைக் கும்பலைப் போன்றவர்கள். இந்த மின் உற்பத்தியாளர்கள் மின்சாரத்தின் விலையைச் சந்தையில் நிலவும் தேவையைக் கொண்டு, சந்தை சூதாட்ட விதிகளின்படிதான் தீர்மானிப்பார்கள். மேலும், மின்சார உற்பத்திக்கு மூலப் பொருளாகப் பயன்படும் நிலக்கரி, இயற்கை எரிவாயு போன்றவற்றைச் சர்வதேச விலைக்குத்தான் உள்நாட்டிலும் விற்க வேண்டும் என முதலீட்டாளர்கள் கோரி வரும் நிலையில் ஒப்பந்த காலம் முழுவதும் மின்சாரத்தின் விலை உயராமல் இருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

தனியாரிடமிருந்து பெறப்படும் மின்சாரத்தின் கட்டணம் நிலையானதாக இருக்காது என்பதால்தான், ஆண்டுக்கொருமுறை மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதிகளை உருவாக்கி வைத்திருக்கிறது. இதன்பொருள் மின்சாரம் என்பது அரசாங்கம் அளிக்கக் கடமைப்பட்டுள்ள அத்தியாவசிய சேவை கிடையாது, மாறாக, அதனை இலாபம் ஈட்டக்கூடிய சரக்காகப் பாவிக்க வேண்டும் என்பதுதான். மின்துறையில் புகுத்தப்பட்டுள்ள தனியார்மயம் ஒன்று அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கிப் பயன்படுத்த வேண்டும் அல்லது இருட்டிலும் புழுக்கத்திலும் வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்ற இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் நிலைக்குத் தமிழக மக்களைத் தள்ளிவிட்டிருக்கிறது.

● செல்வம்

## சுண்டூர் படுகொலைத் தீர்ப்பு:

# நாடாளுமன்ற அரசியல் மாயைகள் கலையட்டும்!

**வன்கொடுமை வழக்குகளில் ஆதிக்க சாதியினருக்கு ஆதரவாக நீதிமன்றங்கள் அளித்துவரும் தீர்ப்புகள், தீண்டாமையைச் சட்டவாத வழிகளில் ஒழிக்க முடியாது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.**

காலம் தாழ்த்தி வழங்கப்படும் நீதி அநீதிக்குச் சமமானது என்றாலும், நம் நாட்டில் காலம் தாழ்த்திக்கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதில்லை. ஆந்திர மாநிலத்தின் விஜயவாடா வட்டத்திலுள்ள சுண்டூர் கிராமத்தில் 23 ஆண்டுகளுக்கு முன்பு தாழ்த்தப்பட்டோர் 8 பேரை கண்ட துண்டமாக வெட்டிக் கொன்ற வழக்கில் ரெட்டி சாதிவெறியர்களை அண்மையில் ஆந்திர உயர் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. சாட்சியங்கள் நம்பகத்தன்மையுடன் இல்லை என்றும், அரசு தரப்பு வழக்குரைஞர் உரிய ஆதாரங்களைச் சமர்ப்பிக்கவில்லை என்றும் கூறி கடந்த ஏப்ரல் 22-ஆம் தேதியன்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் நரசிம்ம ரெட்டி, ஜெய்ஸ்வால் ஆகியோர் அடங்கிய அமர்வு, நாடறிந்த இந்த வழக்கில் மனுநீதியையே தனது தீர்ப்பாக அறிவித்துள்ளது.

1991-ஆண்டில், சுண்டூர் கிராமத்தைச் சுற்றிவளைத்துக் கொண்டு தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்ட ரெட்டி சாதி வெறியர்கள், எட்டு தாழ்த்தப்பட்ட இளைஞர்களைக் கொடூரமாகத் தாக்கியதோடு, அவர்களை கோடரியால் கண்ட துண்டமாக வெட்டிக் கொன்று, அவர்களது உடல்களை சாக்குப் பையில் கட்டி துங்கபத்ரா கிளை ஆற்றில் வீசியெறிந்தனர். ஆந்திர மாநில சிவில் உரிமைக் கழகத்தின் துணையுடன் தாழ்த்தப்பட்ட மக்கள் உறுதியுடன் போராடியதன் விளைவாக, 14 ஆண்டுகளுக்குப் பின்னர் 2005-ஆம் ஆண்டில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படியான சிறப்பு நீதிமன்றம், சுண்டூரிலேயே விசாரணைக்காக அமைக்கப்பட்டது.

ரெட்டிகளின் கொலைமிரட்டல்களுக்கு அஞ்சாமல் இந்நீதிமன்றத்தில் குற்றவாளிகளைத் தாழ்த்தப்பட்டோர் அடையாளம் காட்டினர். அதன் தொடர்ச்சியாக இச்சிறப்பு நீதிமன்றம், 2007-ஆம் ஆண்டில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் 21 பேருக்கு ஆயுள்தண்டனையும், 35 பேருக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனையும் விதித்தது. எஞ்சிய 123 பேர் மீது குற்றம் சரிவர நிரூபிக்கப்படவில்லை என்று விடுதலை செய்தது. தண்டிக்கப்பட்ட ரெட்டி ஆதிக்கசாதி வெறியர்கள் இதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். ஏழாண்டுகளுக்கு பிறகு இந்த மேல்முறையீட்டை விசாரணை செய்த ஆந்திர உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் நரசிம்ம ரெட்டி, ஜெய்ஸ்வால் ஆகியோர் அடங்கிய அமர்வு, சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்க அனைத்து சாதிவெறியர்களையும் விடுதலை செய்து கடந்த ஏப்ரல் 22-ஆம் தேதியன்று தீர்ப்பளித்துள்ளது.

நாடளவில் முக்கியத்துவம் பெற்ற இந்த வழக்கில் 23 ஆண்டுகளுக்குப் பின்னரும் நீதி கிடைக்காததைக் கண்டு வேதனைப்படும் சுண்டூர் கிராம மக்கள், ‘‘எங்களது புதல்வர்களை ரெட்டி சாதிவெறியர்கள் வெட்டிக் கொல்லவில்லை என்றால், யார்தான் அவர்களைக் கொன்றார்கள்? தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் தங்களைத் தாங்களே வெட்டிக் கொண்டு, தங்களது உடல்களை சாக்குப்பையில் திணித்துக் கொண்டு துங்கபத்ரா கிளைக் கால்வாயில் வீசியெறிந்து கொண்டார்களா?’’ என்று ஆத்திரத்துடன் குமுறுகின்றனர்.

‘‘எங்களது புதல்வர்களை ரெட்டி சாதியினர் வெட்டிக் கொல்லவில்லை என்றால், யார்தான் அவர்களைக் கொன்றார்கள்?’’ – நீதிமன்றத்தின் அநீதியால் குமுறும் சுண்டூர் தாழ்த்தப்பட்ட மக்கள்.



ஒரு பெண்ணின் மீதான பாலியல் வன்கொடுமை வழக்கு எவ்வாறு ஆணாதிக்கத் திமிருடன் அணுகப்படுகிறதோ, அவ்வாறே தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமை வழக்குகளையும் சாதியாதிக்கக் கண்ணோட்டத்துடன் தான் நீதித்துறையும் போலீசும் அதிகாரவர்க்கமும் அணுகுகின்றன. சுண்டூர் படுகொலை வழக்கு மட்டுமல்ல, இதற்கு முன்னர் 1985-ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலம் கரம்சேடுவில் தாழ்த்தப்பட்ட மக்கள் நாயுடு சாதிவெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட வழக்கிலும் போதுமான ஆதாரங்கள் இல்லையென்று ஆதிக்க சாதி வெறியர்களை ஆந்திர உயர்நீதிமன்றம் விடுதலை செய்தது.



சுண்டூர் தாழ்த்தப்பட்டோர் மீதான சாதிவெறிப் படுகொலையை எதிர்த்தும், சாதிவெறியர்களைத் தண்டிக்கக் கோரியும் ஐதராபாத்தில் நடந்த ஆர்ப்பாட்டம் (கோப்புப்படம்)

1996-ஆம் ஆண்டில் பீகாரின் பதானிதோலாவில் 21 தாழ்த்தப்பட்டோர் பட்டப்பகலில் ஆதிக்க சாதிவெறியர்களால் படுகொலை செய்யப்பட்டனர். 1997-இல் அரசுத் தலைவராக கே.ஆர்.நாராயணன் பதவியில் இருந்த போது, லட்சுமண்பூர் பதே கிராமத்தில் ஆதிக்க சாதிவெறியர்களின் பூமிகார் சேனா நடத்திய கொலைவெறியாட்டத்தில் 58 தாழ்த்தப்பட்டோர் கொல்லப்பட்டனர். இப்படுகொலைகளை தேசிய அவமானம் என்று சாடி கண்டனம் தெரிவித்ததற்குமேல் அவரால் வேறொன்றும் செய்ய முடியவில்லை.

கடந்த 2012-ஆம் ஆண்டில் பதனி தோலா வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 23 ஆதிக்க சாதிவெறியர்களை பாட்னா உயர் நீதிமன்றம் விடுதலை செய்தது. 2013-இல் லட்சுமண்பூர் பதே வழக்கில் சாட்சியங்கள் நம்பகத்தன்மையுடன் இல்லை என்று கூறி அமர்வு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட சாதிவெறியர்கள் அனைவரையும் பாட்னா உயர் நீதிமன்றம் விடுதலை செய்தது. பீகாரின் நக்ரிபஜார், மியான்பூர், நாராயண்பூர், காக்டி பாகா ஆகிய இடங்களில் நடந்த தாழ்த்தப்பட்டோர் மீதான படுகொலை வழக்குகளிலும் பாட்னா உயர்நீதி மன்றம் சாதிவெறி பயங்கரவாதிகளை விடுதலை செய்துள்ளது.

நாட்டையே அதிர்ச்சியில் ஆழ்த்திய கயர்லாஞ்சி வழக்கில் மும்பை உயர் நீதிமன்றத்தின் நாக்பூர் கிளை 2010-இல் அளித்த தீர்ப்பில், இது சாதிய வன்கொடுமை அல்ல என்றும் நிலப்பிரச்சினையால் உருவான பழி வாங்கும் நடவடிக்கை என்றும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பாயாது என்றும் தீர்ப்பளித்தது. தமிழகத்தில், மேலவளவு படுகொலை நடந்து 9 ஆண்டுகள் முடிந்து விட்டதைக் காட்டி இவ்வழக்கை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் விசாரிப்பதிலிருந்து சென்னை உயர் நீதிமன்றம் நழுவிக் கொண்டது. திண்ணியம் வழக்கிலும் இதேபோல ஆதிக்க சாதிவெறியர்கள் வன்கொடுமைத் தடுப்புச்சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படாமல் தப்புவிக்கப்பட்டனர்.

இவையனைத்தும் இன்றைய இந்திய அரசுக் கட்டமைவானது, அதன் அங்கங்களான போலீசு, இராணுவம், அதிகார வர்க்கம், நீதித்துறை அனைத்தும் மறுகாலனியாதிக்கத்துக்கு ஏற்ப சாதிய சமுதாய அமைப்பைக் கட்டிக் காப்பதற்கானதுதான் என்பதையும், இன்றைய அரசியலமைப்பு முறையானது தாழ்த்தப்பட்டோருக்கு எதிரானதாக இருப்பதையும், பெயரளவிலான ஜனநாயகத்தையும் சட்டப்படியான மனித உரிமைகளையும் கூட செயல்படுத்த வக்கற்றுக் கிடப்பதையும் மெய்ப்பித்துக் காட்டுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சமூக நீதிக்கான இட ஒதுக்கீடுகளும், தீண்டாமை வன்கொடுமைத் தடுப்புச் சட்டங்களும் இம்மக்கள் வாழ்விலும் சமூகத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதையும் சாதிக்கவில்லை என்பதையும், இத்தகைய முயற்சிகள் மூலம் சாதியாதிக்கத்தை ஒருக்காலும் தகர்த்தெறிய முடியாது என்பதையுமே நாளும் பெருகி வரும் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான வன்கொடுமைத் தாக்குதல்கள் நிரூபித்துக் காட்டுகின்றன.

போலீசும் உளவுத்துறையும் நீதித்துறையும் தமது கடமையைச் சரியாகச் செய்திருந்தால் தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமைகளைத் தடுத்திருக்க முடியும் என்ற வகையில் கூறப்படும் வாதங்கள், அறிந்தோ அறியாமலோ இந்த அரசு பற்றிய பிரமைகளைத்தான் வளர்க்கின்றன. ஆனால் இன்றைய அரசியலமைப்பு முறையானது, சாதி - தீண்டாமை முதலான கேடுகெட்ட பிற்போக்கு விழுமியங்களை ஒழிக்கும் நோக்கில், சமுதாயத்தை ஜனநாயகப்படுத்தும் நோக்கில் சட்டங்களை உருவாக்கவில்லை.

இருப்பினும், சாதிய வன்கொடுமைகள் நிகழும்போதெல்லாம், தற்போதைய சட்டத்தில் திருத்தங்களைச் செய்து சாதிவெறியர்களுக்குக் கடுமையான தண்டனைகளை அளிக்கும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. ஜனநாயகப் புரட்சி, சமுதாய மாற்றம் - என்ற திட்டம் மிகத் தொலைவில் இருப்பதாகவும், உடனடித் தீர்வாக சட்டத் திருத்தம்தான் தற்போதைக்குக் காரிய சாத்தியமானது என்றும் தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் வாதிடுகின்றன.

அம்பேத்கர் தற்போதைய அரசமைப்பில் பங்கேற்று தாழ்த்தப்பட்டோருக்கு அதிகாரத்தைப் பெற்றுத் தருமாறு தான் கூறியிருக்கிறார்; ஆயுதப் போராட்டம் நடத்தச்

சொல்லவில்லை; பல்வேறு கட்சிகளில் சிதறியுள்ள தாழ்த்தப்பட்டோர் தனியொரு வாக்குவங்கியாக உருவெடுத்து தேர்தல் அரசியல் மூலம் பெறும் அதிகாரத்தின் மூலமும், இட ஒதுக்கீடு முதலான வழிகளில் பொருளாதார முன்னேற்றம் அடைவதன் மூலமும்தான் அவர்கள் விடுதலை பெற முடியும் என்று தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளும் கட்சிகளும் தீர்வை முன்வைக்கின்றன. தலித்துகளின் உணர்வுகளை தலித் அல்லாதவர்களால் ஒருக்காலும் உணர முடியாது என்று அடையாள அரசியலைச் செயல்படுத்துகின்றன.

ஆனால், அடையாள அரசியல் என்பதே மற்ற சாதியின் இருப்பை அங்கீகரித்து, எல்லா சாதிகளும் தத்தமது அடையாளத்தைப் பேணிக்கொள்வதை ஆதரிக்கிறது. இதனால் ஆதிக்க சாதிகளும் தாழ்த்தப்பட்டோரும் எதிரெதிர் நிலைக்குத் தள்ளப்பட்டு ஆதிக்க சாதிகள் தமது சாதியப் பிடியை மேலும் உறுதிப்படுத்திக் கெட்டிப்படுத்துவதுதான் நடந்துள்ளது. தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளைப்போலவே வன்னியர்களிடம் இதே வாதங்களைச் சொல்லித்தான், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகக் கூச்சல் போட்டு வன்னிய சாதிவெறியர்களை ராமதாசு கும்பல் அணிதிரட்டிக் கொண்டது.

ஏற்கெனவே சமூக ரீதியில் ஒரு ஆதிக்க சாதி என்ற முறையில் பெற்றிருக்கும் அதிகாரத்துடன் அரசியல் கட்சி, அதிகார வர்க்கம், போலீசு, நீதித்துறை போன்றவற்றிலும் இந்த ஆதிக்க சாதிகளின் மேட்டுக்குடி வர்க்கங்கள் அதிகாரத்தைப் பெற்றுள்ளன. மேலும், தனியார்மய - தாராளமயக் கொள்கைகளின் அமலாக்கத்துக்குப் பின்னர் இத்தகைய சாதிகளில் தோன்றியுள்ள புதியவகை தரகு வர்க்கங்கள் இன்று சாதிக் கட்சிகளின் புரவலனாக இருந்து சாதியப் பிழைப்புவாத வாக்கு வங்கி அரசியலுக்கு வழியமைத்துக் கொடுப்பதோடு, தீண்டாமையைத் தங்களது பிறப்புரிமையாக அறிவிக்கும் அளவுக்கு கொட்டமடிக்கின்றன.

டெல்லியில், ஓடும் பேருந்தில் ஒரு இளம்பெண் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாகிக் கொல்லப்பட்டபோது கொதித்தெழுந்து ஆர்ப்பாட்டங்களை நடத்திய நாடும் அதன் மனசாட்சியாக உள்ள ஊடகங்களும், பாலியல் வன்முறைக்கும் படுகொலைகளுக்கும் நாள்தோறும் இலக்காகிவரும் தாழ்த்தப்பட்ட பெண்களுக்காகவோ, தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமைக்கு எதிராகவோ, சாதிவெறியர்களை விடுவிக்கும் நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிராகவோ இப்படி தார்மீக ஆவேசத்தைக் காட்டவில்லை. எந்த தாழ்த்தப்பட்ட இயக்கமோ, தலைவர்களோ சுண்டூர் படுகொலைத் தீர்ப்பு பற்றிக் கருத்து தெரிவித்ததாக செய்திகளும் வரவில்லை. தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் சுண்டூர் தீர்ப்பை ஓர் அரசியல் பிரச்சினையாக வைத்துப் போராடவும் முன்வரவில்லை.

மேலிருந்து கீழ்வரை தாழ்த்தப்பட்ட போலீசு அதிகாரிகள் இருந்தபோதிலும், அவர்களே கயர்லாஞ்சியின் நடந்த கொடூரத்தை எப்படியெல்லாம் முடக்கினார்கள் என்று அம்பலப்படுத்துகிறார் முனைவர் ஆனந்த் தெல்தும்டே. சுண்டூரில் ரெட்டி சாதிவெறியர்களுக்கு எதிரான போராட்டம் இன்று மாலா, மடிகா என தாழ்த்தப்பட்டோரிடையே உட்பிரிவுகள் அடிப்படையில் அடையாள அரசியலால் பிளவுபட்டுப் போய், தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பல பிழைப்புவாதிகள் ஆதிக்க சாதிக் கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்து ஆதாயமடைவதில் முடிந்துள்ளது. ராம்தாஸ் அதாவலே, ராம்விலாஸ் பஸ்வான், ராம்ராஜ் என்கிற உதித்ராஜ் ஆகிய தாழ்த்தப்பட்டோரது அடையாள அரசியல் தலைவர்கள், இந்துவெறி பா.ஜ.க.வின் விசுவாசப் பிழைப்புவாதிகளாகச் சீரழிந்துள்ள கதையை ''மூன்று ராமன்களின் அனுமன் சேவை'' என்ற கட்டுரையில் முனைவர் ஆனந்த் தெல்தும்டே திரைகிழித்துக் காட்டுகிறார்.

அடையாள அரசியலானது, மற்ற சாதிகளில் பிறந்த ஜனநாயக சக்திகளை எதிர்நிலைக்குத் தள்ளுகிறது. தாழ்த்தப்பட்ட சாதியானாலும், ஆதிக்க சாதியானாலும் சாதியின் பெயரால் நடத்தப்படும் அரசியலானது, ஒருக்காலும் சாதியை ஒழிக்காது. பீகாரில் சாதிவெறியாட்டங்கள் கட்டுக்குள் இருந்ததற்குக் காரணமே அன்றைய நக்சல்பாரி புரட்சிர அரசியலும் போராட்டங்களும்தானே அன்றி, சட்டத்தாலோ, அடையாள அரசியலாலோ சாதிய ஒடுக்குமுறையைத் தடுக்க முடியவில்லை. வர்க்கப் புரட்சிக்கு மக்களை அணிதிரட்டும்போதுதான் சாதி என்பது தமது வர்க்க நலனுக்கே எதிரானது என்பதை ஆதிக்க சாதி மக்கள் உணர முடியும். தம்மிடமுள்ள ஆதிக்க சாதி கருத்தோட்டங்களைக் களைந்து கொள்ளவும் முடியும்.

இந்நிலையில் கூடுதலான சீர்திருத்தங்களாலோ, மேலும் கடுமையான சட்டங்களாலோ, அடையாள அரசியலாலோ சாதிவெறிக் கொடுமைகளுக்கு ஒருக்காலும் தீர்வு காண முடியாது. மாறாக, கெட்டித்தட்டிப் போயுள்ள இன்றைய சாதியாதிக்கச் சமுதாயத்தைத் தகர்த்தெறியக்கூடிய உழைக்கும் மக்கள் தலைமையிலான சமூக-அரசியல் புரட்சிதான் இன்றைய தேவையாக உள்ளது.

● குமார்

இது சாதிய வன்கொடுமை அல்ல என்று மும்பை உயர்நீதி மன்றத்தின் நாக்பூர் கிளையால் தீர்ப்பளிக்கப்பட்ட கயர்லாஞ்சி படுகொலையின் கோரம்.



## மே தினத்தில் சாராய விருந்து:

# முதலாளித்துவ வக்கிரத்தை முறியடித்தது பு.ஜ.தொ.மு.!




ஹூண்டாய் கார்களுக்கு ''டோர்'' தயாரிக்கும் தென்கொரிய நிறுவனம் கெஸ்டாம்ப் சுங்வூ ஹைடெக் (G.S.H). இருங்காட்டுக்கோட்டை சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைந்துள்ள இந்நிறுவனம், தொழிற்பழகுநர்களையும் ஒப்பந்தத் தொழிலாளர்களையும் சட்டவிரோதமான முறையில் உற்பத்தியில் ஈடுபடுத்தி சுரண்டிவருகிறது. சங்கம் அமைத்த காரணத்துக்காகப் பயிற்சியாளராக இருந்த 43 தொழிலாளர்களை அதிரடியாக வேலை நீக்கம் செய்து பழிவாங்கியது. ஜி.எஸ்.எச். நிறுவனத்தின் இத்தகைய தொழிலாளர் விரோதப் போக்குகளுக்கு எதிராகத் தொழிலாளர்களைச் சங்கமாக அணிதிரட்டிப் போராடி வருகிறது, பு.ஜ.தொ.மு.

இந்தப் பின்னணியில், தமது ஆலையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மே 1 அன்று கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்திருக்கும் கோல்டன் சன் ரிசார்ட்ஸில் மது விருந்துக்கு இந்நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

தொழிலாளர்களைப் பண்பாட்டு ரீதியாக சீரழிக்க முயலும் சதித்தனத்திற்கெதிராக, ''மே நாளை இழிவுப்படுத்தும் கார்ப்பரேட் முதலாளிகளின் திமிர்த்தனத்திற்குப் பதிலடி கொடுப்போம்'' என்ற முழக்கத்தின் அடிப்படையில் பிரசுரம் தயாரித்து தொழிலாளர்கள் மத்தியில் பிரச்சாரத்தை மேற்கொண்டனர் பு.ஜ.தொ.மு.வினர்.

சாராய விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்த ஜி.எஸ்.எச்.ஆலை வாயிலிலும் இப்பிரச்சாரத்தை மேற்கொண்டனர். பிரசுரம் விநியோகம் செய்துகொண்டிருந்த பகத்சிங், வீரா, எழில் உள்ளிட்ட பு.ஜ.தொ.மு. தோழர்களைத் தமது கருங்காலிகளைக் கொண்டு தாக்கியது எஸ்.ஜி.எச். நிறுவனம்.

இதனைத் தொடர்ந்து, சாராய விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்த கோல்டன் சன் ரிசார்ட்சை முற்றுகையிட்டனர், பு.ஜ.தொ.மு.வினர். தொழிலாளர்களை அழைத்து வந்திருந்திருந்த பேருந்துகளை மறித்து நின்றனர். அனுமதி வாங்காமல் மறியல் செய்கிறீர்கள் என சட்டவாதம் பேசினர் போலீசார். உலகத் தொழிலாளர்களின் அரசியல் போராட்டத்திற்கான இந்த நாளை கொச்சைப்படுத்தும் முதலாளியை எதிர்த்து போராடுவதற்கு யாரிடமும் அனுமதியைப் பெற வேண்டியதில்லை என்று தோழர்கள் பதிலடி கொடுத்தனர். ரிசார்ட்ஸ்-ஐ நோக்கி உறுதியுடன் முன்னேறியத் தோழர்களைப் போலீசார் ஆபாசமாகத் திட்டியதோடு, தாக்கவும் செய்தனர். தொழிலாளர்களுக்கு ஆதரவாக உள்ளூரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டதையடுத்து, தோழர்களைத் தனிப்பட்ட முறையில் தாக்குவதை நிறுத்திக்கொண்டு கைது செய்தனர்.

தொழிலாளர்களின் போர்க்குணமிக்க உறுதியான இப்போராட்டத்தால், ஜி.எஸ்.எச். நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த மது விருந்து முறியடிக்கப்பட்டது. தொழிலாளர்களை ஏற்றிவந்த பேருந்துகள் திருப்பியனுப்பப்பட்டன. இதன்மூலம், முதலாளிகளின் இத்தகைய வக்கிரத்துக்கு செவுளில் அறைந்து செருப்படி கொடுத்திருக்கிறது, பு.ஜ.தொ.மு.

சாராய விருந்துக்கு எதிராக பிரசுரம் விநியோகித்த தொழிலாளர்கள் மீது கொலைவெறித்தாக்குதல் நடத்திய ஜி.எஸ்.எச். நிறுவனத்திற்கு எதிராக, கடந்த மே-12 அன்று திருப்பெரும்புதூரில் கண்டன ஆர்ப்பாட்டத்தை பு.ஜ.தொ.மு.வினர் நடத்தினர்.

ஒருபாட்டில் சாராயத்துக்குத் தன்மானத்தை இழந்து விருந்தில் பங்கேற்பது இழிவானது என்பதைத் தொழிலாளர்களிடம் இடித்துரைத்ததோடு, தொழிலாளியின் போராட்டக் குணத்தை மழுங்கடிக்கும் முதலாளிகளின் இத்தகைய வக்கிரமான நடவடிக்கைககளை எதிர்த்துப் போராட வேண்டுமென்ற உந்துதலையும் ஏற்படுத்தியிருக்கிறது, பு.ஜ.தொ.மு.வின் முற்றுகைப் போராட்டம்.

– பு.ஜ.செய்தியாளர்

## மாம்பழ ஏற்றுமதி விவசாயம்:

# சிலந்தி வலையில் சிக்கிய விவசாயிகள்!

**இந்திய மாம்பழங்களுக்கு ஐரோப்பிய யூனியன் விதித்துள்ள தடை, ஏற்றுமதி விவசாயம் முதலுக்கே மோசம் செய்யக்கூடியது என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறது.**

கடந்த மே முதல் நாளிலிருந்து 31 டிசம்பர் 2015 வரை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மாம்பழம், பாவற்காய், கத்திரிக்காய், புடலை மற்றும் சேப்பங்கிழங்கு ஆகியவற்றை அய்ரோப்பிய ஒன்றிய நாடுகள் தடை செய்துள்ளன. 2013-ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட 207 சரக்கு பெட்டகங்களில் பழ ஈ இருந்ததாலும், இந்தப் பழ ஈ அய்ரோப்பிய நாடுகளில் நுழைந்தால் அந்நாடுகளின் விவசாயம் பாதிக்கும் என்பதாலும் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்று அய்ரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த அதிகாரிகள் கூறுகின்றனர். நூறாண்டுகளுக்கும் மேலாக அய்ரோப்பிய நாடுகளுக்கு இந்திய மாம்பழங்கள் ஏற்றுமதியாகியுள்ள போதிலும், தற்போதையத் தடையினால் ஏறத்தாழ ஒரு கோடியே 60 இலட்சம் மாம்பழங்களின் சந்தை வாய்ப்பை இந்திய விவசாயிகள் இழந்துள்ளனர். அய்ரோப்பிய ஒன்றியத்தின் சந்தையைக் கணக்கில் கொண்டு ஒழுங்கமைப்பட்ட இந்த மாம்பழ உற்பத்தியானது, தற்போது மீளமுடியாத சிக்கலுக்கு ஆளாகியுள்ளது.

இது போன்ற செய்தி ஒன்றும் புதிதல்ல. நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மிளகாய், பால் பவுடர், முட்டை, இறைச்சி, மக்காசோளம், சோயா, பாசுமதி அரிசி, திராட்சை, தேன், வேர்க்கடலை போன்ற உணவு மற்றும் விவசாய பொருட்களுக்கு ஏகாதிபத்திய நாடுகள் தடை போடுவதென்பது பல ஆண்டுகளாகவே நீடித்து வருகிறது. 2012-இல் ஜப்பான் இந்திய மாம்பழத்தைத் தடை செய்தது. அய்ரோப்பிய ஒன்றியம் கடந்த நான்கு ஆண்டுகளாக இந்தியத் திராட்சையைத் தடை செய்திருந்தது.

உணவுப் பொருட்களுக்கான சரக்குப் பெட்டகங்களது எஃக்கின் தரம், பூசப்பட்டுள்ள பெயிண்ட்டில் கலந்துள்ள வேதியியல் பொருட்களின் வீரியம் முதலானவற்றை வைத்து அவை நீலம், பச்சை, ஆரஞ்சு - என தரத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன . தரமான சரக்குப் பெட்டிகளில் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படவில்லை என்று காரணம் காட்டி, கடந்த 2005 -ஆம் ஆண்டு மே மாதத்தில் மட்டும் அமெரிக்கா 251, கனடா 239, மெக்சிகோ 200, அய்ரோப்பிய ஒன்றியம் 16 - என இந்திய உணவு மற்றும் விவசாயப் பொருட்களைக் கொண்ட பெட்டகங்கள் நிராகரிக்கப்பட்டு, அப்படியே கடலில் கொட்டப்பட்டன. இவ்வாறு ஜப்பான், அமெரிக்கா, அய்ரோப்பிய ஒன்றியம் ஆகிய ஏகாதிபத்திய நாடுகள் இந்தியா போன்ற ஏழை நாடுகளின் பொருட்களை உள்ளே விடாமல் நிராகரிப்பதில் முன்னணியில் உள்ளன.

மறுபுறம், அடிப்படை உணவுகளான அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், காய்கறிகள், எண்ணெய் வித்துகளை உற்பத்தி செய்யும் பாரம்பரிய விவசாயத்திலிருந்து மாற்றுபயிர் விவசாயத்திற்கு விவசாயிகளை இழுத்துச் செல்கிறது இந்திய அரசு. கூடுதல் பொருளாதார மதிப்பு கொண்ட விவசாயப் பயிர்களை உற்பத்தி செய்யுமாறு விவசாயிகளுக்கு வழிகாட்டி, இதை அமல்படுத்த இந்திய அரசு பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. இதற்காகத்

ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடையால் அல்போன்சா மாம்பழங்களை ஏற்றுமதி செய்ய முடியாத நிலையை எதிர் கொண்டுள்ள மும்பையைச் சேர்ந்த மொத்த வியாபாரிகள்.



தேசிய தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் (National Horticultural Mission - NHM) முன்வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக ஏற்றுமதியைக் குறிவைத்து பழப் பயிர்கள், காய்கறிகள், பூக்கள், நறுமணப் பயிர்களைப் பயிரிடுமாறு விவசாயிகளை அரசு ஊக்கப்படுத்துகிறது. இத்தகைய சந்தைக்கான உற்பத்தியை மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும் என்றும் அரசு கூறுகிறது. இந்த அடிப்படையில் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்யப்பட்டவைதான் இந்திய மாம்பழங்கள். ஆனால், அதுவும் இப்போது தடை செய்யப்பட்டு விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.



“ஏற்றுமதிக்கான உற்பத்தியை மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும் என்று அரசு கூறுகிறது. இந்த அடிப்படையில் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்யப்பட்டவைதான் இந்திய மாம்பழங்கள். ஆனால், அதுவும் இப்போது தடை செய்யப்பட்டு விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.”

1995-இல் உருவாக்கப்பட்ட உலக வர்த்தகக் கழகம் (WTO), நாடுகளுக்கு இடையில் நடக்கும் ஏற்றுமதி - இறக்குமதியை நெறிமுறைப்படுத்துவது என்ற பெயரில் ஏகாதிபத்தியங்களால் முன்வைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இதில் உறுப்பினராக உள்ள இந்தியா உள்ளிட்ட நாடுகளால் கையெழுத்திடப்பட்ட சட்டத்தைக்கொண்டு உலக வர்த்தகத்தை இக்கழகம் நெறிப்படுத்துகிறது. தற்போது 159 நாடுகளை உறுப்பினராகக் கொண்டுள்ள இக்கழகம், உலகாளவிய விவசாயப் பொருட்களின் ஏற்றுமதி-இறக்குமதியைக் கட்டுப்படுத்த ‘‘விவசாய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (Agreement on Agriculture)’’ உருவாக்கிக் கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில், உள்நாட்டுச் சந்தையைத் திறத்தல் , ஏற்றுமதிக்கான மானியத்தை ஒழுங்கமைத்தல், உற்பத்திக்கான உள்நாட்டு மானியத்தை வெட்டுவதைப் பற்றிய விதிகள், சுகாதாரம் மற்றும் தாவர சுகாதார விதிகள் (Sanitary and phyto sanitary regulations) மற்றும் நாடுகளுக்கிடையிலான வர்த்தகத் தகராறுகளைத் தீர்ப்பதற்கான பற்றிய புரிந்துணர்வு ஆகிய ஐந்து அம்சங்கள் அடங்கியுள்ளன.

இந்த ஒப்பந்தப்படி ஏகாதிபத்திய நாடுகள் தங்களது உள்நாட்டுச் சந்தையைப் பாதுகாக்கப் போடப்பட்டிருக்கும் சுங்கவரியை 36 சதவீதமும், ஏழை நாடுகள் 24 சதவீதமும் குறைக்க வேண்டும். மேலும், சுங்க வரியைத் தவிர இதர வர்த்தகத் தடைகளும் நீக்கப்பட வேண்டும். ஏழை நாடுகள் -ஏகாதிபத்திய நாடுகள் என்ற பாரபட்சமின்றி ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் நாட்டில் 1986 -88ல் கொடுக்கப்பட்ட மானியச் சலுகைகளை அடிப்படையாகக் கொண்டு உற்பத்திக்கான உள்நாட்டு மானியம், ஏற்றுமதிக்காகக் கொடுப்படும் மானியம் முதலானவற்றையும் குறைக்க வேண்டும். இவற்றை 2000 மற்றும் 2004-ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்ற வேண்டும் என்பதே உலக வர்த்தகக் கழகம் உருவாக்கியுள்ள விதியாகும்.

இந்தியா போன்ற ஏழை நாடுகள் விவசாய பொருட்கள் உற்பத்திக்கோ அல்லது ஏற்றுமதிக்கோ 1986-88இல் கொடுத்த மானியம் என்பது மிகவும் குறைவு. ஆனால், ஏகாதிபத்திய நாடுகள் கொடுத்த மானியமோ மிகவும் அதிகம். ஒரு லிட்டர் பால் உற்பத்திக்கு ஆகும் செலவில் 90 சதவீதத்தை 1986-88 இல் ஜப்பானிய வல்லரசு விவசாயிகளுக்கு மானியமாகக் கொடுத்தது. மறுபுறம், தனது சந்தையைப் பாதுகாத்துக் கொள்ள ஏழை நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வெண்ணெய்க்கு 500 சதவீத அளவுக்கு சுங்க வரி விதித்தது. அமெரிக்கா, அய்ரோப்பிய ஒன்றியம் முதலான ஏகாதிபத்திய நாடுகளிலும், கனடா, ஆஸ்திரேலியா முதலான வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் ஏறத்தாழ இதே நிலைமைதான் இருந்தது.

உலக வர்த்தக விதியின்படி, விவசாய மானியத்தைக் குறைக்கச் சொல்லி ஏழை நாடுகளை நிர்பந்தித்துவந்த அமெரிக்க அரசோ, தான் வழங்கும் மானியத்தில் சல்லிக்காசு கூடக் குறைக்கவில்லை. அமெரிக்காவில் 1996 -2010க்கும் இடைப்பட்ட காலத்தில் விவசாயத்திற்கான உள்நாட்டு மானியம் 61 லிருந்து 130 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க அரசு 2010-ஆம் ஆண்டில் விவசாயத்திற்கு வழங்கிய மானியம், 1995-ஆம் ஆண்டை ஒப்பிடும்பொழுது இருமடங்காக, 13,000 கோடி அமெரிக்க டாலர்களாக அதிகரித்திருக்கிறது. அமெரிக்காவும் அய்ரோப்பிய ஒன்றியமும் கடந்த பத்தாண்டுகளில் விவசாயத்திற்கு வழங்கப்படும் மானியத்தைக் குறைத்துக் கொள்ளவில்லை என்பதோடு, அந்நாடுகள் நேரடி மானியத்தை மறைமுக மானியப் பட்டியலுக்குக் கொண்டு சென்று தப்பித்துக் கொள்ளும் தந்திரத்திலும் ஈடுபட்டன. மறுபுறம், ஏழை நாடுகளின் உணவுச் சந்தையை ஏகாதிபத்திய நாடுகள் கொள்ளையிடுவதற்கான ஏற்பாடாகவே தோஹாவிலும் அண்மையில் பாலியிலும் நடந்த உலக வர்த்தகக் கழக மாநாடுகள் அமைந்தன.

இவற்றையெல்லாம் தாண்டி ஏகாதிபத்திய நாடுகளின் சந்தைக்குள் இந்தியாவின் விவசாய பொருட்கள் நுழைந்தால் என்ன நடக்கும் என்பதற்கான உதாரணம்

தான் மாம்பழ ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை. மனிதர்கள், விலங்குகள் மற்றும் தாவர உயிர்களுக்கு ஒவ்வாத வேதியியல் பொருட்கள் மற்றும் நோய் உருவாக்கும் கிருமிகளிடமிருந்து காத்துக்கொள்ள ஒவ்வொரு ஏற்றுமதி பொருளிலும், உயிர்களுக்கு ஒவ்வாத பொருட்கள் மற்றும் நோய் கிருமிகளின் அளவுகள் அதிகபட்சமாக எவ்வளவு அனுமதிக்கப்படலாம் என்பது உலக வர்த்தக கழகத்தின் சுகாதாரம் மற்றும் தாவர சுகாதார விதிகளின்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த விதிகளின் அடிப்படையில்தான் ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்து மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும்.



இந்திய மாம்பழ இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடைக்கு எதிராக ஊடகங்களுக்குப் பேட்டியளிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினரான கெய்த் வாஸ்-உடன், பிரிட்டனிலுள்ள அல்போன்சா மாம்பழ இறக்குமதியாளர்கள்.

இவ்விதிகள் உயிரினங்களை நேசிப்பதற்கான சட்டமாகத் தோற்றமளிக்கலாம். ஆனால் இந்த விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும் என்று அவசியமில்லை; ஒவ்வொரு நாடும் தமது உள்நாட்டின் தனிச்சிறப்பான தேவைக்கேற்ப விதிகளை உருவாக்கிக் கொள்ளலாம் என்று ஏகாதிபத்தியவாதிகளின் நோக்கத்துக்கு ஏற்ப உலக வர்த்தகக் கழகம் கூறுகிறது. அதாவது, உலக வர்த்தகக் கழகத்தால் உருவாக்கப்பட்ட பொதுவான விதிகளைப் பின்பற்றாமல், ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டிற்கு ஏற்ப புதிய விதிகளை உருவாக்கிக் கொள்ளலாம். இந்த விதிகளைக் கொண்டுதான் இந்திய மாம்பழத்தைத் தடை செய்தது அய்ரோப்பிய ஒன்றியம். இதுவும் கூட சிலருக்கு நியாயமானதாகத் தோன்றலாம். ஆனால் விசயம் என்னவென்றால், மேலைநாடுகள் உருவாக்கும் சுகாதாரம் மற்றும் தாவர சுகாதார விதிகள் என்றும் நிலையாக இருந்தில்லை.

சுகாதாரம் மற்றும் தாவர சுகாதார விதிகளுக்கு ஏற்ப விவசாயத்தை ஒழுங்கமைத்து நாம் பயிரிடும் பொழுது ஒரு விதி இருக்கும்; அறுவடை செய்யும் பொழுது இன்னொரு விதி; சரக்கு கப்பலில் ஏற்றி கொண்டுபோய் சேர்க்கும்பொழுது இன்னொரு புதிய விதி - என அவ்வப்போது புதுப்புது விதிகளை உருவாக்கி ஏழை நாடுகளிலிருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதியாவதை ஏகாதிபத்திய நாடுகள் திட்டமிட்டே தடுத்து வருகின்றன. இதனால் புலி வாலைப் பிடித்தவன் கதையாக ஏற்றுமதியை நம்பி விவசாயம் செய்த விவசாயிகள் நிலை குலைந்து போவது தொடர்கதையாகிவிட்டது.

இந்த விதிகளின் உள்நோக்கமே இந்தியா போன்ற ஏழை நாடுகளின் பொருட்கள் ஏகாதிபத்திய நாடுகளில் நுழைந்துவிடக்கூடாது என்பதுதான். ஏற்கெனவே சூப்பர் 301 சட்டத்தை அமெரிக்கா வகுத்துக் கொண்டு தனது சந்தைக்கு காப்புநிலையை ஏற்படுத்திக் கொண்டதைப் போலத்தான் இத்தகைய விதிகள் அடுத்தடுத்து உருவாக்கப்படுகின்றன. திருப்பூரில் உற்பத்தியாகும் பனியன்கள் குழந்தைத் தொழிலாளர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவை என்று ஏகாதிபத்திய நாடுகள் இறக்குமதி செய்வதற்குக் கெடுபிடிகளைக் காட்டியதைப் போலவே, இந்தியாவின் உணவு மற்றும் விவசாயப் பொருட்களை இறக்குமதி செய்வதிலும் புதுப்புது நிர்ப்பந்தங்களை உருவாக்குகின்றன. கடைசியில், ஏற்றுமதிக்கான விவசாயத்தின் மூலம் இந்திய விவசாயிகள் மேலும் நட்டமடைவதுதான் நடந்துள்ளது. மதிப்புக் கூட்டப்பட்ட விவசாயப் பொருட்கள், உணவுப் பதப்படுத்தல் முதலானவற்றின் மூலம் தனியார் முதலாளிகள் மேலும் சலுகைகளையும் மானியங்களையும் பெற்று ஆதாயமடைந்துள்ளார்களே தவிர, விவசாயிகளுக்கு நியாயமான கொள்முதல் விலை கூட இதன் மூலம் கிடைக்கவில்லை.

உலக வர்த்தக கழகம் என்பதே உண்மையான, நியாயமான, சுதந்திரமான உலக வர்த்தகத்திற்காக உருவாக்கப்பட்டதல்ல. ஏகாதிபத்திய நாடுகள் தங்களது சந்தையைப் பாதுகாத்துக் கொண்டே ஏழை நாடுகள் மீது தங்களுடைய வர்த்தக மேலாண்மையை நிலைநாட்டிக் கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டதுதான் உலக வர்த்தகக் கழகம். எனவே, ஏகாதிபத்திய நாடுகளின் நலனுக்காக உருவாக்கப்பட்ட உலக வர்த்தகக் கழகத்திலிருந்து இந்திய அரசு வெளியேறுமாறு விவசாயிகள் போராடுவதும், உள்நாட்டுச் சந்தையைப் பாதுகாத்து, நியாயமான பரஸ்பர நல்லுறவுகளின் அடிப்படையில் புதியதொரு உலக வர்த்தக ஒப்பந்தத்தை உருவாக்குவதன் மூலம் மட்டுமே இந்திய விவசாயிகள் இந்த நச்சுச் சுழலிலிருந்து விடுபட முடியும்.

● சுடர்

# பிழை திருத்தம்

கடந்த மே-2014 இதழில் வெளியாகியிருந்த ஆம்-ஆத்மி, குடிமை சமூகங்கள் பற்றிய கட்டுரையின் தலைப்பு ‘‘ஆம் ஆத்மி - சிறப்பு இரகசியம்’’ என்றிருப்பதை **‘‘ஆம் ஆத்மி - பிறப்பு இரகசியம்’’** எனத் திருத்தி வாசிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம். எமது கவனக்குறைவால் நேர்ந்துவிட்ட இப்பாரதூரமான தவறுக்கு சுயவிமர்சனம் ஏற்றுக் கொள்கிறோம். மேலும், அக்கட்டுரையின் தொடர்ச்சி தவிர்க்கவியலாத காரணங்களால் இவ்விதழில் இடம்பெறவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

திற்கும் மேற்பட்ட விசைத்தறிகள் முடக்கப்பட்டன. விசைத்தறி உரிமையாளர்களும், விசைத்தறித் தொழிலை நம்பியிருக்கும் கூலித்தொழிலாளர்களுமாக 15 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் நடுத் தெருவுக்குத்தள்ளப்பட்டனர். கஞ்சித்தொட்டிகள்திறக்கப்பட்டன. இவையனைத்தும் நாடாளுமன்றத் தேர்தல் கூச்சலில் மறைக்கப்பட்டன.



இது ஒருபுறமிருக்க, பவர்லூம், சுல்ஜர் தறி, ஜெட்தறி என பிரம்மாண்டமான பெருவீதத் தறிக் கூடங்களை கார்ப்பரேட் முதலாளிகள் அமைத்துக் கொள்வதற்கு தாராள அனுமதி வழங்குவதன் மூலம் சிறிய அளவிலான கைத்தறி, விசைத்தறிகள் ஒழித்துக் கட்டப்படும் அபாயத்தையும் எதிர்கொண்டிருக்கிறது.

இந்நிலையில், கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், கரூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த புரட்சிகர அமைப்புகள் இணைந்து விசைத்தறி - கைத்தறி உட்பட சிறு தொழில்களை விழுங்க வரும் கார்ப்பரேட் முதலாளித்துவத்துக் கும்பலுக்கு எதிராக பல்லடம் மற்றும் சுற்றுவட்டாரக் கிராமங்களில் பிரச்சாரங்களை மேற்கொண்டதுடன், கோவையில் மே தின ஆர்ப்பாட்டத்தையும் நடத்தின. முதலில் பேரணி, ஆர்ப்பாட்டத்திற்கான அனுமதியை போலீசார் மறுத்தனர். தடையை மீறி நடத்துவோம் என்றதும் ஆர்ப்பாட்டத்திற்கு மட்டும் அனுமதி வழங்கினர். எனினும், ஆர்ப்பாட்டத்தில் ஒலிப்பெருக்கிப் பயன்படுத்துவதற்குக்கூட அனுமதி மறுத்து அடாவடி செய்தனர்.

தேவாரம் அம்பரப்பர் மலைப் பகுதியில் மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி அரைகுறை விவசாயத்தையும் அழித்து நியூட்ரினோ ஆய்வு மையம் அமைக்கப்படுவதற்கெதிராக தேனி, மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த வி.வி.மு., அதன் தோழமை அமைப்புகளான ம.க.இ.க., பு.மா.இ.மு. மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்துடன் இணைந்து சுற்றுவட்டாரகிராமங்களில் பிரச்சாரத்தை மேற்கொண்டன. இதனைத் தொடர்ந்து, தேனி மாவட்டம் ராசிங்காபுரத்தில் தொடங்கி சுற்றுவட்டாரகிராமங்களின் வழியாகப் பேரணியாகச் சென்று இறுதியில் தேவாரத்தில் மே தின ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

திருவண்ணாமலையில், வேடியப்பன் மலையை ஜின்டாலுக்குத் தாரைவார்க்கும் திட்டத்தை எதிர்த்து விழுப்புரம் மாவட்ட வி.வி.மு., கடலூர் மாவட்ட பு.மா.இ.மு., திருவண்ணாமலை மாவட்ட ம.உ.பா.மையம் ஆகிய அமைப்புகள் இணைந்து இம்மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு பகுதிகளில் மக்களுடன் தங்கி கிராமப் பிரச்சாரங்களை மேற்கொண்டனர். இதன் தொடர்ச்சியாக, மே-1 அன்று திருவண்ணாமலையில் வனத்துறை அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்தினர்.

டெல்டா மாவட்டங்களில் மீதேன் எடுப்புத் திட்டத்திற்கு எதிராக, தஞ்சை, திருச்சி, திருவாரூர், நாகை மாவட்டங்களைச் சேர்ந்த ம.க.இ.க., பு.மா.இ.மு., பெ.வி.மு. பு.ஜ.தொ.மு. தோழர்கள் இணைந்து, தஞ்சையிலுள்ள ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பொரேசன் அலுவலகத்தை மே நாளன்று முற்றுகையிடும் போராட்டத்தை நடத்தினர். இம்முற்றுகைப் போராட்டத்தில் மீத்தேன் எடுப்புத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஊக்கமுடன் பங்கேற்றனர். முன்னதாக, கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாக, தஞ்சை, பட்டுக்கோட்டை, திருவாரூர், நாகை உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமங்களில் மீத்தேன் எடுப்புத் திட்டத்தின் பாதிப்புகளை விளக்கியும், தேர்தல் பாதை இப்பிரச்சினையைத் தீர்க்காது, மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலம்தான் முடிவுகட்ட முடியும் என்பதை விளக்கியும் விரிவான அளவில் பிரச்சாரத்தை மேற்கொண்டிருந்தனர்.

தொழிலாளி வர்க்கம் அரசியல் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கான உரிமையைக் கூட வழங்க மறுத்து வருகிறது மறுகாலனியாக்கம். இதற்கு ஏற்றாற் போல, பேரணி - ஆர்ப்பாட்டங்களை நடத்தி பெயரளவிற்காவது மே தினத்தைக் கடைபிடித்து வந்த போலி கம்யூனிஸ்டுகள், முக்கிய தொழில்நகரங்களில் கூட மே தினத்தைக் கடைபிடிக்காமல், ஆலைவாயில்கள், சங்க அலுவலகங்களில் கொடியேற்றி வைப்பதோடு கடமை முடிந்ததென நழுவிக் கொள்கின்றனர்.




இத்தகையப் பின்னணியில் தான் தமிழகத்தின் ஒன்பது மையங்களிலும் போலீசின் மிரட்டல்களையும், தடைகளையும் எதிர்கொண்டு போர்க்குணமான முறையில் இப்புரட்சிகர அமைப்பினர் மே தினப் போராட்டங்களை நடத்தியிருக்கின்றனர்.

- பு.ஜ. செய்தியாளர்கள்

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14

# இலங்கை ராஜபக்சேவுக்கு இந்திய ராஜபக்சேவின் வரவேற்பு!

## – மோடியின் முகத்திரை கிழிக்கும் ஆர்ப்பாட்டங்கள்

- முதல்நாளே கழண்டுவிட்டது இந்துத்துவ மோடியின் முகமூடி!
- ஈழத்தமிழின அழிப்புக் குற்றவாளி ராஜபக்சேவுக்கு இந்திய ராஜபக்சே மோடியின் அழைப்பு எதிர்பாராதது அல்ல! வைகோ வகையறாக்கள் காட்டும் எதிர்ப்புதான் நாடகம்!
- பார்ப்பன பாசிசக் கும்பலை தமிழகத்திலிருந்து விரட்டியடிப்போம்!
- தமிழின விரோத பா.ஜ.க.வைத் தமிழர்களின் காவலனாகச் சித்தரித்த வை.கோ, நெடுமாறன் கும்பல் ஆர்.எஸ்.எஸ்..இன் அய்ந்தாம்படையே!
- வை.கோ., விஜயகாந்த், ராமதாசு, பாரிவேந்தர் உள்ளிட்ட பிழைப்புவாதிகள் தமிழ் மக்களின் விரோதிகளே!












**ம.க.இ.க. | வி.வி.மு. | பு.மா.இ.மு. | பு.ஜ.தொ.மு. | பெ.வி.மு.**